மே

௬உ முதல்

ஜூபிடர்

அபிமன்யு

மாகாணம்
முழுவதும்
ஆரம்பம்

TWIN POWER



அறிவிப்பு!

மைசூர் சமஸ்தானம், கன்னடப் பிரதேசங்களி லுள்ள எங்களது வாடிக்கைக்காரர்களுக்கும் பொது மக்களுக்கும், எமது பெங்களூர் கிளை ஆபிசை **143, காந்தி நகர், பெங்களூர் ஸிடி** என்னும் விலாஸத்தில் 16-4-48 முதல் ஆரம்பித்துள்ளோம் என்பதை மிக்க மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இனி, மேற்கண்ட பிரதேசங்களிலுள்ளவர்கள் எங்களது பெங்களூர் கிளை ஆபிஸுடன் கடிதப் போக்குவரத்து நடத்திக்கொள்ளக் கோருகிறோம்.

*

ராயல் டாக்கீ டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ்

120, தெற்கு மாசி வீதி :: மதுரை


அவன் மாமியார்:—
“இவர் பற்கள் குற்றமற்றவை”
என்று மகிழ்ந்தாள்
அவன் பல்வைத்தியர்:—
“நீ இப்பற்களை எல்லாம் இழக்கவேண்டியது தான்” என்றார்
உங்கள் பற்கள் இப்பொழுது குற்றமற்றவையாயிருந்தாலும் ஈறு வியாதிகள் ஏற்படவிட்டீர்களானால் அவைகளை நீங்கள் இழக்க நேரிடும். பற்களை கவனிப்பதுபோலவே ஈறுகளையும் கவனிக்க வேண்டும். தினமும் எஸ். ஆர். டூத்பேஸ்ட் இரண்டு மூன்று தடவை உபயோகியுங்கள். இதில் ஈறுகளை உறுதியாக்கி ஆரோக்யமுறச் செய்ய பல்வைத்தியர்கள் உபயோகிக்கும் ஸோடியம் ரிஸினோலியேட் அடங்கியுள்ளது. அன்றியும் எஸ். ஆர். டூத்பேஸ்ட் பற்களை பளிச்சென்று சுத்தமாகவும் வெண்மையாகவும் வைத்துக்கொள்கிறது.
உங்கள் பற்களைக் காப்பாற்ற
ஈறுகளை பாதுகாத்துக்கொள்ளுங்கள்
சிப்ஸ்
எஸ். ஆர். டூத்பேஸ்ட்
S.R.
FOR TEETH AND GUMS
GSR. 47-50-40 TM

கல்கி

பொருளடக்கம்

மலர் 7 இதழ் 40 | மே 2 | சர்வதாரி சித்திரை 20

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

இன்ப நிலையம்
புத்தகம் வெளியிடுவோர்.

தியாகராயநகர் - சென்னை
21—4—48

அன்புடையீர், கடந்த பல மாதங்களாக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த 'சிவகாமியின் சபதம்' புத்தக உருவில் வெளிவந்த செய்தி அறிந்ததும் ஆளனுப்பி வாங்கி வரச் செய்து கண்குளிரக் கண்டு களித்தேன். இதுவரை வெளி வராத இனியும் இதே போல் வெளிவர முடியாத அளவுக்கு, தமிழ்க் கலைக் களஞ்சியமாக — கண்ணையும் கருத்தையும் கவரும் விதத்தில் 'சிவகாமியின் சபதம்' நூல் அமைந்திருக்கிறது. தமிழரின் கலை வாழ்வு உலக மக்களால் மீண்டும் பாராட்டப்பட வேண்டுமென ஆசைப்படும் என் போன்றாருக்கு உறுதி கூறுவது போலிருக்கிறது 'சிவகாமியின் சபதம்' நூலமைப்பு; இது தமிழ் மக்களின் அதிர்ஷ்டம்.




ஒரு புத்தகப் பதிப்பக நிர்வாகி என்ற முறையில் 'சிவகாமியின் சபதம்' நூலின் விலையைப் பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். இதே புத்தகத்தை வேறொரு பதிப்பகத்தார் வெளியிட்டால் குறைந்தது ரூ. 20 வரை விலை வைப்பார்கள். அப்போதுதான் அவர்களுக்கு நஷ்ட மில்லாதிருக்கும். தங்களுக்கு ஏற்கனவே உள்ள வசதிகளைக் கொண்டு குறைந்த விலையில் மிகவும் அழகாக, சிறந்த நூலை வெளியிட்டுத் தமிழ் மக்களுக்கு அளித்ததற்காக மனமார வாழ்த்துகிறேன். வாழ்க தமிழ் மொழி!

சோம. சுவாமிநாதன்

ஆயிரத்துக்கு மேற்பட்ட பக்கங்களும் அழகிய பல வர்ணப் படங்களும் கொண்ட 'சிவகாமியின் சபத'த்திலுள்ள ஒரு வர்ணப்படம்தான் இந்த வாரக் 'கல்கி' அட்டையை அலங்கரிக்கிறது.

பரிசுப் பதிப்பு விலை ரூ. 15—0—0. மலிவுப் பதிப்பு விலை ரூ. 9—0—0
தபால் செலவு ரூ. 1—0—0.

மானேஜர், 'கல்கி' :: கீழ்ப்பாக்கம், சென்னை



சிந்தாதிரிப்பேட்டை ஹைஸ்கூலின் நூற்றாண்டு விழா ஆறு மாதங்களுக்கு முன்னால் ஆரம்பமாகி அமோகமாக நடந்து சென்ற 20-4-48ல் சிறப்பான மங்களத் திருநாளுடன் முடிவுற்றது. மேலே:—திருவிழாக் கமிட்டித் தலைவர் ராவ்பகதூர் சி. ஆர். கணபதிப் பிள்ளை அவர்களும், காரியதரிசி ஆசிரியர் டி. பி. மீனாக்ஷி சுந்தரனார் அவர்களும் பிரதம மந்திரி ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களை வரவேற்கின்றனர். கீழே:—சென்னை நகரிலுள்ள மற்றும் பல உயர்தரப் பள்ளி ஆசிரியர்களும் தலைமை ஆசிரியர்களும் விஜயம் செய்து திருவிழாக் கொண்டாடக் கூடியிருந்த மாபெரும் சபையை அலங்கரித்தார்கள்.



கல்கி

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார். | இதழ் 40

என்ன செய்தி?

டாக்டர் சண்முகம்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஸ்ரீ ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களுக்கு 'டாக்டர்' பட்டம் அளித்துச் சிறப்பித்ததைப் பெரிதும் பாராட்டுகிறோம். ஸ்ரீ ஆர். கே. சண்முகம் இலக்கியத் துறையிலும் ஆராய்ச்சித் துறையிலும் சிறப்பிக்கப்படுவதற்கு எல்லா வகையிலும் உரியவராவார். ஸ்ரீ சண்முகம் செட்டியார் அவர்களைச் சிறப்பித்ததினால் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் சிறப்படைந்திருக்கிறது.

ஆனாலும் ஒரு விஷயம். நம் நாட்டுப் பெரியோர்களையும் அறிஞர்களையும் மேதாவிகளையும் கௌரவிப்பதற்கு நம்முடைய சர்வ கலாசாலைகள் கூடிய சீக்கிரத்தில் வேறு ஒரு பட்டத்தை,—இந்த நாட்டின் பழம் பெருமைக்கும் பண்பாட்டுக்கும் உரிய பட்டத்தை,—கண்டு பிடித்தாக வேண்டும். 'டாக்டர்' என்னும் மேனாட்டுக்குரிய பட்டத்தைக் கட்டிக் கொண்டு எத்தனை காள் நாம் தொல்லைப் படுவது? அரசியல் துறையில் 'ஸர்', 'திவான்பகதூர்' பட்டங்கள் அடைந்த கதியை இலக்கியத் துறையிலும் ஆராய்ச்சித் துறையிலும் டாக்டர் பட்டம் அடைய வேண்டியது தான் முறை. அதிலும் நம் நாட்டு மக்களின் மனோபாவத்தில் 'டாக்டர்' என்றால் வைத்தியர் தான் முன்னால் நிற்கிறார். "டாக்டர் சண்முகம் செட்டியார்" என்றதும், நம் கிராமவாசிகள் "அவர் என்ன ஆயுர்வேத டாக்டரா? இங்கிலீஷ் வைத்தியரா?" என்று கேட்கக் கூடும் அல்லவா? சுதந்திர இந்தியாவிலும் சுதந்திரத் தமிழ் மாகாணத்திலும் இலக்கியத் துறை — ஆராய்ச்சித் துறை மேதாவிகளைக் கௌரவிக்க வேறு பட்டங்களைக் கண்டு பிடிக்க வேண்டும்.



டாக்டர் ஆர். கே. சண்முகம்

மதுரைத் தியாகிகள்

சுதந்திரப் போரில் தியாகம் செய்தவர்களுக்கு ஐந்து ஏக்கரா நிலம் கொடுப்பதாகச் சென்னை சர்க்கார் முன் வந்தார்கள். அதற்குப் பல நிபந்தனைகள் போட்டு, பல தேதிகள் குறிப்பிட்டு, வலது கையால் கொடுப்பதாகப் பாசாங்கு செய்து, இடது கையால் அதைத் தடுத்து, — இவ்வளவு இலட்சணமாகக் காரியத்தை நடத்தி வருகிறார்கள். சர்க்கார் செய்கிற அல்லது செய்யப்போவதாகச் சொல்கிற உதவி எவ்வளவு அற்பமானது என்பதை நமக்கு உணர்த்தக் கூடியதாக ஒரு பிரசுரம் சென்ற வாரத்தில் வெளியாகியிருக்கிறது. "மதுரை ஜில்லா தியாகிகள் மலர்" என்பது அதன் பெயர். அதைப் பார்த்தால், "அடடா! எத்தனை எத்தனை பேர் எவ்வளவு தியாகங்களைச் செய்து எப்பேர்ப்பட்ட கடுந் தவங்கள் புரிந்து எப்படி எப்படி யெல்லாம் பாடுபட்டுப் பட்டினி கிடந்து உயிரையும் விட்டு இந்தப் பாரத தேசம் சுதந்திரம் பெற்றிருக்கிறது!" என்று வியப்பு உண்டாகும். மதுரை ஜில்லாவின் மண்ணில் தேச பக்திக்கும் தியாகத்துக்கும் உரிய ஏதோ ஒரு சக்தி இருந்து அங்கே அளவில்லாத தியாகிகளை உற்பத்தி செய்திருப்பதும் மற்ற ஜில்லாத் தியாகிகளை அங்கே கொண்டு வந்து சேர்த்திருப்பதும் உண்மை தான். என்றாலும் மதுரையில் பாதிக்குப் பாதி விகிதமாவது மற்ற ஜில்லாக்களிலும் தியாகிகள் தோன்

நிந்தானே இருப்பார்கள்? அவர்கள் எல்லாம் யார் யாரோ? ஊர் என்னவோ? பெயர் என்னவோ? இப்படி இந்திய தேசம் முழுவதிலும் சென்ற முப்பது ஆண்டில் தோன்றிய தியாகிகள் எண்ணிக்கைக்கு அடங்குவார்களா? அவர்களுக் கெல்லாம் யார் என்ன பிரதி உபகாரம் செய்ய முடியும்? தேசத் தொண்டுக்குப் பிரதிபலன் தேசத் தொண்டுதான். தியாகத்தின் பிரதிபலன் தியாகம் செய்தோம் என்னும் திருப்தி தான். வேறு எதுவும் தியாகத்துக்கு ஈடான பரிசு ஆக முடியாது!......இம்மாதிரி பல எண்ணங்கள் "மதுரை ஜில்லா தியாகிகள் மல"ரைப் பிரித்துப் புரட்டி வரும்போது யாருக்கும் தோன்றவே செய்யும். பெரு முயற்சி செய்து இந்த மகத்தான "மதுரை ஜில்லா தியாகிகள் மலர்" என்னும் பிரசுரத்தை வெளியிட்டிருக்கும் ஸ்ரீ ரெ. சிதம்பர பாரதி, ஸ்ரீ ரெ. சீனிவாசவரதன் ஆகிய இரு பெரும் தேசபக்தர்களுக்கு நமது மனமார்ந்த வாழ்த்துக்கள். பிரசுரத்தின் விலை ரூ. 3-8-0. விலாசம்: சுதந்திரப் பிரசுராலயம், மதுரை.

சிவ பூஜையில் கரடி!

"காங்கிரஸ் வாதிகளையும் சோஷலிஸ்டுகளையும் போல் தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் ஒரு தனிக் கட்சியாகத் தங்களைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்து அரசியல் அதிகாரத்தையும் கைப்பற்றினால் தான் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கதிமோட்சம் அடைய முடியும். காங்கிரஸில் நாம் சேருவதால், நம்முடைய விரோதிகளின் பலம்தான் அதிகமாகும்" என்று டாக்டர் அம்பேத்கார் கூறுகிறார். காங்கிரஸ் சர்க்காரில் மந்திரி பதவி வகிக்கும் அவருக்குக் காங்கிரஸையே கண்டிப்பதற்குச் சுதந்திரம் இருப்பதைக் காட்டிலும் காங்கிரஸ் சர்க்காரின் பெருந்தன்மைக்கும் சகிப்புத்தன்மைக்கும் வேறென்ன உதாரணம் வேண்டும்?

முன்பு காங்கிரசுக்கு விரோதியாக இருந்தவர்களை நம் தலைவர்கள் இன்று விரோதிகளாகக் கருதாததுடன், அவர்களுக்கு மிகுந்த கௌரவமும் பொறுப்பும் வாய்ந்த பதவிகளையும் அளித்திருக்கிறார்கள். ஜனநாயக முறையிலே பிறந்து வளர்ந்த பிரிட்டன், அமெரிக்கா முதலிய தேசங்களில் கூட அதிகாரத்தை ஏற்கும் ஒரு கட்சியினர், தங்களுக்குப் பூரண மெஜாரிட்டி இருக்கும் பட்சத்தில், பிற கட்சியினருக்குப் பொறுப்புள்ள பதவிகளில் இடமே கொடுக்க மாட்டார்கள். ஆனால் இந்தியாவில் காங்கிரஸ் சர்க்காரோ வெனில், தேசத்தின் ஐக்கியம் ஒன்றையே முக்கியமாகக் கருதி, கட்சி பேதங்களை மறந்து, மந்திரி சபையில் எல்லோருக்கும் இடம் அளித்தது ஜனநாயகத்தின் சிகரமாக விளங்குகிறது.

எனினும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் உரிமைகளுக்காக மகாத்மா காந்தியும் காங்கிரசும் கால் நூற்றாண்டுக்கு மேலாகப் போராடி வெற்றியும் பெற்றிருக்கும்போது, காங்கிரஸில் சேருவதால் அந்த வகுப்பினருக்கு யாதொரு பயனும் ஏற்படாதென்றும், தனித்து நின்று அதிகாரத்தைக் கைப்பற்றினால் தான் கதிமோட்சம் ஏற்படுமென்றும் டாக்டர் அம்பேத்கார் கூறுவது விசித்திரந்தான்!

நிர்வாக ஊழலா? எதேச்சாதிகாரமா?

பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் காயிதே ஆஜம் ஜின்னாவின் கட்டளைக் கிணங்க, சிந்து மாகாண பிரதம மந்திரி ஜனாப் முகமது அயூப் கூரோவை மேற்படி பதவியிலிருந்து சிந்து கவர்னர் 'டிஸ்மிஸ்' செய்து விட்டார். ஒரு மாகாணப் பிரதம மந்திரியை டிஸ்மிஸ் செய்வது அற்பமான ஒரு விஷயமல்ல. பிரதம மந்திரி தவறாக நடந்து கொண்டிருந்தாலும் ஜனநாயக முறைப்படி அவரைப் பதவியிலிருந்து விலக்க வேறு வழிகள் இருக்கின்றன. அதையெல்லாம் விடுத்து அவரை டிஸ்மிஸ் செய்திருப்பது இரண்டு விஷயங்களை அம்பலமாக்குகின்றன. ஒன்று தங்களுக்குப் பிடிக்காத ஒருவரைச் சகிக்காத எதேச்சாதிகார ஆட்சி முறை பாகிஸ்தானில் தாண்டவமாடி வர வேண்டும்; அல்லது ஒரு பிரதம மந்திரியை டிஸ்மிஸ் செய்ய வேண்டிய அளவுக்கு ஊழல்கள் எல்லை மீறி நடந்திருக்க வேண்டும்.

காயிதே ஆஜம் ஜின்னா சமீபத்தில் பெஷாவரில் பேசிய போது 'இஸ்லாமிய ஜனநாயகத்தை' விளக்கினார். மேற்படி ஜனநாயகத்தில் ஒரே ஒரு கட்சிக்குத்தான் இடம் உண்டாம். பாகிஸ்தானுக்கு ஒருகாலத்தில் விரோதியாக இருந்தவர்கள் என்றென்றும் விரோதிகள்தான் என்றும் அவர் கூறினார். அத்தகைய ஒரே கட்சி ஜனநாயகத்துக்கும் எதேச்சாதிகாரத்துக்கும் வேற்றுமை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்நிலைமையில் பாகிஸ்தானில் இன்னும் என்னவெல்லாம் அதிசயங்கள் நடைபெறுமோ என்று எதிர்பார்க்க வேண்டியவர்களாகிறோம்.



வாழ்க நம் தலைவர்கள்!

இந்தப் பூவுலகத்திலுள்ள சுமார் இருநூற்றிருபது கோடி மக்களிலே ஒரு பெரிய மனிதரை,—ஒரு சுயநலமற்ற தியாகியை,—ஒரு விசால இருதயம் படைத்த பரோபகாரியை,—மனித குலத்தின் ஒரு பிறவித் தலைவரை,—சொல்லுங்கள் என்று இந்த நிமிஷத்தில் கேட்டால் நாம் உடனே ஒரு கணமும் தயக்கமின்றி ''அந்த அற்புத மனிதர் பண்டித ஜவாஹர்லால் நேருதான்!'' என்று சொல்வோம்.

அத்தகைய அருமைத் தலைவரிடம் ஒரு சிறு குறைபாடு இருந்தது; ஒரு மனக்கோணல் இருந்தது. அதற்கு 'இண்டர் நேஷனல் ஸிடுவேஷன்' (சர்வ தேசிய நிலைமை) என்று பெயர். எந்தக் காரியத்தையும் 'இண்டர் நேஷனல் அவுட்லுக்'குடனே (சர்வ தேசியப் பார்வையுடன்) பார்க்க வேண்டுமென்று ஜவாஹர்லால்ஜி சொல்லுவார். சென்ற மகாயுத்தத்தின் போது கொஞ்சம் அந்தப் பிரமை அவருக்குத் தெளிந்தது. நாளது 1948-ம் வருஷத்தில் ஐக்கிய தேச சபை என்னும் அயோக்கிய தேசங்களின் சபை காஷ்மீர் விஷயத்தில் செய்திருக்கும் தீர்ப்பைப் பார்த்தபிறகு ஜவாஹர்லால்ஜிக்கு முழுக்க முழுக்க சர்வ தேசியப் பிரமை தெளிந்து விட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் ஜவாஹர்லால்ஜி செய்த பிரசங்கத்திலிருந்து அத்தகைய நம்பிக்கை நமக்குப் பிறக்கிறது. 'இண்டர் நேஷனல் அவுட்லுக்' என்பது சுத்த ஏமாற்றமான விஷயம் என்பதை அவர் ஒருவாறு உணர்ந்திருப்பதாகக் காண்கிறது.

'இண்டர் நேஷனலிஸம்' என்று சொல்லிக்கொண்டு சர்வதேச மகாநாடு கூட்டும் இராஜதந்திரிகள் எல்லாரும் உண்மையில் அவரவர்களுடைய சுயநலத்தைப் பார்க்கிறவர்களே தவிர நியாயத்தைப் பார்க்கிறவர்களல்ல என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகி. அந்த விஷயம் நம் ஜவாஹர்லால்ஜிக்கு நன்றாய்த் தெரிந்து போய் விட்டதல்லவா? இனி மேல் பண்டித ஜவாஹர்லாலுக்கு இணையான தலைவர் இந்தியாவுக்கு யாரும் இல்லை; இருக்கவும் முடியாது.

* * *

ஜவாஹர்லால்ஜியைப் போன்ற ஒரு தலைவரைப் பெற்றதில் பாரதநாடு பாக்கியம் செய்திருக்கிறது. அடுத்த படியாக சர்தார் வல்லபாய் படேலைப் பெற்றதிலும் பாரத நாடு பாக்கியம் செய்திருக்கிறது.

சென்ற ஆகஸ்டு மீ 15உ இந்தியா தேசத்தை அறுநூறு துண்டுகளாக்கி ''இதோ சுதந்திரம் அளித்தோம்!'' என்றனர் பிரிட்டிஷார். அறுநூறு துண்டுகளும் தனித் தனிப் பிரிந்து இந்தியா சின்னபின்னமாக வேண்டும் என்று நினைத்துச் செய்தார்களோ, அல்லது நினையாமல் செய்தார்களோ நாம் அறியோம். ஆயினும் அப்படிப்பட்ட விபத்து நேர்ந்துவிடலாம் என்பதற்கு அநேக அறிகுறிகள் இருந்தன. திருவாங்கூர் சமஸ்தானம் பிய்த்துக்கொண்டு கிளம்பித் தனிச் சுதந்திரம் ஸ்தாபிக்க எண்ணியதைப் போல் இன்னும் பல சுதேச மன்னர்களும் செய்வதற்குத் தயாராகக் காத்திருந்தார்கள். ''இந்தியா சுதந்திரம் அடைந்தது; உடனே அழிந்தது!'' என்று சரித்திரத்தில் எழுதப்படுவதற்குரிய நிலைமை ஏற்பட்டிருந்தது. அத்தகைய அபாயகரமான நிலைமையை ஸ்ரீ வல்லபாய் படேல் தமது இரும்பு நெஞ்சத்தின் உறுதியினாலும் இராஜதந்திரத் திறமையினாலும் சமாளித்தார். அறுநூற்றுச் சொச்சம் சுதேச சமஸ்தானங்களையும் முதலில் இந்தியாவுடன் பிணைந்து கொள்ளச் செய்தார். பிறகு, அங்கங்கே சிதறிக்கிடந்த சமஸ்தானங்களைத் தங்களுக்குள் சேர்ந்து கொள்ளச் செய்து மாகாண பரிமாணமுள்ள நிர்வாகங்களை ஏற்படுத்தினார்.

ஸ்ரீ வல்லபாய் படேலின் உறுதிக்கும் திறமைக்கும் நேற்றுவரை கட்டுப்பட்டு வராமலிருந்த ஒரே ஒரு சமஸ்தானம் ஹைதராபாத் சமஸ்தானமாகும். அதுவும் ஒருவேளை வழிக்கு வராதோ என்று சந்தேகப்படும்படியாகச் சென்ற வாரத்தில் நைஜாமும்

அவருடைய பிரதம மந்திரியும் அறிக்கை விட்டிருக்கிறார்கள். இது ஏமாற்றமா அல்லது உண்மையான மனமாற்றமா என்பது சீக்கிரத்தில் தெரிந்து போய்விடும்.

அறுநூறு சமஸ்தானங்களை வழிக்குக் கொண்டு வந்த தீரர் பாக்கியுள்ள ஒன்றை மட்டும் அக்கிரமங்களுக்கு அடைக்கல ஸ்தானமாக விட்டு வைப்பார் என்று நாம் நினைக்க வேண்டியதில்லை. சரியான தருணத்தில் சரியான நடவடிக்கை எடுப்பார் என்று நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

ஸ்ரீ வல்லபாய் படேலையும் அவருடைய வயிர நெஞ்சத்தையும் வாழ்த்துகிறோம். விரைவில் அவர் நோய் நீங்கிப் பூரண குணமடைய வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

* * *

அடுத்தபடியாக, பாபு ராஜேந்திர பிரஸாத்தும் மௌலானா அபுல்கலாம் ஆஸாத்தும் பாரதத்தாயின் இரு கண்களைப் போல இன்று விளங்கி வருகிறார்கள். நீண்ட கால தேசத் தொண்டிலும், நேர்மையிலும் ஒழுக்கத்திலும் அறிவிலும் திறமையிலும் உலகத்து இராஜ தந்திரத் தலைவர் எவருக்கும் குறைவில்லாத பெருமை வாய்ந்தவர்கள். பாபு ராஜேந்திர பிரஸாத் காங்கிரஸ் மகாசபையின் தலைவராக இருந்து எல்லாத் துறைகளிலும் இந்தியா தேசத்தின் நலன்களைப் பாதுகாத்து வருகிறார். பெற்ற தாய் தன் குழந்தையைக் கண்ணுங் கருத்துமாய்ப் பாதுகாப்பதுபோல் காங்கிரஸ் மகாசபை பெற்றுத் தந்த சுதந்திரக் குழந்தையை அவர் கவலையுடன் பராமரித்து வருகிறார்.

காயிதே ஆஜம் ஜின்னா என்னத்தைச் சொன்னாலும் சரி, பாகிஸ்தான் முஸ்லிம்கள் என்னத்தைச் செய்தாலும் சரி, நைஜாம் மன்னர் சொன்னதையே சொன்னாலும் சரி, ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒரு நாட்டின் மக்களான சகோதரர்கள்தான் என்பதை நினைவூட்டிக்கொண்டு வருகிற மகான் மௌலானா அபுல்கலாம் ஆஸாது. யார் மாறினாலும் தாம் மாறாது அன்று முதல் இன்றுவரையில் ஒரே மாதிரியாக இந்தியாவின் பொது நன்மைக்கே உழைத்து வரும் புண்ணியவான்.

அத்தகைய இரு பெருந் தலைவர்களான பாபு ராஜேந்திரரும் மௌலானா அபுல்கலாம் ஆஸாத்தும் நீடூழி வாழ்க என்று வாழ்த்துகிறோம்.

நல்லது; இப்படியெல்லாம் நம் தலைவர்களை வாழ்த்துவதற்கு என்ன காரணம் இப்போது ஏற்பட்டது என்றால், பம்பாயில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடி காங்கிரஸ் மகா சபையின் புது இலட்சியத்தையும் புதிய விதிகளையும் நிர்ணயித்து விட்டுக் கலைந்ததுவே காரணமாகும்.

இந்தியா சுதந்திரம் அடைந்து விட்டபடியால், இனிமேல் காங்கிரஸின் இலட்சியம் தேச சுதந்திரம் என்று இருக்க முடியாதல்லவா? ஆகவே, இனிக் காங்கிரஸ் மகாசபையின் இலட்சியம், "இந்திய மக்கள் அனைவரும் சம சந்தர்ப்பங்களும் சம உரிமைகளும் அடைந்து கூட்டுறவு முறையில் நல்வாழ்வு நடத்தச் செய்வதேயாகும்" என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

பிறகு, காங்கிரஸில் அங்கத்தினராகச் சேர்வதற்குரிய விதிகளை வகுத்திருக்கிறார்கள். நாலணாச் சந்தாவை எடுத்துவிட்டுக் காங்கிரஸ் இலட்சியத்தை ஒப்புக் கொள்வோர் எல்லோரும் அங்கத்தினராகலாம் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

ஆனால் இப்படி வெறும் அங்கத்தினர் எல்லாரும் காங்கிரஸ் கமிட்டி தேர்தல்களில் வோட்டுக் கொடுக்க முடியாது. வோட்டுக் கொடுக்கும் தகுதிபெறச் சிற்சில நிர்மாண திட்ட நிபந்தனைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

கிராம காங்கிரஸ் பஞ்சாயத்துகளுக்கும் மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக்கும் தேர்தல் முறைகளை வகுத்திருக்கிறார்கள்.

அகில இந்தியக் காரியக் கமிட்டியில் இருபது அங்கத்தினர்கள் இருக்க வேண்டுமென்றும் அவர்களில் ஆறு முக்கால் பேருக்கு மேல் இந்திய அரசாங்க மந்திரிகளாகவோ மாகாண மந்திரிகளாகவோ இருக்கக் கூடாதென்றும் விவாதத்தின்பேரில் முடிவு செய்திருக்கிறார்கள்.

இன்னும் பழைய காங்கிரஸ் அமைப்பு விதிகளைக் கூட்டியும் குறைத்தும் திருத்தியும் புதிய விதிகள் செய்திருக்கிறார்கள்.

ரொம்ப சரி! ரொம்ப சரி!!

இலட்சியம் எதுவாயிருந்தால் என்ன? விதிகள் எப்படி எப்படி அமைக்கப்பட்டிருந்தால் என்ன? எல்லாம் நடத்தி வைக்கும் ஆசாமிகளைப் பொறுத்தல்லவா காரியத்தில் நடைபெற வேண்டும்?

சில விஷயங்கள் நிச்சயமாக தெரிந்ததுபோல் சொல்லலாம்.

அகட விகட சாமர்த்தியக்காரர்களும் வோட்டு மோப்பம் பிடிக்கும் ஆற்றல் உள்ளவர்களும் ஆங்காங்கே யுள்ள காங்கிரஸ் கமிட்டிகளைப் பிடித்துக் கொள்வார்கள். தங்களுக்குச் சௌகரியமாயிருக்கும்போது சிலரை ''மாபெருந் தியாகி; பழம் பெருந் தொண்டர்'' என்று சொல்லிக் கொள்வார்கள். நிலைமை வேறு விதமாயிருந்தால், ''தியாகத்தை விலை கூறலாமா? சிறை சென்றவர்கள் எல்லாம் இராஜ்யம் ஆள முடியுமா? ஆற்றல் வேண்டாமா!'' என்பார்கள்.

ஆகக் கூடி, கீழே யிருந்து கிராம காங்கிரஸ் பஞ்சாயத்து முதல் கைப் பற்றி வந்து மாகாண காங்கிரஸ் கமிட்டிகளையும் கைப்பற்றுவார்கள்.

எந்த விதி எப்படி யிருந்தாலும் அந்த விதிக்குள் நுழைந்து கொடுத்து இவர்கள் வந்துவிடுவார்கள்!

மாகாண காங்கிரஸ் கமிட்டியின் சிபார்சுப்படியே மாகாண சட்டசபை அங்கத்தினர்கள் அமைவார்கள். அந்த சட்டசபை அங்கத்தினர்களிலிருந்து மாகாண மந்திரிகளும் வருவார்கள்.

இந்தியா சட்டசபைத் தேர்தலும் இந்த முறையிலேயே நடைபெறும்.

ஆகவே நல்லவர்களும் அறிவாளிகளும் பொது நன்மையைச் சுயநலமின்றிப் பாதுகாக்கக் கூடியவர்களுந்தான் சட்டசபைகளுக்கு வருவார்கள் என்று நிச்சயம் சொல்ல முடியுமா?

முடியவே முடியாது.

சென்னைச் சட்டசபையும் மேற்கு வங்காளச் சட்டசபையும் நம் கண் முன்னே அத்தாட்சி தருகின்றன.

நேற்று ஒருவரை ஆதரித்து வோட்டுக் கொடுத்தவர்கள் இன்று அவர் இருந்தால் தேசமே நாசமாகி விடும் என்று சொல்கிறார்கள். நேற்று லஞ்சக் குற்றம் சாட்டித் தள்ளிய ஆசாமிகளை இன்று ''பரோபகார சீலர்கள்'' என்று ஆதரிக்கிறார்கள்!—இப்படி யெல்லாம் நமது சென்னைச் சபையில் தமாஷ் நடக்கிறது.

மேற்கு வங்காளத்தில் இதைவிடத் தமாஷா யிருக்கிறது. ஒரு வருஷத்திற்குள்ளே அங்கே மந்திரி சபையில் மூன்று தடவை மாறுதல்கள் நடைபெறுகின்றன! டாக்டர் பி. சி. கோஷ் போனார்; டாக்டர் பி. சி. ராய் வந்தார்! இப்போது பி. சி. ராய்க்குத் தலைவலி வந்திருக்கிறதாம்; எஸ். எம். கோஷ் வரப் போகிறாராம்!

புதிய இந்திய சுயராஜ்ய அமைப் பின்படி வரப்போகும் சட்டசபைகளும் இவ்வளவு இலட்சணமாகத்தான் இருக்கப் போகின்றன. எலி பிடிக்கும் வித்தையைப்போல் வோட்டுப் பிடிக்கும் வித்தை கற்றவர்கள்தான் சட்டசபையில் பெரும்பாலோராக வருவார்கள்.

அப்படி வருகிறவர்கள் யோக்கியர்களாயும் திறமைசாலிகளாகவும் இருந்து விட்டால் நாம் செய்த அதிர்ஷ்டம், தேசம் செய்த புண்ணியம் என்று கருதி மகிழ வேண்டும்.

ஒழுக்கமற்ற, உபயோகமற்ற மனிதர்களாக வந்தால் அதைப்பற்றி வியப்படைய வேண்டியதில்லை; கவலைப்படுவதிலும் பிரயோஜனமில்லை.

சுதந்திரம்—ஜனநாயகம் ஆகியவற்றில் நன்மையோடு தீமையும் கலந்து தான் வரும். அடிபட்டு, அநுபவித்து, விழுந்து, எழுந்துதான் நாளடைவில் சமாளித்தாக வேண்டும்.

இந்த மாதிரி ஜனநாயக சுதந்திர அரசியல் முறையில் பொது மக்கள் அநுபவம் பெற்று, தேர்ந்து வருகிற வரையில் இந்தியா தேசமும் இந்தியாவின் சுதந்திரமும் அடியோடு நாசமடையாமல் இருக்க வேண்டுமல்லவா?

அதற்காகத்தான் பண்டித ஜவாஹர்லால் நேருவும் ஸ்ரீ வல்லபாய் படேலும் பாபு ராஜேந்திர பிரஸாத்தும் மௌலானா ஆஸாத்தும் நீடூழி வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறோம். இவர்கள் இந்தியாவின் தலைமையில் இருக்கும் வரையில் கீழே உள்ளவர்கள் எப்படி யிருந்தாலும் காரியம் அடியோடு கெட்டுப் போகாது என்று நாம் நம்பி யிருக்கலாமல்லவா?

மேற் கூறிய நாலு தலைவர்களோடு இன்னொரு ஐந்தாவது தலைவரையும் சேர்த்துக் கொள்வதற்கு நமக்கு இஷ்டந்தான். ஆனால் இந்த நாலு தலைவர்களிடம் இருக்கும் அரிய குண நலங்களைத் தவிரத் தீர்க்கதரிசனம் என்னும் குணமும் நம் ஐந்தாவது தலைவரிடம் இருப்பதால் எல்லாரும் அவரை எளிதில் ஒப்புக் கொள்வது சாத்தியமில்லை. ஆகையால் அந்தத் தீர்க்க தரிசனத் தலைவரை இந்த நால்வர் கோஷ்டியில் சேர்க்காமல் விட்டு விடுகிறோம்.

ஜவாஹர்லால்ஜியும் சர்தார் வல்லபாயும் பாபு ராஜேந்திரரும் மௌலானா ஆஸாதும் நீடூழி வாழ்க என்று மறுபடியும் வாழ்த்துகிறோம்.

வட்ட மேஜை

அருவன்காடு,
22—4—48.

அன்புள்ள ஐயா!

ஒவ்வொரு வாரமும் தங்கள் பத்திரிகையைப் படித்து இன்புறுவேன். ஆனால் போன வாரத்து 18-4-48ந் தேதி கல்கி எனக்கு மன வருத்தத்தை அளித்தது.

46-வது பக்கத்தில் வெளியாகியிருக்கும் "அவன் யோசனை" என்பதைப் படிக்கும்பொழுது தங்கள்மீது கோபமும், வருத்தமும் அடைந்தேன்.

மனிதன் என்பது பொதுப் பாலாகும். மனிதனை விடப் பேய் பயங்கரமானது என்று குறிப்பிடுகிறீர். மற்றொருவர் பெண்ணாக இருக்குமோ என்கிறீர். இதனால் ஆணைவிட பெண் கொடியவளா? அல்லது ஆடவர்கள் மிகவும் நல்லவர்களா?

இப்படி எழுதும் அந்தப் புத்திசாலியும் பேய் என்று குறிப்பிடும் பெண் வயிற்றில் பத்து மாதம் இருந்து, அவளால் வளர்க்கப்பட்டவன்தானே? அவள் குணத்தில் ஒன்றாவது அவனுக்கு இருக்காதா? உலகில் ஆடவரிலும், பெண்களிலும் கொடியவர்கள் உளர். இப்படி இருக்கும்பொழுது ஒரு சாராரை மட்டும் ஏன் இழிவாகக் குறிப்பிடவேண்டும். இதற்குத் தக்க பதிலை எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,
கோ. தெய்வநாயகி.

[தகுந்த பதில் ஒன்றே ஒன்றுதான். தயவு செய்து மன்னிக்கவும். மேற்படி தவறான விகடத் துணுக்கைப் பிரசுரித்ததினால் "காலக்ஷேபம்" என்னும் பகுதியைப் பலர் படிக்கிறார்கள் என்று தெரிய வந்தது. அதற்காகச் சந்தோஷம்—ஆசிரியர்.]

கடவாசல், சீகாழி.
12—4—1948.

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். 11-4-48ல் அன்று வெளியான கல்கி இதழில் தாங்கள் எழுதியுள்ள "திருப்தியடையாதீர்" என்ற கட்டுரை மூலம் ஒரு பெரிய புரட்சியை உண்டு பண்ணி விட்டீர்கள். சாதாரணமாய் பத்திரிகைகள் சர்க்காரைக் குறை கூறுவதுடன் நின்றுவிடுமேயொழிய, அக் குறைகள் நீங்குவதற்கான யோசனைகளை வெளியிடுவதில்லை. அதற்கு நேர்மாறாக, தாங்கள் ஒவ்வொரு குறையுடனும் அதை நீக்கத் தக்க அருமையான யோசனைகளையும் கூறியிருப்பது வரவேற்கத் தக்கது. தாங்கள் கூறியுள்ள நவ யோசனைகளும் நவநவமாக மிளிர்கின்றன. அவற்றை அப்படியே ஏற்றுக்கொண்டு நமது சர்க்கார் அமுலுக்குக் கொண்டு வருமானால் நமது மாகாணம் கல்வியில் முதன்மையாக நிற்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை. இதைப் போலவே மற்ற இலாக்காக்களும் சீர்திருந்துவதற்கான சில யோசனைகளைக் "கல்கி"யில் தொடர்ந்து எழுதி வந்தீர்களானால், சென்னை மாகாணத்துக்கே சிறந்த தொண்டு செய்தவராவீர்கள். தங்கள்,

தி. விசுவநாதன்.

மயிலாப்பூர், சென்னை
12—4—1948.

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

ஏப்ரல் மாதம் 11-ந்தேதி கல்கி இதழில் வெளியாகியுள்ள "திருப்தி அடையாதீர்" கட்டுரையைப் படித்ததும் எல்லையில்லா மகிழ்ச்சியை அடைந்தேன். நான் கல்லூரியில் படிக்கும் மாணவனாகையால் தங்களுடைய அந்தக் கட்டுரை என் மனதை மிகவும் கவர்ந்தது. வெகு நாட்களாகவே மஹானுபாவர் மெக்காலே கல்வித் திட்டத்தை வெறுத்துக் கொண்டு வருபவன் நான். என்னுடைய கல்லூரி ஆசிரியர்களிடம் இதைக் குறித்து எவ்வளவோ சர்ச்சைகள் செய்திருக்கிறேன். எளிய மாணவனான நான் என்னுடைய ஆசிரியர்களிடம் சர்ச்சை செய்தால், என்ன சீர்திருத்தம் ஏற்பட்டு விடப் போகிறது?

வகுப்பிலே கேள்விக்குப் பதில் சொல்லாவிட்டால் அபராதம். கல்லூரிக்கு ஐந்து நிமிஷங்கள் தாமதமாய் வந்தால் அபராதம்' என்று அபராதத்தையே சட்டமாகக் கொண்ட கிறிஸ்தவப் பாதிரிமார்கள் நடத்தும் கல்லூரியில் படித்தவன் நான். அபராதத்தைப் போட்டுக் கொண்டே இருந்தால் பையன்கள் முன்னுக்கு வந்து விடுவார்கள் என்ற எண்ணம் போலும்! நான் பார்த்த வரையில் 'அபராதம்' விதிக்கப்பட்ட செல்வந்தர்களின் பையன்கள், அலட்சியமாக அபராதத்தைச் செலுத்துகின்றனர். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபட்டு உழைக்கும் ஏழைத் தொழிலாளர்களின் பையன்கள் எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில் அபராதத் தொகையைச் செலுத்துகின்றனர். சிலர் ஏதோ பல கவலைகளால் படிப்பிலே சற்றுக் கவனக் குறைவாக இருக்கலாம். அதற்காக அவர்களை இப்படியா அபராதத்தைச் செலுத்திப் படிக்கும்படிச் செய்கிறது? அபராதம் யாருக்கு? படிக்கும் மாணவனுக்கா? இல்லவே இல்லை! அந்த மாணவனின் தகப்பனுக்கு! இது எவ்வளவு மோசமான காரியம்! மாணவர்களுக்கு அபராதம் போடும் சட்டத்தை அடியோடு ஒழிக்க ஏற்பாடு செய்யுமாறு கல்வி மந்திரியைக் கேட்டுக் கொள்கிறேன்.

தாங்கள் எழுதிய 'திருப்தி அடையாதீர்' என்ற கட்டுரையில் பரீட்சை முறையில் மாணவர்களின் அறிவை நிர்ணயிப்பது மிகவும் மோசமான முறை என்பதை நன்கு எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள். அதை நான் ஆமோதிக்கிறேன். ஆனால் பரீக்ஷை முறை அல்லாது வேறு எந்த முறையில் மாணவர்களின் அறிவை நிர்ணயிப்பது என்பதைத் தாங்கள் குறிப்பிடவில்லை.

மஹாத்மா காந்தியின் ஆதாரக் கல்வித் திட்டம் ஏற்பட்டு, ஒவ்வொரு வகுப்பிலும் தமிழும், ஹிந்தியும் கட்டாய பாடமாக ஏற்பட்டு, பரீட்சை முறை ஒழிந்து, மாணவர்கள் சந்தோஷமாகவும், திருப்தியுடனும் கல்வி கற்கும்படியான சாதனங்கள் ஏற்பட எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

இங்ஙனம்:
த. நாராயணசாமி.

[பரீட்சைக்குப் பதில் எந்த முறையைக் கையாள்வது என்பது பற்றி ஒரு தனிக் கட்டுரை எழுதப்படும். — ஆசிரியர்.]


சிமெண்டு வேண்டிய

ஆனால் வாகன

சரக்கு ஒப்படைப்ப

பாரத நாட்டின் இன்றைய ஆகமோத்
டன் வரும். எல்லா நியாயமான அவசிய

ஆனால், தவிர்க்க முடியாத வாகனக் கஷ்டங்கள் காரணமாக இந்த சிமெண்டு பூராவையும் பொது ஜனங்களுக்கு கிடைக்கச் செய்வது முடிகிற காரியமாயில்லை. இன்று சகலவித போக்கு வரவு வாகனங்களும் மிதமிஞ்சி வேலை செய்து வருகின்றன. கடத்துச் சாமான்களில் ரயில், ரோடு,



வெளியி

தி சிமெண்டு மார்கெட்டி

கிடைக்கும் கஷ்டங்கள் தடை செய்கின்றன

சிமெண்டு உற்பத்தி சக்தி சுமார் 30,00,000 டன்னையும் சமாளிக்க இது போதுமானதாகும்

நீர் இம் மூன்று வழிக்கும் உணவுப் பொருட்களுக்கு முதன் முதல் இடம் அளித்தாக வேண்டும். அதன்பயனாக ஆலைகளுக்குத் தேவையான அளவு மூலப்பொருட்கள் கிடைக்கத் தவறுவதோடல்லாமல் சிமெண்டு வாங்குபவர்களுக்குத் தடையின்றி சரக்கு ஒப்படைத்தலும் முடியாது போகிறது.

இந்த பிரதி கூலங்களெல்லாம் இருந்த போதிலும் சிமெண்டு உற்பத்தி நடைபெற்றே வருகிறது. ஆலைகளில் சிமெண்டுக்குப் பஞ்சமில்லை.

இந்த போக்குவரவுத் தொந்தரவுகள் ஏதுவாக சிமெண்டுத் தொழிலின் தற்பொழுதைய உற்பத்தி அதன் பூராச் சக்தியின் ஓர் பங்களவுதான் என்று கூற வேண்டும். போக்குவரவுப் பிரச்னை திருப்திகரமாக முடிவடைந்ததும் உற்பத்தி பூர்ண அளவுக்கு விருத்தி பெறும்.

இவ் விளம்பரத்தின் உத்தேசம் சிமெண்டு உபயோகிப்பவர்களுக்கு உண்மை நிலைமையை விளக்கவும், நிலைமை சீர்ப்படும் வரை தங்கள் அவசியங்களை உடனடித் தேவைகளின் அளவுக்கு கட்டுப்படுத்துவதில் அவர்கள் உதவியை கோரவும் செய்வதே யாகும். எல்லோருக்கும் நியாயமான முறையில் சேவை புரிய சிமெண்டுக் கைத்தொழில் கூடிய அளவு முயற்சித்துத்தான் வருகிறது.

பவர்கள் :

கம்பெனி ஆப் இந்தியா லிட்.,

மிருதங்க வித்வான்
தஞ்சாவூர் வைத்தியநாதய்யர்

[கோட் வாத்தியம் ஸ்ரீ துரையப்ப பாகவதர்]

'தஞ்சாவூர் வைத்திநாதய்யர்' என்று பிரசித்திபெற்ற திருவாங்கூர் ஆஸ்தான மிருதங்க வித்வான் தமது ஐம்பத்திரண்டாவது வயதில் தஞ்சாவூரில் உள்ள தமது இல்லத்தில் சென்ற ஏப்ரல் மாதம் 13-ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 5-30 மணிக்கு தேகவியோகமானார் என்ற துக்ககரமான செய்தியைச் சங்கீத உலகத்துக்குத் தெரிவிக்க வேண்டியதாயிருக்கிறது.

சங்கீத அவதார புருஷரான மஹா வைத்திநாத சிவனும், அவருடைய குருவான ஆனையா என்ற மஹானும் எந்த வையச்சேரி கிராமத்தில் ஜனித்தார்களோ அதே வையச்சேரியில்தான் மிருதங்கம் வைத்திநாதய்யரும் ஒருஎளிய குடும்பத்தில் 1896-ம் வருஷத்தில் பிறந்தார். சிறு வயதில் தாயை இழந்து, தந்தையால் போஷிக்கப்பட்டுத் தஞ்சாவூர் கல்யாணசுந்தரம் உயர்தரப் பாடசாலையில் இரண்டாவது பாரம் வரையில் கல்வி பயின்றார். ஒரு நாள் உபாத்தியாயர் அகாரணமாக அடித்துக் கண்டித்ததைப் பொறுக்காமல், பள்ளிக்கூடத்தையே வெறுத்துப் படிப்பை நிறுத்தி விட்டார். அந்தச் சிறு பிராயத்திலேயே, பெஞ்சுப் பலகையிலும் தூணிலும் எப்போதும் 'தகிடதகதிமி' போன்ற சொற்களைத் தட்டிக் கொண்டிருப்பார்.

ஜன்மாந்தரத்தில் 'விட்ட குறை' என்பார்களே, அதுதானோ என்னவோ — எங்கிருந்தாலும் எது கைக் கெட்டினாலும் அதில் தட்டிக் கொண்டு ஆத்ம சந்தோஷப் படுவார். ஒரு சமயம் கட வாத்தியம் வித்வான் பழனி கிருஷ்ணய்யர் அவர்கள் கடம் வாசிப்பதைப் பார்த்துப் பிரமித்துப் போய் அன்று முதல் அதில் ஆசையுண்டாகித் தூணில் தட்டுவதைவிட்டு மண் பானையில் தட்ட ஆரம்பித்தார். அந்த நாளில் இவரை "கடம் வைத்தா" என்று எல்லாரும் அழைப்பார்கள். பஜனை மடங்களில் இரவில் வெகு நேரம் வரை காத்திருந்து, பஜனையில் மிருதங்கம் வாசிப்பவர் கை ஓய்ந்திருக்கும் சமயம் பார்த்து, அந்த மிருதங்கத்தை மெதுவாகத் தன் பக்கமாக நகர்த்திக் கொண்டு வந்து அதில் வாசித்துப் பரம சந்தோஷப்படுவார். தஞ்சாவூரிலிருந்த நாண் ஸ்வாமி முதலான மிருதங்க வித்வான்களிடம் போய் அவர்களைச் சுற்றிக் கொண்டேயிருப்பார்.

எளிய குடும்பத்தில் பிறந்தவராதலால், தனக்கென்று ஒரு வாத்தியத்தைச் சொந்தமாக வாங்கிக் கொள்ள வகையில்லை. அப்படி இருந்த காலத்தில் ஒரு சமயம் கோடைகல்லூர் போக நேர்ந்தது. அங்கிருந்த பிடில் வித்வான் அப்பாவையருக்கும் சங்கீத வித்வான் சுப்பையருக்கும் வைத்திநாதய்யரிடத்தில் ஒருவித அபிமானம் ஏற்பட்டது. அவர்களிடத்தில் லய சம்பந்தமான விஷயங்களைத் தெரிந்து கொண்டு ஒரு நாளில் பதினெட்டு மணி நேரம் சளைக்காமல் சாதகம் செய்வார். விடாத சாதகத்தாலும், ஊக்கத்தாலும் இயற்கையான லய ஞானத்தாலும் அநேக கற்பனைகள் செய்து மற்றவர்களைக் கேள்வி கேட்டுத் திணறவைப்பதில் அவருக்கு ஒரு சந்தோஷம். பிரசித்தி பெற்ற திருவையாறு சங்கீத வித்வான் சுப்ரமண்ய ஐயரவர்களிடத்திலேயே ஸ்ரீ வைத்திநாதய்யர் லய விஷயமாய் வாக்குவாதம் செய்தார் என்றால் அவருக்கு எவ்வளவு மனோ தைரியம் இருந்திருக்கும்!

ஹரிகதா காலக்ஷேபங்களில் அநேக பாகவதர்களுக்கு வாசித்துத் தேர்ச்சியடைந்தார். முக்கியமாக குலமங்கலம் வைத்திநாத பாகவதரவர்களுக்கும் ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதரவர்களுக்கும் வாசிப்பதில் தான் மிகுந்த உத்ஸாகம். வைத்திநாதய்யரின் திறமையை அறிந்து வியந்த ஸ்ரீ முத்தையா பாகவதர் அவரை மனதில் வைத்துக் கொண்டு, பிற்காலத்தில் தாம் திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஆஸ்தான வித்வானாக இருந்த போது வைத்திநாதய்யரையும் ஒரு ஆஸ்தான வித்வானாக நியமிக்கும்படிச் செய்தார். ஹரி கதைகளுக்கு அழகாக வாசித்த காலத்தில் சங்கீதக் கச்சேரிகளுக்கும் வாசிக்க வேணுமென்ற ஆசை ஏற்பட்டது. ஆகையால், தஞ்சாவூரில் சங்கீதத்திலும்

நல்ல வித்வானாக இருந்த ஸ்ரீ மகாலிங்கம் பிள்ளையவர்களிடம் சென்றார். வர்ணங்களையும் பெரிய கீர்த்தனைகளையும் பலதடவைகள் திரும்பத் திரும்பப் பாடும்படிக் கேட்டுக் கொண்டால், மகாலிங்கம் பிள்ளை அலுத்துக் கொள்ளாமல் பாடுவார். எந்த எந்த இடத்தில் எப்படி எப்படி ஒட்டுதலாக அனுசரித்து வாசித்தால் அழகாயிருக்கும் என்பதை உணர்ந்து அப்பியாசம் பண்ணினார். சங்கீதக் கச்சேரிகளில் வாசிக்க அபிவிருத்தி செய்து கொள்ளவும் பரத நாட்டியத்துக்கு எப்படி வாசிப்பதென்பதைத் தெரிந்து கொள்ளவும், தஞ்சாவூர் பொன்னையா பிள்ளையவர்களின் தகப்பனார் ஸ்ரீ கண்ணுசாமி நட்டுவனாரையும் பொன்னையா பிள்ளையையும் அனுகி சதா காலமும் அவர்கள் வீட்டில் சாதகம் செய்து வந்தார். பெரிய வித்வான்களிடம் நுட்பமான விஷயங்களைக் கிரகிப்பதும் கிரகித்ததைச் சாதகத்தால் வாசிப்பதும் வைத்தியநாதய்யருடைய சுபாவம்.

இவருடைய திறமையை அறிந்த மிருதங்க வித்வான் மைலாட்டூர் ஸ்ரீ கிருஷ்ணய்யர் அவர்கள் சென்னையிலுள்ள சங்கீத சபைகளில் பெரிய வித்வான்களுக்கு வாசிக்க சிபாரிசு செய்து இவரைப் பிரபலப் படுத்தினார். வைத்தியநாதய்யர் வாசிப்பில் ஒரு விசேஷ அம்சம் என்னவென்றால், காலப்ரமாணம். அதாவது, பாடகர் பாட ஆரம்பிக்கும் போது எந்தக் காலத்தை அமர்த்திக் கொண்டாரோ அந்தக் காலம் இழுக்காமலும் ஓடாமலும் வாசித்து வரும் திடமான ஞானம். இதைப் பூச்சி அய்யங்கார், பிடில் கோவிந்தசாமி பிள்ளை, அரியக்குடி இராமானுஜ அய்யங்கார் போன்ற வித்வான்கள் பெரிதும் பாராட்டுவார்கள். 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பதற்கிணங்க ஸ்ரீ முசிரி சுப்ரமண்ய ஐயர் அவர்களுக்கு வைத்தியநாதய்யரிடத்தில் விசேஷ அன்பும் ஆதரவும் ஒத்த உணர்ச்சியும் ஏற்பட்டது. அதனால் வைத்தியநாதய்யரின் உண்மையான வித்வத்தும் கர்பனா சக்தியும் சங்கீத உலகில் பிரகாசிக்கலாயின. தற்காலத்தில் மிருதங்க வாத்தியத்தில் பிரகாசித்து விளங்கும் ஸ்ரீ பாலக்காட்டு மணி ஐயர் சிலகாலம் வைத்தியநாதய்யரிடம் பல நுட்பங்களைச் சாதகம் செய்து தெரிந்து கொண்டதுண்டு. அந்த மணி ஐயரே ஸ்ரீ வைத்தியநாதய்யரைத் தம்முடைய குருவென்று சொல்வதிலிருந்து ஸ்ரீ வைத்தியநாதய்யருடைய பெருமை நன்கு விளங்கும்.



கல்விப் பயிற்சி முறை
பிரிட்டனிலும் இந்தியாவிலும்

இந்தியா சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து பிரிட்டனைப் பற்றிய செய்திகளை இந்தியாவில் பரப்புவதற்காக பிரிட்டிஷ் விளம்பர இலாகா ஒன்று புது டில்லியில் ஏற்பட்டிருக்கிறது. "British Information Services" என்று பெயர் கொண்ட விளம்பர ஸ்தாபனத்தார் ஒவ்வொரு வாரமும் பிரிட்டனில் நடந்து வரும் பல சமூக முன்னேற்ற



நடவடிக்கைகளைப் பற்றியும் செய்திகள் தயாரித்து இந்தியப் பத்திரிகைகளுக்கு அனுப்புகிறார்கள். சென்றவாரத்தில் இங்கிலாந்தில் நடைபெறும் உபாத்தியாயர் பயிற்சி முறைப் பள்ளிக்கூடத்தைப் பற்றி விவரங்களும் படங்களும் அனுப்பினார்கள்.

பிரிட்டிஷ் குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் கட்டாயமாகப் படிக்க வேண்டிய வயது இதுவரை 14 என்று இருந்தது. இந்த வருஷத்தில் கட்டாயப் படிப்பு வயதை 15 என்று உயர்த்தியிருக்கிறார்கள். இது காரணமாக 13,000 உபாத்தியாயர்கள் அதிகமாக வேண்டியிருந்தது. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய ஒரு வருஷ அவசர போதனா முறைப் பயிற்சிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இத்தகைய ஸ்தாபனம் ஒன்றில் என்னமாதிரி பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன என்பதைக் காட்டும் பல படங்கள் நமக்கு வந்தன. அவற்றில் மூன்று படங்களை இங்கு வெளியிட்டிருக்கிறோம்.



1. பெண் குழந்தைகளுக்குத் தையல் வேலைப் பயிற்சி மிக முக்கியமானது. உபாத்தியாயினி ஆகப் போகும் பெண்கள் இந்த வகுப்பில், தையல் வேலை கற்றுக் கொள்கிறார்கள்.

2. இங்கிலாந்தின் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் எல்லாவற்றிலும் கைத்தொழிற் பயிற்சி மிக முக்கியமானது. இந்த வகுப்பில் உபாத்தியாயர்கள் ஆகப் போகிறவர்களுக்கு மரச் சாமான்கள் செய்யக் கற்பிக்குமுன் போர்டில் படம் போட்டுக் காண்பிக்கப்படுகிறது.



3. போதனை முறைப் பயிற்சியைப் பற்றிய நானாயிரம் புத்தகங்கள் இந்தப் புத்தகசாலை[யி]ல் இருக்கின்றன. பயிற்சிக்கு வந்திருப்பவர்கள் இஷ்டமானபோது வந்து இஷ்டமான புத்[த]கத்தை எடுத்துப் படிக்கலாம். இரவு பத்து மணி வரையில் புத்தகசாலை திறந்திருக்கும்.

4. இந்தியாவின் சென்னை மாகாணத்திலும் காந்தி மகானுடைய ஆதாரக் கல்வித் திட்டப் [ப]யிற்சி சில ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. அத்தகைய பயிற்சிக் கூடம் ஒன்றுக்கு[க்] [கல்]வி மந்திரி விஜயம் செய்தபோது 'குரூப்' போட்டோ எடுத்து நமக்கு அனுப்பியதை மகிழ்ச்சி[யு]டன் வெளியிட்டிருக்கிறோம். போதனை முறையில் மட்டுமின்றி விளையாடக் கலையிலும் நம்ம[வ]ர்கள் கற்றுக் கொள்ள வேண்டியது நிரம்ப இருக்கிறது என்று மேற்படி படங்களை [illegible]



எத்தனை நாள் இக்கொடுமை!

'பெற்றேன்'

2

சென்ற முப்பது வருஷத்திற்குள்ளே நம்முடைய ஹைஸ்கூல் கல்வி முறையானது மேலும் மேலும் கடினமாகவும் குழந்தைகளின் மூளையை வறட்டுவதாகவும் மாறிப் போயிருக்கிறது என்பதைச் சமீபத்தில் நான் பார்த்துத் திடுக்கிட்டேன்.

முன்னெல்லாம் ஹைஸ்கூல் வகுப்புகளில் ஏ குரூப், பி குரூப், ஸி குரூப் என்று பிரித்திருந்தார்கள். பி குரூப் பாடங்களுக்குப் பரீட்சை கிடையாது. பரீட்சை வைத்தாலும் 'பாஸ்' செய்வதற்கு அந்தப் பாடங்களின் மார்க்குகளைக் கணக்கிடுவதில்லை.

பூகோளம் பி குரூப்பைச் சேர்ந்திருந்தது. அதனால் பிள்ளைகள் கஷ்டமில்லாமல் பூகோளம் படித்தார்கள். சுவையுடனும் படித்தார்கள். அவசியமான முக்கிய விஷயங்கள் எல்லாம் ஞாபகத்தில் நின்றன. மற்றவை மறந்து போயின. மறந்து போனதினால் பூகோளத்துக்கும் கஷ்டமில்லை; பிள்ளைகளுக்கும் கஷ்டமில்லை.

இப்போது பூகோள பாடத்தைக் கட்டாயமாகவும் பரீட்சைக்கு உரியதாகவும் ஆக்கியிருக்கிறார்கள். ஒரு பரீட்சைக் கேள்வியையும் அதற்குச் சரியான விடையையும் பாருங்கள்:—

கேள்வி:— ஆசியாவின் மத்திய மலைத் தொடர்களிடையே உள்ள பீட பூமிகளைக் குறிப்பிடுக.

பதில்:—(1) இமயமலைத்தொடர்க்கும் குவென் லுனுக்கும் நடுவே திபெத் பீடபூமி இருக்கிறது. (2) [illegible] அல்டின் டாக்குக்கும் நான்ஷானுக்கும் இடையே யிருக்கிறது. (3) [illegible] இடையே ஒரு சிறிய அதிக உயரமில்லாத பீடபூமி பரவி உள்ளது. (4) ஆல்டாய், யாப்லோனாய் இவற்றின் மத்தியில் கோபி பாலைவனம் உள்ளது. (5) ஈரான் பீட பூமி பாரசீகம் முழுவதும் பரவியுள்ளது. (6) கருங் கடலுக்கும் மத்திய தரைக் கடலுக்கும் இடையே சிறிய ஆசியா பீட பூமி உள்ளது.

தயவு செய்து மேற்படி பதிலை ஒன்பது தடவை படிக்கவும். படித்த பிறகு கண்ணை மூடிக்கொண்டு சொல்லிப் பார்க்கவும். உங்களில் எத்தனை பேரால் சொல்ல முடியுமோ தெரியாது. என்னால் நிச்சயமாக முடியவில்லை.

பின் எப்படி பதில் எழுதினேன் என்று கேட்டால், யாரோ ஒரு மகானுபாவர் 1934-ம் வருஷத்திலிருந்து ஹைஸ்கூல் பரீட்சைகளில் கேட்கப்பட்ட கேள்விகளையும் அவற்றுக்குப் பதில்களையும் "பூகோள சாஸ்திர பரீட்சை வினா விடைகள்" என்ற புத்தகமாக வெளியிட்டிருக்கிறார். மொத்தம் ஏறக்குறைய 500 கேள்விகளும் பதில்களும் இருக்கின்றன. அந்தப் புத்தகம் எழுதினவரைத் திடீரென்று இந்தக் கேள்விகளில் ஒன்றைக் கேட்டால் அவரால் சொல்ல முடியாது. கேள்விகளைச் சேர்த்து வைத்துக்கொண்டு பூகோள புத்தகங்களையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு பதில்களை எழுதியிருக்கிறார்.

பரீட்சைகளில் இதுவரை கேட்கப்பட்ட கேள்விகளைத் தவிர, ஐந்தாவது ஆறாவது பார பூகோள பாடத் திட்டத்திலிருந்து இன்னும் ஆயிரம் கேள்விகள் போடலாம்.

ஆகவே, ஐந்தாவது ஆறாவது பாரத்தில் படிக்கும் ஒரு பிள்ளையோ அல்லது பெண்ணோ பூகோள பரீட்சையில் தேறுவதற்கு மேற்கண்டது போன்ற ஆயிரத்தைந்நூறு கேள்விகளுக்குப் பதில் தெரிந்து கொள்ள வேண்டும். அந்தக் குழந்தையின் இளம் மூளை என்னத்துக்கு ஆகும் என்று கேட்கிறேன். அந்த மூளையில் அப்புறம் ஏதாவது கற்பனை தோன்றுமா? அறிவாராய்ச்சிக்கு வேண்டிய தகுதிதான் இருக்குமா?— யோசித்துப் பாருங்கள்.

ஹைஸ்கூல் நாலாவது பாரம் முதல் ஆறாவது பாரம் வரையில் வைத்திருக்கும்

பூகோள பாட புத்தகங்களிலிருந்து கேள்வி கேட்டால் வைஸ் சான்ஸலர் டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியாரும், டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் டாக்டர் ஸூர் என்பவரும் திணறித் திண்டாடிப் போவார்கள். பத்துக்கு ஐந்து கேள்விக்குக்கூட அவர்களால் பதில் சொல்ல முடியாது. வேண்டுமானால் அவர்கள் பந்தயம் போட்டும். பத்துக்கு ஐந்து கேள்விக்காவது சரியான பதில் சொல்லாவிட்டால் தங்கள் உத்தியோகத்தை ராஜிநாமா செய்து விடுவதாக ஒப்புக் கொள்ளட்டும். அவர்களை நான் கேள்வி கேட்கத் தயார்.

அவ்வளவு பெரிய மேதாவிகளுக் கெல்லாம் வேண்டாத, அவசியமில்லாத விஷயங்களை நமது சின்னஞ் சிறு குழந்தைகளை ஏன் நெட்டுருச் செய்யப் பண்ண வேண்டுமோ, எதற்காக அவர்களைச் சித்திரவதைக்கு உள்ளாக்க வேண்டுமோ, தெரியவில்லை. பூகோள பரீட்சைக் கேள்விகளில் இன்னும் சிலவற்றைத் தயவு செய்து படித்து வையுங்கள் :—

1. ஐரோப்பாவின் மேற்குப் பாகத்தில் ஜனவரி மாதத்திய 32° சம வெப்பக் கோடு கிழக்கிலிருந்து மேற்காகச் செல்லாமல் தென் வடலாகச் செல்வதேன்?

2. ஸாம்பர்—மீயூஸ் பள்ளத்தாக்கு எங்கே இருக்கிறது? அது எவ்வாறு முக்கியமானது?

3. பெல்ஜியத்தை எத்தனை இயற்கை மண்டலங்களாகப் பிரிக்கலாம்? அவற்றைக் குறிப்பிடுக.

4. ஸாக்ஸனி நிலக்கரிச் சுரங்கப் பிரதேசத்தில் என்னென்ன தொழில்கள் எங்கெங்கே நடக்கின்றன?

5. நார்வேயில் மீன் பிடித்தல் எங்கெங்கே நடக்கிறது?

6. ஸ்விட்ஸர்லாந்தில் எங்கெங்கே எவ்வெக் காலங்களில் மாடுகள் மேய்க்கப்படுகின்றன?

நம் குழந்தைகளுக்கு நம் ஊர் மாடுகள் எங்கே மேய்க்கப்படுகின்றன என்று தெரியாதே! ஸ்விட்ஸர்லாந்து மாடுகள் எங்கெங்கே எவ்வெக் காலங்களில் மேய்க்கப்படுகின்றன என்று தெரிந்தே தீரவேண்டுமா? நம்முடைய குழந்தைகள் நம் ஊரில் மாடு மேய்த்தால் போதாதா? பூகோளம் படித்துப் பாஸ் செய்துவிட்டு ஸ்விட்ஸர்லாந்துக்குப் போய்த்தானா மாடு மேய்க்கவேண்டும்?

அட பரம முட்டாள்தனமே! உனக்குப் பள்ளிக்கூட பாட திட்டம் என்றல்லவா பெயர் கொடுத்திருக்கிறார்கள்!

முப்பது வருஷத்துக்கு முன்னும் நம்முடைய பள்ளிக்கூடங்களில் கணக்குக் கற்பித்த முறைக்கும் இப்போது கற்பிக்கும் முறைக்கும் வித்தியாசம் இருக்கிறது.

அந்தக் காலத்திலேயும் வட்டிக்கணக்கு போடப்படுவது உண்டு. உதாரணம் :—

“இராமன், கிருஷ்ணனிடம் வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்குப் பன்னிரண்டு ரூபாய் வட்டி வீதம் மூவாயிரம் ரூபாய் கடன் வாங்கினான். மூன்று வருஷத்தில் வட்டியும், முதலும் சேர்ந்து எவ்வளவு ஆகும்?” என்று கேட்பார்கள்.

அல்லது “வட்டியும் முதலும் சேர்ந்து நாலாயிரத்து இருநூறு ரூபாய் ஆனால், கடன் கொடுத்து எத்தனை வருஷம் ஆகியிருக்கும்?” என்று கேட்பார்கள்.

இப்போது என்ன மாதிரி கணக்குப் போடுகிறார்கள் தெரியுமா?

“ஏ என்பவன் பி என்பவனுக்கு ஸி வட்டி வீதம் டி ரூபாய் கடன் கொடுத்தான். ஈ வருஷத்தில் வட்டியும் முதலும் ஜி ஆனால், டி எவ்வளவு?” என்று கேட்கிறார்கள்.

இரண்டாவது பாரத்துக்குரிய கணக்குப் புத்தகத்தில் முதல் அத்தியாயத்தில் முதல் கணக்கைக் கேளுங்கள் :—

“6747315ல் ஏ ஆயிரங்களும் பி பத்துக்களும் ஸி ஒன்றுகளும் இருக்கின்றன. ஏ, பி, ஸி, யின் மதிப்பு என்ன?”

இம்மாதிரிக் கணக்குகளை யெல்லாம் போட்டும் நம் குழந்தைகள் மூளை குழம்பிப் போகாமல் இருக்கிறார்கள் என்றால், ஏதோ நம் தமிழ்நாட்டுப் பெரியோர்கள் செய்த புண்ணியந்தான்.

‘ஸிம்பல்’ மூலமாக ஒரு விஷயத்தை அறிவதோ உணர்த்துவதோ மிகவும் கஷ்டமான விஷயம். அதெல்லாம் வயதும் அறிவும் முதிர்ந்தவர்களுக்கே உரியது. அல்லது மூளை ஒரு பக்கமாக வளர்ச்சியடைந்த கிறுக்குப்பிடித்த குழந்தைகளுக்கு உரியது. சாதாரண குழந்தைகளை இப்படியெல்லாம் ஏன் வதைக்க வேண்டுமோ, கடவுளுக்குத்தான் தெரியும்.

* * *

கடைசியாக, பாஷை கற்பிக்கும் முறையைக் கவனிக்கலாம். நான் ஹைஸ்கூலில் படித்த காலத்தில், ‘டைரக்ட் மெதட்’ என்னும் முறை சிலாக்கியமாகக் கருதப்பட்டது. அதாவது பாஷையைக் கற்பிக்கும்போது நேர் முகமாகப் பாஷையைப் படிக்கவும்

பேசவும் எழுதவும் கற்பித்தார்கள். படிக்கச் சொல்லி அதன் பொருளை விளக்கினார்கள். பேசச் சொல்லிப் பழக்கப் படுத்தினார்கள். எழுதச் சொல்லி அதிலுள்ள பிழைகளைத் திருத்தினார்கள்.

பாஷையைக் கற்பதற்கு இலக்கணம் அவசியம் இல்லை என்று கருதப்பட்டது. ஹைஸ்கூல் வகுப்புகளில் பிழையின்றிப் பேசவும் எழுதவும் அவசியமான அளவு இலக்கணம் கற்பித்தால் போதும் என்று அந்த காலில் இருந்தது.

நான் ஹைஸ்கூலில் படித்தபோது நன்னூல் சூத்திரம் ஒன்றுகூடக் கற்றதில்லை.

இப்போது ஐந்தாவது பாரத்துக்கு ஐம்பத்தாறு நன்னூல் சூத்திரங்கள் பாடமாக வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்றைப் பாருங்கள் :—

“ அம் ஆம் என்பன முன்னிலை யாரையும்
எம் ஏம் ஓம் இவை படர்க்கை யாரையும்
உம் ஊர் கடதற இருபா லாரையும்
தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை.”

இப்படி ஒரு வருஷத்தில் ஐம்பத்தாறு சூத்திரங்களை ஒரு பதினாறு வயதுக் குழந்தை மனப்பாடம் செய்ய வேண்டும். அதற்குப் பொருளும் தெரிந்துகொள்ள வேண்டும்! அவ்வளவையும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருந்து பரீட்சை எழுத வேண்டும். நல்ல வேளையாக, நம்முடைய பிள்ளைகளில் மிகப் பெரும்பாலானவர், “பரீட்சையில் இலக்கணத்துக் குரிய மார்க் வேண்டாம்!” என்று தீர்மானித்துப் படிக்காமல் விட்டு விடுகின்றனர். அதனாலேயே அவர்கள் மூளை குழம்பாமல் பிழைத்திருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும்.

இப்படி நான் சொல்வதிலிருந்து நான் இலக்கணத்துக்குப் பரம விரோதி என்று சில நண்பர்கள் தீர்மானித்து விடக்கூடும். ஆனால் அது உண்மையன்று.

சில நாளைக்கு முன்பு ஒரு தமிழ்ப் பிரமுகர் என்னிடம், “நீர் இலக்கணமே வேண்டாம் என்று சொல்கிறீராமே? அது நியாயமா? இலக்கணம் இல்லா விட்டால் மொழி வளர்ச்சி என்ன ஆகிறது?” என்று கேட்டார்.

அந்தப் பெரியாருக்கு நான் சொன்ன பதில் :— “ஐயா! மன்னிக்க வேண்டும். இந்தக் காலத்தில் ‘பாலிய மணம் கூடாது’ என்று பலரும் ஒப்புக் கொள்கிறார்கள். குறைந்த பட்சம் பெண்களுக்குப் பதினாறு வயதும், ஆண்களுக்கு இருபது வயதும் அவசியம் ஆகியிருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இதை யொட்டி நான் பாலிய மணத்தைக் கண்டித்து ஒரு கட்டுரை எழுதுவதாக வைத்துக் கொள்ளுங்கள். உடனே ஒருவர் என்னிடம் வந்து, ‘என்ன, ஐயா! கலியாணமே கூடாது என்று நீர் சொல்கிறீராமே? கலியாணமே கூடாது என்றால் சமூகத்தின் ஒழுக்கம் என்ன ஆவது? எல்லாரும் மிருகங்களைப்போல் வாழ்வதா?’ என்று கேட்டால் நான் என்ன பதிலைச் சொல்ல? தாங்கள் இலக்கணத்தைப் பற்றி என்னைக் கேட்பதும் அப்படித்தான் இருக்கிறது. நான் மொழிக்கு இலக்கணமே வேண்டாம் என்று சொல்லவில்லை. சின்னஞ் சிறு குழந்தைகளின் மூளையை நன்னூல் சூத்திரங்களை கெட்டுருப் பண்ணி வறண்டு போகச் செய்யவேண்டாம் என்றுதான் சொல்கிறேன்!” என்றேன்.

மொழி ஆராய்ச்சி மிக அபூர்வமான சுவையுடைய விஷயம். இலக்கணமும் அப்படித்தான். ஆனால் இதெல்லாம் பாஷையில் தேர்ச்சி யடைந்த நிபுணர்களுக்குத்தான் சுவை யளிக்கும். கலாசாலையில் படிக்கும் மாணாக்கர்களுக்கு — இலக்கியச் சுவை கண்டுயக் கண்டவர்களுக்கு—ஓரளவு இலக்கணம் கற்பிக்கலாம். மொழி ஆராய்ச்சியையே முக்கிய பாடமாய் எடுத்துக் கொள்கிறவர்கள் இலக்கணத்தைப் பரிபூரணமாகக் கற்கவேண்டும்.

மற்றவர்களுக் கெல்லாம் மொழியைப் பிழையின்றி எழுதுவதற்கு வேண்டிய இலக்கணம் கற்பித்தால் போதுமல்லவா?— இதற்கு வேண்டிய இலக்கணத்தைப் பிள்ளைகளுக்கு ஒரே மாதத்தில் சுலபமாய்க் கற்றுக் கொடுத்து விடலாமே?

“மகர இறுதி அஃறிணைப் பெயரின்
னகர மொ டுறழா நடப்பன உளவே”
“இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின
தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா
வேற்றுமைக் கிடனாய்த் திணைபால்
[இடத்தொன்று
ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே.”

என்பன போன்ற நன்னூல் சூத்திரங்களை இளங் குழந்தைகள் கெட்டுருச் செய்து ஒப்புவிக்க வேண்டியது மொழி வளர்ச்சிக்கு அவசியந்தானா?

உண்மையில், இப்படி கெட்டுருச் செய்யும் குழந்தைகளின் உடல் நலம் வளருமா? அறிவுதான் வளருமா? (தொடரும்)



பதினோராம் அத்தியாயம்

"என்னைக் கேட்டால்..."

ராகவன் சொன்னதற்குப் பதிலாக எதுவும் சொல்வதற்கு அங்கிருந்தவர்களில் யாருக்கும் நா எழவில்லை. அவனும் பதிலுக்குக் காத்திராமல் வீட்டின் பின்கட்டை நோக்கி விடுவிடு என்று நடந்து சென்றான்.

அவன் மறைந்த பிறகு காமாட்சி அம்மாள் கிட்டா வய்யரைப் பார்த்து, "நீங்கள் ஒன்றும் யோசிக்க வேண்டாம். ராகவனை வழிக்குக் கொண்டு வருவதற்கு நான் ஆயிற்று. எல்லாவற்றுக்கும் நீங்கள் பம்பாய்க்குப் போய்விட்டுச் சீக்கிரம் திரும்பி வந்து சேருங்கள்!" என்றாள்.

ராகவன், 'நான் போய்ப் பெண்ணைப் பார்த்துக் கொள்கிறேன்!' என்று சொன்னது கிட்டாவய்யருக்கு மிக்க சந்தோஷம் அளித்தது. பெண்ணை மாப்பிள்ளைக்குக் காட்டுவதற்காகப் பட்டணம் அழைத்துக் கொண்டு வரும் காரியம் அவருக்குப் பிடிக்கவேயில்லை. அது தம்முடைய கௌரவத்துக்குக் குறைவு என்று கருதினார். அதோடு தம் அருமைப் புதல்வியை அம்மாதிரி சந்தைக்கு அழைத்துக் கொண்டு போவது போல அழைத்துப் போய், யாரோ முன்பின் தெரியாத பையன் அவளைப் பார்த்து 'வேண்டும்' 'வேண்டாம்' என்று சொல்ல இடங் கொடுக்கும் விஷயம் அவர் மனதுக்குப் பெரிதும் கஷ்டம் தந்திருந்தது. ஆகவே, இப்போது ராகவன் சொன்னதை முழுதும் அவர் கவனிக்கக் கூடவில்லை. 'நானே இவர்கள் ஊருக்குப் போய்ப் பெண்ணைப் பார்க்கிறேன்' என்று சொன்னதை மட்டும் நினைத்துக் களிப்படைந்தார்.

ஆகையால் காமாட்சி அம்மாள் கூறியதற்குப் பதிலாக, உற்சாகமான குரலில், "ஆகட்டும்; பம்பாய்க்குப் போய் விட்டுக் கூடிய சீக்கிரம் திரும்பி விடுகிறேன். சௌகரியப்பட்டால் மாப்பிள்ளை என் பின்னோடேயே வரலாம்; நானே அழைத்துப் போகிறேன்!" என்றார்.

"அதற்குள்ளே மாப்பிள்ளை உறவு கொண்டாட ஆரம்பித்து விட்டாயா, கிட்டா? ஓஹோஹோ!" என்றார் சுப்பய்யர்.

"அதற்கென்ன? ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியின் அருள் இருந்தால் அவ்விதமே நடந்துவிடுகிறது. இவர் என்னைக் கூப்பிட்ட சமயம் நான் பூஜை அறையில் படங்களுக்கு அலங்காரம் செய்து கொண்டிருந்தேன். இவர் 'காமாட்சி' என்று என்னைக் கூப்பிட்டபோது, ஸ்ரீ ராம பட்டாபிஷேக படத்துக்குச் சாத்தியிருந்த பூமாலையிலே யிருந்து ஒரு செண்பகப் புஷ்பம் உதிர்ந்தது. நல்ல சகுனம் என்று நினைத்துக் கொண்டேன்" என்றாள் காமாட்சி அம்மாள்.

"அப்படியானால், இந்தக் கலியாணம் நடந்த மாதிரியேதான்! சுப்பய்யரே, இவ்வளவு நாளாக ராகவனுக்குப் பெண் கொடுக்கிறேன் என்று எத்தனை பேர் இந்த வீட்டைத் தேடி வந்திருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்? குறைந்தபட்சம் ஆயிரம் பேர் இருக்கும். அவ்வளவு பேரையும் தட்டிக் கழித்து வந்தவன் இந்த மகராஜிதான். எப்போது இவளுடைய வாயினாலேயே 'இந்தக் கலியாணம் நடக்கும்' என்று சொல்லி விட்டாளோ, அப்போது கட்டாயம் கலியாணம் நடந்தே தீரும்" என்றார் சாஸ்திரிகள்.

"எல்லாம் ஒரு நல்லதற்காகத்தான் இருக்கும்! பரஸ்பரம் இவ்வளவு நல்ல சம்பந்தம் வாய்க்க வேண்டும் என்று பிராப்தம் இருக்கிறபோது, வேறு இடத்தில் கலியாணம் எப்படி நிச்சயமாகும்? கிட்டா கூடத்தான் போன வருஷமெல்லாம் நூறு வரன் பார்த்தான். ஒன்றும் மனதுக்குத் திருப்திகரமாயில்லை என்று தள்ளி விட்டான். இந்த வீட்டுக்குள் கால் வைத்ததும் எப்படியோ கிட்டாவின் மனதுக்குப் பிடித்து விட்டது. தங்களிடம் ஏதோ ஒரு சக்தி இருக்க வேண்டும், சாஸ்திரிகள்வாள்! நம்ம அம்மாளிடத்திலும் அப்படியே ஒரு தெய்விக சக்தி இருக்கிறது."

"ஓய் சுப்பய்யரே! பலே பேர் வழியாயிருக்கிறீரே! இப்படியெல்லாம் முகஸ்துதி செய்து என்ன காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம் என்று உத்தேசம்? அம்மாளிடம் ஏதாவது இன்ஷியூரன்ஸுக்கு அடிப் போட்டிருக்கிறீரோ?" என்று சாஸ்திரிகள் ஆரம்பித்ததும் சுப்பய்யர் பயந்து போனார். பேச்சின் நடுவில் குறுக்கிட்டு, "தயவுசெய்து மன்னிக்க வேண்டும். எனக்கு ஆபீஸுக்கு நேரமாகி விட்டது. இப்போது நாங்கள் போய் வருகிறோம்; இனி மேலேதான் அடிக்கடி சந்திக்க வேண்டியதாயிருக்குமே?" என்று சொல்லிக் கொண்டே சுப்பையர் எழுந்ததும், கிட்டா வய்யரும் எழுந்தார்.

அவர்களை வீட்டு வாசல் வரையில் கொண்டுபோய் விடுவதற்காகச் சாஸ்திரிகளும் எழுந்தார்.

அந்தச் சமயத்தில் காந்தி குல்லா தரித்திருந்த காங்கிரஸ் தொண்டர்கள் நாலு பேர் திடு திடுவென்று வீட்டுக்கு உள்ளே நுழைந்து வந்தார்கள்.

"இது யார் அப்பா இது?" என்று சாஸ்திரிகள் திடுக்கிட்டுக் கேட்டார்.



"ஸார்! பீகார் பூகம்ப நிதிக்காகப் பணம் வசூலிக்கிறோம். தங்களால் இயன்றதைக் கொடுக்க வேண்டும்" என்று அந்தத் தொண்டர்களிலே ஒருவர் கூறினார்.

சாஸ்திரிகள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க "பீஹாராவது, பூகம்பமாவது? அதெல்லாம் இங்கு ஒன்றும் கொடுப்பதற்கில்லை!" என்று கண்டிப்பாகக் கூறினார்.

"ஸார்! அப்படிக் கண்டிப்பாகச் சொல்லக் கூடாது! லட்சக்கணக்கான ஜனங்கள் வீடு இழந்து வாசல் இழந்து சொத்து இழந்து......"

"உயிரையே இழந்து தவிக்கிறார்கள்! எல்லாம் தெரியும், அப்பா! என்னை கிராட்சர குட்டி என்பதாக நினைத்துக்

கொண்டு பேசுகிறீரோ? பூகம்பத்துக்கு மறு நாளே நான் பாபு ராஜேந்திர பிரஸாத்துக்குத் தந்தி மணியார்டரில் என்னுடைய நன்கொடையை அனுப்பி விட்டேன்! நீங்கள் போய் வேறு யாராவது நாலு பேரைப் பாருங்கள்! வீண் பொழுது போக்க வேண்டாம்!'' என்றார் சாஸ்திரிகள்.

"நாலு பேரைப் பார்ப்பதற்கு நீங்கள் சொல்ல வேண்டுமாக்கும்?'' என்று முணு முணுத்துக் கொண்டே தொண்டர்கள் சென்றார்கள்.

"பார்த்தீர்கள் அல்லவா? ஒரு நிமிஷம் கதவைத் திறந்து வைத்தால் போதும்! பூகம்பம், எரிமலை, புயற் காற்று, காங்கிரஸ், கான்பரன்ஸ் என்று சொல்லிக்கொண்டு யாராவது யாசகம் கேட்க வந்து விடுகிறார்கள். இல்லாவிட்டால் அங்கே உற்சவம், இங்கே பஜனை என்று கையில் சந்தாப் புத்தகத்துடன் வந்து விடுகிறார்கள். கொடுத்துக் கொடுத்து எனக்கும் சலித்துப் போய் விட்டது. மேலும் நான் என்ன பண்ணையாரா? ஜமீன்தாரா? நன்செய் நிலம் பொன்னாக விளைகிறதா! ஏதோ வெள்ளைக்கார கவர்ன்மெண்டின் புண்ணியத்திலே மாதம் பிறந்ததும் பென்ஷன் வந்து கொண்டிருக்கிறது. இந்தப் புண்ணியவான்கள் சுயராஜ்யம் சம்பாதித்து விட்டால், நம்ப பென்ஷன் வாயிலே மண் விழுந்தாலும் விழுந்து விடும்! கராச்சி காங்கிரஸிலே மாதம் ஐந்நூறு ரூபாய்க்கு மேலே யாருக்கும் சம்பளமே கூடாது என்று தீர்மானம் செய்திருக்கிறார்களாம்! தெரியுமோ, இல்லையோ? அப்படியே நாம் மனமிரங்கி இவர்களிடம் ஏதாவது பணம் கொடுக்கிறோமென்று வைத்துக் கொள்ளுங்கள். கொடுத்த பணம் பீஹார் நிதிக்கு நேரே போய்ச் சேருகிறதென்று நிச்சயம் உண்டா? என்னைக் கேட்டால், பூகம்பம் போன்ற விஷயங்களில் மனிதன் தலையிடவே கூடாது என்று சொல்வேன். பகவானே பார்த்துச் செய்திருக்கிற காரியத்தில் சுண்டைக்காய் மனுஷன் தலையிட்டு என்ன செய்துவிட முடியும், ஸார்!...''

இவ்விதம் பேசிக்கொண்டே பத்மலோசன சாஸ்திரிகள் கிட்டாவய்யரையும் சுப்பய்யரையும் அழைத்துக்கொண்டு வாசற் பக்கம் போனார். அவர்கள் வீட்டை விட்டு இறங்கிய உடனே கதவைச் சாத்திப் பலமாகத் தாளிட்டு விட்டுத் திரும்பினார்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

கராச்சியில் நடந்தது

'தேவி ஸதன' இல்லத்தின் பின் கட்டில் ஒரு புறத்தில் சமையல் அறையும் அதற்கு எதிர்ப் புறத்தில் காமாட்சி அம்மாளின் பூஜை அறையும் இரண்டுக்கும் மத்தியில் விசாலமான கூடமும் இருந்தன. கூடத்தின் நடுவில் ஊஞ்சல் போட்டிருந்தது. ராகவன் பின் கட்டுக்கு வந்து ஊஞ்சலில் உட்கார்ந்து தாயாரின் வரவை எதிர் நோக்கிக் கொண்டிருந்தான். அவனுடைய கால்கள் கீழே தரையைத் தொட்டதும், இலேசாக ஊஞ்சல்



ஆடியது. ஊஞ்சலுடன் அவனுடைய உள்ளமும் ஊசலிாடியது.

கடலில் முழுகிச் சாகப் போகிறவனுக்கு அவனுடைய வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் ஒரு நிமிஷத்தில் வெள்ளித் திரையில் தோன்றுவது போல் மனக்கண் முன்னால் தோன்றி மறையும் என்று சொல்லுவார்கள். அம்மாதிரி இச்சமயம் ராகவனுடைய மனக்கண் முன்னால் சிற்சில சம்பவங்கள் அதிவேகமாகத் தோன்றின. காரிருள் சூழ்ந்திருக்கும் வேளையில் மின்னல் வெளிச்சத்தில் தோன்றி மறையும் காட்சிகளைப் போல் அச்சம்பவங்கள் தோன்றி மறைந்தன.

புது டில்லியில் பொக்கிஷ இலாகாவின் தலைமை உத்தியோகஸ்தரைப் பார்த்து விட்டு ராகவன் ஊருக்குத் திரும்ப எண்ணிய போது கராச்சி வழியாகப் போவது என்று தீர்மானித்தான். கராச்சியில் அந்த வருஷம் காங்கிரஸ் மகாசபை கூடியது. அனேகமாக இந்திய இளைஞர்கள் எல்லாரையும் போல் ராகவன் கலாசாலை மாணாக்கனாயிருந்த போது தேசீய சுதந்திரத்தில் ஆவேசம் கொண்டிருந்தவன். அதோடு சமூக சீர்திருத்தப் பற்றும் கொண்டிருந்தான். இந்தியா தேசத்தி லிருந்து சாதி-சமய வேற்றுமைகளை யெல்லாம் ஒழித்தால் தான் இந்தியாவுக்குக் கதி மோட்சம் என்ற உறுதி அவனுக்கு ஏற்பட்டிருந்தது.

ஆகையால் புது டில்லிக்குப் போன காரியம் ஆன பிறகு கராச்சிக்குச் சென்று காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் பார்வையாளனாக ஆஜராகி நடவடிக்கைகளைக் கவனித்தான். அப்படிக் கவனித்ததினால் அவனுக்கு நம் தேசீயத் தலைவர்களைப் பற்றிய விஷயத்தில் மதிப்பு அதிகமாகவில்லை. "உலகம் எவ்வளவு முன்னேற்றம் அடைந்துகொண்டிருக்கிறது? அமெரிக்க நாட்டில் போர்டு மோட்டார் தொழிற் சாலையில் நிமிஷத்துக்கு முந்நூறு மோட்டார்கள் உற்பத்தியாகின்றன! இப்பேர்ப்பட்ட இயந்திர யுகத்தில் இவர்கள் கைராட்டையைக் கட்டிக் கொண்டு அழுகிறார்களே! மணிக்கு 300 கஜம் நூல் நூற்பதாமே! கடவுளே! இப்படிப்பட்ட தலைவர்களால் இந்தியா எந்தக் காலத்தில் முன்னேறப் போகிறது?" என்று எண்ணி அலுப்படைந்தான்.

பிறகு இயந்திர யுகத்திற்கு அறிகுறியாக அந்த நாளில் கருதப்பட்ட ஆகாச விமானம் பார்க்கச் சென்றான். அப்போது கராச்சியில் புதிதாக ஆகாச விமான கூடம் கட்டியிருந்தார்கள். வாடகை விமானங்கள் வந்திருந்தன. ஐந்து ரூபாய் கொடுத்தால் ஆகாச விமானத்தில் ஐந்து நிமிஷப் பிரயாணம் செய்யலாம். விமானம் ஆகாசத்தில் இரண்டாயிரம் அடி உயரம் விர்ரென்று ஏறிக் கராச்சி நகரைச் சுற்றி ஒரு தடவை வட்டமிட்டு விட்டு மறுபடி கீழே வந்து இறங்கியது.

விமான கூடத்துக்குப் போனபோது ராகவன் விமானத்தில் ஏறுவது என்னும் நிச்சயத்தோடு போகவில்லை. ஏதோ பார்க்கலாம் என்று போனான். அங்கே போனபிறகு கட்டாயம் ஏறியாக வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. ஏனெனில், ஆகாச விமானம் ஏறுவதையும் இறங்குவதையும் வேடிக்கை பார்ப்பதற்காக ஜனங்கள் நின்று கொண்டிருந்த இடத்தில் ராகவனுக்குப் பக்கத்தில் மூன்று வடநாட்டு ஸ்திரீகள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருத்தி கொஞ்சம் வயதானவள். பிராயம் முப்பதிலிருந்து நாற்பது வரை இருக்கலாம். மற்ற இருவரும் இளம் பெண்கள். ஒருத்தி கட்டையாயும் குட்டையாயும் மாநிறமாயும் இருந்தாள். அவளை இலட்சணமானவள் என்றே சொல்ல முடியாது. இன்னொரு பெண்,...... ஆகா! ...... அவளை வர்ணிப்பது சாத்தியமில்லை. கார்த்திகை மாதத்துப் பூரண சந்திரனுடைய சந்தன நிறக் கிரணங்கள் ஒரு மந்திரவாதியினுடைய மந்திரத்தினால் பெண் உருக் கொண்டது போலத் தோன்றினாள். பனிக் காலத்துக் காலை நேரத்தில் புல் நுனியில் நிற்கும் முத்துப் பனித் துளிகள் காலைச் சூரிய கிரணங்களினால் ஒளி பெற்றுத் திகழ்வது போல் அவளுடைய கண் விழிகள் பிரகாசித்தன. பாலகோபாலன் அன்னை யசோதையிடம் வெண்ணெய் கேட்பதற்காகத் தவழ்ந்து செல்லும்போது அவனுடைய அரையில் கட்டிய கிண்

கிணிகள் ஒலிப்பது போல் அந்தப் பெண்ணின் குரல் ஒலித்தது.

அத்தகைய போதை தரும் இன்பக் குரலில் அப்பெண், "நீங்கள் மதராஸ்காரரா?" என்று ஆங்கில பாஷையில் கேட்டபோது, ராகவன் மிக ரஸித்த ஷெல்லி-கீட்ஸ் கவிதைகளைக் காட்டிலும் இனிமை வாய்ந்த கவிதையாக அந்த வார்த்தைகள் அவன் செவியில் தொனித்தன. தன்னைத் தான் அப் பெண் கேட்கிருள் என்பதை ராகவன் உணர்ந்து நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு ஒரு நிமிஷம் ஆயிற்று. அதற்கு அவன் பதில் சொல்லிய பிறகு "நீங்கள் விமானத்தில் ஏறிப் பார்க்கப் போகிறீர்களா?" என்று அப்பெண் கேட்டாள் "ஆம்: அதற்காகத்தான் வந்திருக்கிறேன்!" என்று ராகவன் பளிச்சென்று பதில் சொல்லியபோது அவனுடைய குரல் அவனுக்கே வியப்பை அளித்தது. "அடே ராகவா! என்ன துணிச்சலாகப் பொய் சொல்கிருய்?" என்று இடித்துக் காட்ட ஆரம்பித்த தன்னுடைய மனச் சாட்சியை, மறியல் செய்த தேசத் தொண்டர்களை மலபார் போலிஸார் குண்டாந்தடியால் அடிப்பதுபோல் அடித்து மூர்ச்சையடையச் செய்துவிட்டு, "நீங்களும் விமானம் ஏறுவதற்காக வந்தீர்களா?" என்று ராகவன் கேட்டான். "நீங்கள் முதலில் ஏறிப் போய்விட்டு வந்து எப்படி இருந்தது என்று சொல்லுங்கள்!" என்ருள் அந்தப் பெண்.

அவள் பக்கத்திலே இருந்த இன்னொரு பெண் அவள் காதில் ஏதோ முணுமுணுக்கவே இருவரும் கலகலவென்று சிரித்தார்கள். அவ்விதம் கலந்தெழுந்த சிரிப்பில் ராகவனுடன் பேசிய பெண்ணின் சிரிப்பொலி மட்டும் தனிப்படப் பிரிந்து ராகவன் காதில் விழுந்து அவனைப் பரவசப்படுத்தியது. அந்த இரு பெண்களுக்குமிடையே தோற்றத்திலும், மேனி நிறத்திலும், குரலிலும், கண் பார்வையிலும் எத்தனை வித்தியாசம் என்று ராகவன் எண்ணி எண்ணி வியந்தான். மேலும் அவர்களுடைய சம்பாஷணையிலிருந்து இருவரில் அழகியின் பெயர் தாரிணி என்றும், இன்னொருத்தியின் பெயர் நிருபமா என்றும் தெரிந்துகொண்டான். அவர்களுடைய பேச்சிலிருந்தும் அவர்கள் உடுத்திக் கொண்டிருந்த கதர்ச் சேலைகளிலிருந்தும் அந்த மூன்று பெண்மணிகளும் கராச்சி காங்கிரஸில் ஸ்திரீ தொண்டர் படையில் சேர்ந்து சேவை செய்வதற்கு வந்தவர்கள் என்றும், காங்கிரஸ் கூட்டம் முடிந்த பிறகு தன்னைப் போலவே அவர்களும் ஊர் சுற்றிப் பார்க்கிருர்கள் என்றும் தெரிந்து கொண்டான்.

ராகவன் ஆகாச விமானத்தில் ஏறி வானத்தில் வட்டமிட்ட போதெல்லாம் அவனுடைய நினைவு மட்டும் பூமியிலேயே சஞ்சரித்துக் கொண்டிருந்தது. இன்னும் சரியாகச் சொல்வதாயிருந்தால் கீழே பூமியில் நின்ற தாரிணியைச் சுற்றிச் சுற்றி அவன் மனம் வட்டமிட்டுக் கொண்டிருந்தது என்று சொல்ல வேண்டும்.

விமானம் கீழே இறங்கியதும் ராகவனுடைய கண்கள் அந்த மூன்று பெண்களும் நின்ற இடத்தைத் தேடின. ஒரு கணம் அவர்கள் அங்கு காணப்படாதிருக்கவே அவனுக்கு உலகமே இருண்டு விட்டதாகத் தோன்றியது. சற்றுத் தூரத்தில் இன்னொரு இடத்தில் அவர்கள் நிற்பதைப் பார்த்தவுடனேதான் உலகில் மறுபடியும் சூரியன் பிரகாசித்தது. ராகவன் அந்த இடத்தை நோக்கி விரைந்து சென்ருன். தாரிணி ஆவல் ததும்பிய முகத்துடனே அவனைப் பார்த்து. "எப்படி இருந்தது?" என்று கேட்டாள். ராகவன் தன்னுடைய மனது பூமியிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தது என்னும் உண்மையைச் சொல்லாமல் வானப் பிரயாணத்தின் சுகங்களைப் பற்றி 'அற்புத ரசம்' தோன்ற வர்ணித்தான். "நீங்களும் விமானம் ஏறப் போகிறீர்கள் அல்லவா?" என்று கேட்டான். தாரிணி ஏமாற்றம் தொனித்த குரலில் "இல்லை: இவர்கள் இருவரும் பயப்படுகிருர்கள்! என்னையும் போகக் கூடாது என்கிருர்கள்!" என்ருள்.

"பயப்பட வேண்டிய அவசியமே இல்லை; ஸீட்டுகள் அதிகம் உள்ள விமானமாயிருந்தால் நானே உங்களை அழைத்துப் போவேன். ஆனல் இந்த விமானத்தில் ஒரே ஸீட்டுதான் இருக்



''......டில்லிமா நகரின் பழைய கோட்டை கொத்தளங்கள், மசூதிகள், பளிங்குக்கல் அரண்மனைகள் ஆகியவற்றுக்குத் தன் காதலியைஅழைத்துப் போய்க் காட்டினான்........''

ஏறது. விமானியைத் தவிர ஒருவர் தான் ஏறலாம்!" என்று ராகவனும் ஏமாற்றமான குரலில் கூறினான்.

"சரிதான்; இனிமேலாவது நாம் போகலாமல்லவா?" என்று மற்றொரு பெண் கேட்க, தாரிணி ராகவனைப் பார்த்து, "நாங்கள் போக வேண்டும்!" என்று சொல்லி விட்டுத் திரும்பினாள். சற்றுத் தூரத்தில் நின்ற டாக்ஸி காரில் அவர்கள் ஏறும் போது தான் நின்ற திசையைத் தாரிணி பார்த்ததாக ராகவனுக்கு ஒரு பிரமை உண்டாயிற்று. பிரமை என்று ஏன் சொல்ல வேண்டும்? உண்மையாகவே இருக்கலாமல்லவா?

ஆகாச விமானம் ஏறிய அநுபவத்துக்குப் பிறகு ராகவன் கப்பல் பிரயாண அநுபவத்தையும் பெறுவதற்கு விரும்பினான். கராச்சி காங்கிரஸுக்கு வந்திருந்தவர்களிலே பலர் கடல் மார்க்கமாகப் பம்பாய்க்குச் சென்றார்கள். ராகவனும் ஸிந்தியா கம்பெனிக்குச் சொந்தமான கப்பல் ஒன்றிற்கு டிக்கட் வாங்கிக் கொண்டு ஏறினான். அந்தக் கப்பல் கடலோரமாக மட்டும் ஓட்டுவதற்குரிய மிகச் சிறிய கப்பல். அதில் மூட்டை முடிச்சுகள், பெட்டி படுக்கைகள், உணவுக் கூடைகள் ஆகியவற்றுடன் சக சக வென்று ஜனங்கள் நெருங்கி நிறைந்திருந்தார்கள். அந்த வடக்கத்தி ஜனங்களின் அழுக்குத் துணிகளையும் ஆபாச வழக்கங்களையும் 'ஆ ஓ' என்ற கூச்சல்களையும் ராகவன் பார்த்து விட்டு, 'கடவுளே! இதில் எப்படி முப்பத்தெட்டு மணி நேரம் பொழுது போக்குவது?' என்பதாக எரிச்சல் அடைந்தான். ஆனால் கப்பல் புறப்படும் சமயத்தில் அவசரமாகப் படகில் வந்து ஏணியில் ஏறிக் கப்பலில் இறங்கிய மூன்று ஸ்திரீகளைக் கண்டதும் ராகவனுடைய மனோபாவம் அடியோடு மாறி விட்டது. அந்த ஆபாசமான அழுக்கு நிறைந்த பழைய ஓட்டைக் கப்பல் தட்சணமே கந்தர்வ பூமியாக மாறிவிட்டது. ராகவனைக் கப்பலில் பார்த்ததும் தாரிணிக்கும் ஒரே ஆச்சரியமாய்ப் போய்விட்டதென்று அவளுடைய முகபாவத்திலிருந்து தெரிய வந்தது. அந்த ஆச்சரியத்திலே சந்தோஷம் கலந்திருந்தது என்பது ராகவனுடைய பார்வைக்குத் தெரியாமற் போகவில்லை.

ராகவன் வடநாட்டுக்கு யாத்திரை வந்தது அதுதான் முதல் தடவை. தாரிணியோ பம்பாய் வாசி. எனவே வடநாட்டைப் பற்றியும் வடநாட்டு மக்களின் வழக்க பழக்கங்களைப் பற்றியும் தாரிணியிடம் ராகவன் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு எத்தனையோ விஷயங்கள் இருந்தன. தாரிணியும் சென்னை மாகாணத்தைப் பற்றிப் பல விஷயங்கள் ராகவனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பினாள். ஆகவே இருவருக்கும் பேசுவதற்குப் பல விஷயங்கள் இருந்தன. விஷயம் இல்லாவிட்டாலும் இருவரும் நல்ல புத்திசாலிகள் ஆதலால் விஷயங்களைக் கற்பனை செய்து கொண்டார்கள். உண்மையில் பேசுவதற்கு விஷயங்கள் அவர்களுக்கு அவ்வளவு அவசியமாகத் தேவையுமில்லைதான்!

அருகில் இருந்து ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டிருந்தாலே போது மென்ற மனோ நிலையில் இருந்தார்கள். ஆனால் கப்பலில் எல்லாப் பக்கங்களி லேயும் நெருங்கி யிருந்த மற்றவர்க ளுடைய கவனத்தைக் கவராதிருக்கும் பொருட்டு அவர்கள் ஏதோ பேசுவது போலப் பாசாங்கு செய்யவேண்டி யிருந்தது. இத்தகைய சம்பாஷணைப் பாசாங்குகளின் போது தாரிணிக்குத் தமிழ் நன்றாய்ப் பேசத் தெரியும் என்பதை அறிந்து ராகவன் அளவற்ற வியப்பும் களிப்பும் அடைந்தான்.

கப்பலில் தாரிணியையும் அவளுடைய தோழியையும் போல் இன்னும் சில தேச சேவிகைகளும் இருந்தார்கள். தாரிணியின் அழகை எடுத்துக் காட்டுவதற்காகவே அவள் பக்கத்தில் இருந்தாள் போலத் தோன்றிய நிருபமாவுக்கு தேக சௌந்தரியம் இல்லாவிட்டாலும் இனிமையான குரல் இருந்தது. அவளுடைய தலைமையில் மற்றத் தேச சேவிகைகளும் சேர்ந்து ஹிந்தி தேசிய கீதங்களைப் பாடினார்கள். அப்போது மிகப் பிரபலமா யிருந்த "ஜண்டா ஊஞ்சா ரஹே ஹமாரா!" (நம்முடைய கொடி உயரப் பறக்கட்டும்!) என்ற கீதத்தைப் பாடினார்கள். பிரபல உருது கவியான ஸர் முகம்மது இக்பால் பாடிய "ஸாரே ஜஹான் ஸே அச்சா ஹிந்துஸ்தான் ஹமாரா!" (உலகிலுள்ள எல்லாத் தேசங்களிலும் நம்முடைய ஹிந்துஸ்தான் சிறந்தது!) என்னும் கீதத்தைப் பாடினார்கள். இந்தக் கீதங்கள் எல்லாம் தெய்வ லோகத்தில் கந்தர்வ கன்னிகைகள் பாடும் கீதங்க ளாகவே ராகவனுக்குத் தோன்றியது. இரண்டாவது கீதத்தின் பொருளைத் தாரிணியிடம் கேட்டுக் தெரிந்து கொண்



"......தாரிணி அவனை எலிபெண்டாத் தீவுக்கு அழைத்துக் கொண்டு சென்று அங்குள்ள குகைச் சிற்ப அற்புதங்களை யெல்லாம் காட்டினாள்.........."

டான். "சந்தேகம் என்ன? உன்னைப் போன்ற பெண்கள் இந்த நாட்டில் பிறந்திருக்கும் போது உலகில் வேறு எந்த தேசம் இந்தியாவுக்கு இணையாக முடியும்?" என்று சொன்னான். அதைக் கேட்டுத் தாரிணி கன்னங்கள் குழியச் சிரித்த தோற்றம் ராகவன் மனக் கண் முன்னால் இன்றைக்கும் அழியா வர்ணத்தில் தீட்டிய அஜந்தா சித்திரத்தைப் போல் நின்றது.

இதெல்லாம் நடந்து இப்போது ஏறக்குறைய மூன்று வருஷங்கள் ஆகின்றன. இதற்கிடையில் தாரிணிக்கும் ராகவனுக்கும் அடிக்கடி கடிதம் போய் வந்து கொண்டிருந்தது. அவை காளிதாசனும் கம்பனும் டாகூரும் பாரதியும் பெருமைப் படும்படியான கவி உணர்ச்சி ததும்பிய கடிதங்கள். கடிதங்கள் எழுதுவதோடு அவர்கள் நின்று விடவில்லை. ராகவன் ஒரு முறை பம்பாய்க்குப் போயிருந்தான். தாரிணி அவனை எலிபெண்டாத் தீவுக்கு அழைத்துக் கொண்டு சென்று அங்குள்ள குகைச் சிற்ப அற்புதங்களை யெல்லாம் காட்டினான். பிறகு தாரிணி ஒரு தடவை டில்லிக்குப் போனாள். புது டில்லியில் உத்தியோகம் பார்த்த ராகவன் டில்லி மாநகரின் பழைய கோட்டை கொத்தளங்கள், பிரம்மாண்டமான மசூதிகள், மொகலாய மன்னர்களின் ஒப்பற்ற அழகு வாய்ந்த பளிங்குக்கல் அரண்மனைகள் ஆகியவற்றுக்கெல்லாம் தன் காதலியை அழைத்துப் போய்க் காட்டினான். அப்போதெல்லாம் அவர்கள் கேவலம் இந்த மண்ணுலகின் கடினமான கட்டாந்தரையில் காலால் நடக்கவில்லை. கற்பனை உலகத்தில் ஆனந்த சாகரத்தின் அலைகளின் மேலாக மிதந்து கொண்டே சென்றார்கள்.

அப்புறம் ஆக்ராவில் உள்ள உலக அற்புதங்களில் ஒன்றான தாஜ்மகாலுக்குப் போவது பற்றி இருவரும் யோசித்தார்கள். அதைச் சில காலம் தள்ளிப்போடலாம் என்று தீர்மானித்துக் கொண்டார்கள். யார் பார்ப்பார்களோ, என்ன நினைப்பார்களோ, என்ன சொல்வார்களோ என்ற பயத்துக்கெல்லாம் இடமில்லாமல் இருவரும் சதிபதிகளாய்க் கைகோத்துக் கொண்டுபோய் ஷாஜஹானின் ஒப்பற்ற காதற் கனவைப் பார்த்து வர வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

சுருங்கச் சொன்னால், இந்த மூன்று வருஷ காலமும் ராகவனுடைய வாழ்க்கையில் கிருத யுகமாக இருந்தது. ஒருபுறம் அவன் உத்தியோக ஏணியில் படிப்படியாக ஏறிக் கொண்டிருந்தான். அவனுடைய இலாகாத் தலைவரான பெரிய துரை அவனைத் தம்முடன் சீமைக்கு அழைத்துப் போவதாகச் சொல்லியிருந்தார். மற்றொரு புறத்தில் ராகவன் காதல் மயமான கற்பனைக் கனவு உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான். இந்த நாட்களில் அவன் எந்தப் பக்கம் பார்த்தாலும் சுவர்ண ரேகைகள் படர்ந்திருக்கக் கண்டான். இடைவிடாமல் அவனுடைய செவிகளில் தேவலோகத்து மதுர வீணாகானம் பாய்ந்து கொண்டிருந்ததை உணர்ந்தான். பழைய டில்லி நகரத்தின் குப்பையும் கூளமும் துர் நாற்றமும் நிறைந்த குறுகிய வீதிகளில் அவன் நடந்தபோது கூட மொகலாய மன்னர்கள் உபயோகித்த ஒப்பற்ற அத்தரின் வாசனையையும் அம் மன்னர்களின் அந்தப்புரத்து நாரீமணிகள் குளித்த பன்னீரின் நறுமணத்தையும் கற்பனை உணர்ச்சியால் முகர்ந்து அநுபவித்துக் கொண்டிருந்தான்.

ஆகா! அந்த இன்பத்துக்கெல்லாம் இப்போது முடிவு வந்து விட்டதா? எப்படி வந்தது? எதனால் வந்தது? நம்பவே முடியவில்லையே?

* * *

வந்திருந்தவர்கள் விடை பெற்றுச் சென்றபிறகு காமாட்சி அம்மாள் பின் கட்டுக்கு வந்தாள். கவலை தோய்ந்த முகத்துடன் ராகவன் ஊஞ்சலில் உட்கார்ந்து இலேசாக ஆட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். சாவதானமாகக் கூடத்துக்கு வந்து ஊஞ்சலுக்கு எதிரே சுவர் ஓரமாகக் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்தாள். தன்னுடைய வருகையை எதிர்பார்த்துத் தன் மகன் அங்கே காத்துக் கொண்டிருக்கிறான் என்பது காமாட்சி அம்மாளின் உள் மனதுக்கு முன்னமே தெரிந்திருந்தது. (தொடரும்)



கோத்தகிரி
மகாத்மா காந்தி
ஞாபகார்த்த
போர்டு உயர்தர பாடசாலை
கட்டிட நிதிக்காக

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

*

சங்கீதரத்ன ஸ்ரீ சௌடய்யா —பிடில்
கல்பாத்தி ராமனுஜன் — மிருதங்கம்
ஆலங்குடி ராமச்சந்திரன் — கடம்

9 - 5 - 48 ஞாயிறு மாலை 2 - 30 மணிக்கு
உதகை ப்ளுமவுண்டன் டாக்கீஸில்

கவர்னர் மே. த. சர். ஆர்ச் பால்ட் நை அவர்கள் தலைமையிலும் மே. த. லேடி நை அவர்கள் முன்னிலையிலும் நடைபெறும்

கோத்தகிரி
ம. கா. ஞா. போ. உ. பா. கட்டிட நிதிக் கமிட்டி

★

டிக்கெட்டுகள்:
ரூ. 250, 100, 50, 25, 10, 5

★

மைக் & ஒலிபெருக்கி
ஏற்பாடு: திருச்சி ரேடியோ
சேல்ஸ் & சர்வீஸ்

கல்யாணமா?

2000 டிசைன்களில் — பட்டுச் சேலைகள்
விலை ரூ. 15—0—0 முதல் ரூ. 600—0—0 வரை

பெனாரஸ், பெங்களூர், பெங்கால், கொள்ளேகாலம், ஆரணி, காஞ்சீபுரம் முதலிய ஊர்களில் நெசவுக் கலை நிபுணர்களின் மேற்பார்வையில் திறமை மிகுந்த நெசவாளர்களால், நேர்த்தியாக நெய்யப்பட்டு அழகான பார்டர்கள், அற்புத முந்திகளுடன் கொண்டு வந்து குவித்துள்ளோம்.

400 டிசைன்களில்—வெண்பட்டு அங்க வஸ்திரங்கள், துப்பட்டாக்கள், வேஷ்டிகள்
விலை ரூ. 15—0—0 முதல் ரூ. 150—0—0 வரை

4000 டிசைன்களில் — நூல் சேலைகள்
விலை ரூ. 5—0—0 முதல் ரூ: 50—0—0 வரை

1500 டிசைன்களில் — வேஷ்டிகள், டவல்கள், அங்க வஸ்திரங்கள்
விலை ரூ. 1—0—0 முதல் ரூ. 100—0—0 வரை

கோயமுத்தூர், உறையூர், சேலம், துவினி, புல்லம்பேட்டை, ஜம்மல்மடுகு, வங்காரம் பேட்டை முதலிய ஊர்களிலிருந்து ஏராளமாக கொண்டு வந்து குவித்துள்ளோம். முஸ்லீம்களுக்கும் முஸ்லீம் கல்யாணங்களுக்கும் வேண்டிய பல ரகங்கள் வந்துள்ளன

இன்றே வந்து பார்வையிடுங்கள்!

கஸ்தூரிபாய் கம்பெனி

உயர்தர பட்டு நூல், ஜவுளி வியாபாரிகள்

மேல வீதி :: நெய்பாம்

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ரா.கி.

27. பிரசார யாத்திரை

ஸர் பிரோஸிஷா மேத்தா சொல்லியிருந்தபடி, பம்பாயில் பொதுக் கூட்டத்துக்குக் குறிப்பிட்டிருந்த தினத்துக்கு முதல் நாள், காந்திஜி அவரைப் போய்ப் பார்த்தார்.

"காந்தி! பிரசங்கம் தயாரா யிருக்கிறதா?" என்று மேத்தா கேட்டார்.

காந்திஜி "பிரசங்கம் தயாரிக்கவில்லை; ஞாபகத்திலிருந்து பேசிவிடலாம் என்றிருக்கிறேன்" என்றார்.

"அதெல்லாம் இந்த பம்பாயில் சரிக்கட்டி வராது. நாம் நடத்தும் பொதுக் கூட்டத்தினால் பயன் ஏற்பட வேண்டுமானால் உமது பிரசங்கத்தை எழுதி அச்சுப் போட்டுக்கொண்டு வந்துவிட வேண்டும்! இன்றிரவு பதினொரு மணிக்குள் பிரசங்கத்தை எழுதிக்கொண்டு வந்துவிட வேண்டும். தெரிகிறதா?" என்று கண்டிப்பாகச் சொன்னார் ஸர் பிரோஸிஷா மேத்தா.

ஸர் பிரோஸிஷா சொன்னபடியே காந்திஜியும் செய்தார். அது எவ்வளவு நல்ல யோசனை என்று கூட்டத்தின்போது தெரிய வந்தது. பொதுக் கூட்டம் பம்பாயில் அப்போது பிரசித்தி பெற்றிருந்த ஸர் கவாஸ்ஜி ஜிஹாங்கீர் மண்டபத்தில் நடைபெற்றது. அந்த மண்டபத்தில் அன்று கூடியிருந்தது போன்ற கூட்டத்தை அதற்கு முன்னால் காந்திஜி பார்த்ததே கிடையாது. அச்சுப் போட்ட பிரசங்கத்தைப் படிக்கும் போது காந்திஜியின் உடம்பு நடுங்கிற்று. அக்கிராசனம் வகித்த ஸர் பிரோஸிஷா மேத்தா அடிக்கடி "உரக்கப் பேசுங்கள்" "உரக்கப் பேசுங்கள்" என்று சொல்லி உற்சாகப்படுத்தினார். இதனால் காந்திஜியின் குரல் மேலும் மெலிவடைந்து வந்தது.

காந்திஜியின் நண்பரான ஸ்ரீ கேசவ ராவ் தேஷ்பாண்டே என்பவர் பக்கத்தில் இருந்தார். அவருடைய குரல் பலமானது. காந்திஜியின் பிரசங்கத்தைத் தாம் படிக்கிறதாக அவர் முன் வந்தார். காந்திஜியும் அதற்கிணங்கி அச்சுப் பிரசங்கத்தை அவரிடம் கொடுத்தார். ஆனால் ஸ்ரீ தேஷ்பாண்டே படிப்பதைக் கேட்கச் சபையோர் தயாராயில்லை. "வாச்சா! வாச்சா!" என்று கத்தினார்கள். அதாவது ஸர் பிரோஸிஷாவின் பிரதம சிஷ்யரான ஸ்ரீ டி. இ. வாச்சா பேச வேண்டுமென்ற தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தார்கள்.

உடனே ஸ்ரீ டி. இ. வாச்சா எழுந்து பிரசங்கத்தைப் படிக்க ஆரம்பித்தார். சபையோர் கரகோஷம் செய்தார்கள். பிறகு கூட்டத்தில் அமைதி நிலவியது. முடிவுவரையில் சபையோர் கவனமாகக் கேட்டார்கள். தென்னாப்பிரிக்கா இந்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைப் பற்றிப் பிரசங்கத்தில் குறிப்பிட்ட போதெல்லாம் "வெட்கம், வெட்கம்!" என்று கத்தினார்கள்.

இவ்விதம் பொதுக் கூட்டத்தின் நோக்கம் நிறைவேறியது பற்றிக் காந்திஜி மகிழ்ந்தார். கூட்ட முடிவில் ஸர் பிரோஸிஷா மேத்தா காந்திஜியைப் பார்த்து, "உம்முடைய பிரசங்கம் மிக்க நன்றா யிருந்தது!" என்று சொன்ன போது காந்திஜி ஆனந்தக் கடலில் மூழ்கினார். அவ்வளவு பெரிய பிரமுகரிடம், பம்பாயின் முடிசூடா மன்னரிடம், "நன்றா யிருந்தது" என்று அத்தாட்சி பெறுவது பெரிய காரியம் அல்லவா?

பிற்காலத்தில் ஸர் பிரோஸிஷா மேத்தா பொது ஜனங்களின் பக்திக்கு உரியவரா

விருந்த போதே காலமானார். ஆனால் ஸ்ரீ டி. இ. வாச்சா ஸர் டி. இ. வாச்சா ஆகி, பழுத்த மிதவாதியாகி, பிரிட்டிஷ் அரசாங்கத்தை ஆதரிப்பவராகி, தேசிய இயக்கத்துக்கு எதிரியாகி, இந்தியப் பொது மக்களின் அதிருப்திக்குப் பாத்திரமாகி, காலகதி அடைந்தார்.

தம்பி! பேச்சுத் திறமையும் பிரசங்கத் திறமையும் மட்டும் உலகில் ஒருவருக்கு உயர்வை அளித்துவிட முடியாது. அப்படி அடைந்த உயர்வும் நிலைத்து நில்லாது. ஒழுக்கத்தினாலும் தியாகத்தினாலும் இடைவிடாத தொண்டினாலுந்தான் ஒருவருக்கு உண்மையான உயர்வு ஏற்படும்.

அன்று தாம் எழுதி அச்சிட்ட பிரசங்கத்தைத் தாமே உரத்து வாசிக்க முடியாமல் காந்தி மகான் திண்டாடினார். அவர் எழுதிய பிரசங்கத்தை இன்னொருவர் படிக்க வேண்டியதாயிருந்தது.

அதே காந்தி மகாத்மா பிற்காலத்தில் பத்து லட்சம் மக்கள் அடங்கிய பல பொதுக் கூட்டங்களில் பேசினார். மக்கள் நிச்சப்தமாயிருந்து அவருடைய வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையையும் பயபக்தியுடன் கேட்டார்கள்.

கடைசியில் காந்திஜி ஒரு நீசனுடைய துப்பாக்கி வேட்டினால் தம் உயிரையே நீத்தபோது இந்தப் பூவுலகின் மக்கள் எல்லாம் நெக்குருகி நின்றார்கள்.

இதிலிருந்து ஒருவருக்கு உயர்வு எதனால் வரும் என்பதை நன்றாகச் சிந்தித்து மனதில் நன்கு பதிய வைத்துக் கொள்வாயாக.

*   *   *

பம்பாயில் ஸர் பிரோஸிஷா மேத்தாவின் தலைமையில் நடந்த பொதுக் கூட்டமானது காந்திஜியின் வேலையை எளிதாக்கி விட்டது. பொதுக் கூட்டத்தைப் பற்றிய விவரங்களைப் பத்திரிகைகளில் படித்து நாடெங்கும் உள்ள தேசியத் தலைவர்கள் ஓரளவு தென்னாப்பிரிக்கா இந்தியர் சம்பந்தமான விவரங்களைத் தெரிந்து கொண்டார்கள். எனவே, காந்திஜி முன்னைக் காட்டிலும் அதிக தைரியத்துடனே பூனா நகரத்துக்குச் சென்றார்.



ஸ்ரீ லோகமான்ய பாலகங்காதர திலகர்

பூனாவில் அப்போது இரண்டு கட்சிகள் இருந்தன. ஸ்ரீ லோகமான்ய பாலகங்காதர திலகரின் கட்சி ஒன்று; ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலேயைத் தலைவராகக் கொண்ட கட்சி ஒன்று. பின்னால் இக்கட்சிகளுக்குள் பிளவு அதிகமாகித் திலகர் கட்சி தீவிரக் கட்சி என்றும், கோகலேயின் கட்சி மிதவாதக் கட்சி என்றும் வழங்கப்பட்டன.

அந்தக் காலத்தில் மேற்படி இரு கட்சிகளுக்குள்ளும் அவ்வளவு பலமான போராட்டம் இல்லை. ஆகையால் இரு கட்சிகளின் ஆதரவையும் தேட வேண்டும் என்று காந்திஜி விரும்பினார். முதலில் லோகமான்யரிடம் சென்றார்.

லோகமான்யர், "தென்னாப்பிரிக்கா விஷயத்தில் அபிப்பிராய பேதமே இருக்க முடியாது. எல்லாக் கட்சியின் ஆதர வையும் நீங்கள் பெற விரும்புவது நியாயந் தான். ஆனால் கூட்டத்தின் தலைவர் எந்தக் கட்சியையும் சேராதவரா யிருப்பது நல்லது. ஆசிரியர் பந்தர்க்கரை அக்கிரா சனராயிருக்க வேண்டுமென்று கேட்டுப் பாருங்கள். சில காலமாக அவர் வெளி வருவதே இல்லை. நான் உங்களுக்கு எல்லா வித உதவியும் செய்யத் தயார்!" என்றார்.

பிறகு காந்திஜி ஸ்ரீ கோகலேயைப் பார்க்கச் சென்றார். பிரசித்தி பெற்ற பூனா பெர்கூஸன் கலாசாலையில் அப்போது கோகலே ஆசிரியர். அவருடைய இனிய சுபாவம் காந்திஜியின் உள்ளத்தைக் கவர்ந் தது. இப்போதுதான் முதன் முறையாகப் பார்த்தாலும் பழைய நண்பரைச் சந்திப்பது போலவே தோன்றியது.

காந்திஜி சொல்லு கிறார் :— "ஸர் பிரோ ஸிஷா இமாலயத்தைப் போல் எனக்குத் தோன்றினார். லோக மான்யர் மகா சாகரத் தைப் போல் காட்சி அளித்தார். கோக லேயோ கங்கை நதியை ஒத்திருந்தார். இமா லயத்தை ஏறிக் கடத் தல் இயலாத காரியம். சமுத்திரத்தில் ஒருவன்

துணிந்து இறங்குவதும் எளிதன்று. ஆனால் கங்கையோ தன்னிடம் வரும்படி அனைவரையும் பரிவோடு அழைக்கிறது. அந்தப் புனித நதியில் நாம் பயமின்றி இறங்கி ஸ்நானம் செய்து மகிழலாம். கையில் துடுப்புடனே படகில் ஏறி அந்த மாநதியில் மிதக்கலாம்.''

இவ்விதமாகக் கோகலே விஷயத்தில் காந்திஜிக்கு ஏற்பட்ட நல்ல அபிப்பிராயம் பின்னால் மகத்தான பலன்களைத் தந்தது.



ஸ்ரீ கோபாலகிருஷ்ண கோகலே

ஸ்ரீ கோகலே காந்திஜியை அழைத்துக் கொண்டு போய்ப் பெர்க்கூஸன் கலாசாலை முழுவதையும் காட்டினார். பொதுக்கூட்டம் விஷயமாக யார் யாரிடம் போகவேண்டும் என்றும் அவர்களை எப்படி அணுகவேண்டும் என்றும் யோசனை சொன்னார். ஸர் பிரோஸ்ஷாவைப் போலவே கோகலேயும் காந்திஜி செய்யப் போகும் பிரசங்கத்தைத் தாம் முன்னதாகப் பார்க்க வேண்டும் என்று கூறினார். டாக்டர் பந்தர்க்கரைச் சந்தித்துப் பேசிய பிறகு தம்மிடம் மறுபடியும் வரும்படி சொன்னார்.

காந்திஜி மிக்க உற்சாகத்துடனே டாக்டர் பந்தர்க்கரிடம் போனார். அந்தப் பேராசிரியர் கல்வித் துறையில் நாட்டுக்கு இணையற்ற தொண்டு செய்த பிரமுகர். காந்திஜியை அவரும் பிரியத்துடன் வரவேற்றார். எந்தக் கட்சியிலும் சேராதவரைப் பொதுக் கூட்டத்துக்குத் தலைவராகக் கோர விரும்புவதாய்க் காந்திஜி சொன்னபோது, ''அதுதான் சரி; அதுதான் சரி'' என்றார் ஆசிரியர் பந்தர்க்கர். உடனே 'தாங்கள்தான் தலைவரா யிருக்கவேண்டும்'' என்றார் காந்திஜி.

டாக்டர் பந்தர்க்கர் சிறிது யோசித்துவிட்டுச் சொன்னதாவது :—''நான் அரசியல் விஷயங்களில் தலையிடுவதில்லை என்பது எல்லாருக்கும் தெரியும். என்றாலும் நீங்கள் சொல்லும் காரியத்துக்கு என்னால் மறுத்துரைக்க முடியவில்லை. திலகர், கோகலே இருவரையும் நீர் கலந்து கொண்டது சரியான காரியம். அவர்கள் இருவரும் சேர்ந்து நடத்தும் கூட்டத்துக்குத் தலைமை வகிப்பதற்கு எனக்குச் சந்தோஷந்தான். அப்படியே அவர்களிடமும் தெரிவியுங்கள்.''

காந்திஜி மிக்க மகிழ்ச்சியடைந்தார். பம்பாய்ப் பொதுக் கூட்டத்தைப்போல் பூனாக் கூட்டமும் வெற்றிகரமாக நடந்தேறியது.

* * *

பிறகு காந்திஜி நம் சென்னை மாகாணத்துக்கு வந்தார். பாலசுந்தரம் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவன் அல்லவா? ஆகவே சென்னை மாகாணம் அச்சமயம் அரசியலில் முன்னணியில் நிற்காவிட்டாலும் காந்திஜி வந்த காரியத்துக்கு நல்ல ஆதரவு கிடைத்தது. ''பச்சைப் பிரசாரம்'' ஏராளமாகச் சென்னை நகரத்தில் விற்பனையாயிற்று.

அப்போது சென்னை நகரில் நடந்த ''மெட்ராஸ் ஸ்டாண்டர்டு'' ஆசிரியர் ஸ்ரீ ஜி. பரமேசுவரம் பிள்ளையும், ''ஹிந்து'' பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரும், பிற்காலத்தில் மிகப் பிரசித்தி பெற்ற நீதிபதி ஸர் எஸ். சுப்பிரமணிய ஐயரும் தமக்கு அச்சமயம் பேருதவி செய்ததாகக் காந்திஜி குறிப்பிட்டுள்ளார்.

* * *

சென்னையிலிருந்து காந்திஜி கல்கத்தாவுக்குப் போனார். கல்கத்தா அப்போது இந்தியாவின் தலைநகரமா யிருந்தது. இந்தியாவின் கவர்னர்-ஜெனரல் கல்கத்தாவிலேதான் வசித்தார்.

கல்கத்தாவில் காந்திஜியின் அனுபவங்கள் அவ்வளவு சந்தோஷகரமா யிருக்கவில்லை. பல தொல்லைகள் அவருக்கு ஏற்பட்டன; ஏமாற்றங்களும் நேர்ந்தன.

கல்கத்தாவில் காந்திஜிக்கு யாரையுமே தெரியாது. அங்கே போனதும் எங்கே தங்குவது? ரயில்வேக் கம்பெனியின் விளம்பரப் புத்தகத்தில் 'கிரேட் ஈஸ்டர்ன் ஹோட்டல்' விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அதைப் பார்த்துவிட்டுக் காந்திஜி மேற்படி ஹோட்டலுக்குத் தந்தி அடித்தார். காந்திஜிக்காக ஓர் அறை ஹோட்ட

வில் ரிஸர்வ் செய்யப்பட் டிருந்தது. அதில் ஜாகை ஏற்படுத்திக் கொண்டார். லண்டன் "டெயிலி டெலிகிராப்" பத்திரிகையின் நிருபர் மிஸ்டர் எல்லர் தார்ப்பே என்பவருடன் அந்த ஹோட்டலில் காந்திஜிக்குப் பழக்கம் ஏற்பட்டது. எல்லர் தார்ப்பே 'பெங்கால் கிளப்' என்னும் ஐரோப்பியர் விடுதியில் தங்கி யிருந்தார். காந்தியைக் கிளப்புக்கு அழைத்துப் போனார். ஆனால் அந்தக் கிளப்பின் பிரதான ஹாலுக்கு இந்தியர் வரக் கூடாது என்னும் விதி அவருக்குத் தெரியாது. காந்தியை அழைத்துக் கொண்டு அங்கே போனதும் இந்த விவரம் அவருக்குத் தெரிய வந்தது. உடனே தமது சொந்த அறைக்குக் காந்திஜியை அழைத்துப் போனார்.

இங்கிலாந்தில் உள்ள பிரிட்டிஷாருக்கும் தென்னாப்பிரிக்கா — இந்தியா முதலிய தேசங்களில் உள்ள பிரிட்டிஷாருக்கும் மனப்பான்மையில் உள்ள வேற்றுமைக்கு மறுபடியும் ஓர் உதாரணம் கிடைத்தது. மிஸ்டர் எல்லர் தார்ப்பே கல்கத்தா ஐரோப்பியர்களின் கேவல மனப்பான்மையைப் பற்றி வருத்தம் தெரிவித்து அங்கே காந்தியைக் கூட்டிக் கொண்டு வந்ததற்காக மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்.

பிறகு காந்திஜி கல்கத்தா பிரமுகர்களைப் பார்க்கச் சென்றார். அந்தக் காலத்தில் வங்காளத்தின் தெய்வமாக விளங்கியவர் ஸ்ரீ பாபு சுரேந்திரநாத் பானர்ஜி. அவரைக் காந்திஜி பார்க்கச் சென்ற போது பல நண்பர்கள் புடைசூழ அவர் வீற்றிருந்தார். காந்திஜி கூறியதைக் கேட்ட பிறகு, "இங்கே எங்களுக்கு இருக்கும் தொல்லைகளே அசாத்தியம். உங்கள் விஷயத்தில் ஜனங்களைச் சிரத்தை கொள்ளச் செய்வது கஷ்டம் என்று தோன்றுகிறது. ஆயினும் இன்னும் சில பிரமுகர்களை நீங்கள் பார்த்து அவர்களுடைய அநுதாபத்தைப் பெற முயலுங்கள்" என்றார்.

பானர்ஜி குறிப்பிட்ட கனவான்கள் காந்திஜி கூறியதைக் காது கொடுத்தே கேட்கவில்லை. பிறகு காந்திஜி பிரசித்தி பெற்ற 'அமிருதபஜார்' பத்திரிகைக் காரியாலயத்துக்குப் போனார். அங்கே அவரால் பத்திரிகாசிரியரைப் பார்க்கவே முடியவில்லை. பிறகு 'வங்க வாசி' காரியாலயத்துக்குப் போனார். அதன் ஆசிரியர் வெகு நேரம் காந்திஜியைக் காக்க வைத்துவிட்டு, "எனக்குத் தலைக்குமேல் வேலை இருக்கிறது. உம்முடைய விஷயத்தைக் கேட்க எனக்கு இப்போது நேரமில்லை" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

காந்தி மகாத்மா இந்தச் சம்பவம் பற்றி எழுதி யிருப்பதாவது :—"ஒரு கண நேரம் எனக்குக் கோபம் வந்தது. ஆனால் உடனே பத்திரிகாசிரியரின் நிலைமையை உணர்ந்தேன். 'வங்க வாசி'ப் பத்திரிகையின் புகழைக் குறித்து நான் ரொம்பவும் கேள்விப்பட்டதுண்டு. இடைவிடாமல் அவரைப் பார்க்க மனிதர்கள் வந்து கொண்டிருப்பதையும் கண்டேன். அவர்கள் அவருக்குப் பழக்கப்பட்டவர்கள். நான் முன் பின் தெரியாதவன். தென்னாப்பிரிக்கா விஷயமும் அவருக்குத் தெரியாது. கஷ்டப்படுகிறவனுக்குத் தன்னுடைய கஷ்டமே பெரியதாகத் தோன்றும். ஆனால் பத்திரிகாசிரியரைப் பார்க்க வருகிறவர்கள் எல்லாரும் ஒவ்வொரு குறையுடனேயே வருவார்கள். எல்லாருடனும் அவர் பேசிப் பதில் சொல்வது எங்ஙனம் சாத்தியம்?"

இவ்வாறு எண்ணி மனதைச் சாந்தப் படுத்திக் கொண்ட மகாத்மா பிறகு ஆங்கிலோ—இந்தியப் பத்திரிகாசிரியர்களிடம் சென்றார். "இங்கிலீஷ்மான்" "ஸ்டேட்ஸ் மான்" என்ற இரண்டு பத்திரிகைகளின் ஆசிரியர்களும் காந்திஜி சொல்லியதை யெல்லாம் பொறுமையுடன் கேட்டுப் பத்திரிகைகளில் பிரசுரித்தார்கள்.

"இங்கிலீஷ்மான்" பத்திரிகையின் ஆசிரியர் மிஸ்டர் ஸாண்டர்ஸ் என்பவர் காந்திஜியின் உற்ற நண்பராகவே ஆகி விட்டார். காந்திஜி தென்னாப்பிரிக்கா இந்தியர்களுடைய கட்சியை எடுத்துச் சொன்னதோடு தென்னாப்பிரிக்கா ஐரோப்பியருடைய கட்சியையும் பாரபட்சமின்றி எடுத்துச் சொன்னது மிஸ்டர் ஸாண்டர்ஸின் மனதைக் கவர்ந்து காந்திஜியிடம் மரியாதை உண்டாக்கிற்று.

மிஸ்டர் ஸாண்டர்ஸின் உதவியினால் கல்கத்தாவிலும் பொதுக்கூட்டம் நடத்தி விடலாம் என்று மகாத்மா எண்ணிக் கொண்டிருந்த போது டர்பனிலிருந்து "பார்லிமெண்ட் ஜனவரியில் கூடுகிறது. சீக்கிரம் திரும்பி வாருங்கள்!" என்று ஒரு தந்திச் செய்தி வந்தது. உடனே காந்திஜி புறப்படத் தீர்மானித்தார். பம்பாயிலிருந்து புறப்படும் அடுத்த முதல் கப்பலில் தமக்கு இடம் தேடி டிக்கட் வாங்கி வைக்கும்படி தாதா அப்துல்லாவின் பம்பாய் ஏஜண்டுக்குத் தந்தி அடித்தார். (தொடரும்)

சந்தனக்  கிண்ணம்

நவீனன்

அன்று யார் முகத்தில் விழித்தேனே தெரியவில்லை; பொழுது விடிந்தவுடன் ஆண்டு நிறைவுக் கல்யாணச் சாப்பாடு காத்திருந்தது.

"என்ன ஸார்! இன்னும் தூக்கமா? காப்பிக் கொட்டைக்குத்தான் 'டிமாண்'டாக இருக்கிறதே, என்னத்திற்கு அவசர அவசரமாகப் படுக்கையை விட்டு எழுந்திருக்க வேணும் என்று நினைப்பா?" என்று கேட்டுக் கொண்டே எங்கள் ஆபீஸ் காஷியர் குப்புசாமி என்னைத் தேடிக்கொண்டு வந்தார். அவரது பெண் குழந்தைக்கு அன்று ஆண்டு நிறைவுக் கல்யாணம்.

வெள்ளிக்கிழமையும் அதுவுமாகத் தேடிக் கொண்டு வருகிற சாப்பாட்டை விட்டு விடுவதா? — குளித்துவிட்டுக் கோட்டை மாட்டிக் கொண்டு, ஆபீஸ் அலங்காரங்களுடன் காஷியர் வீட்டிற்குப் புறப்பட்டேன்.

"இதோ பாருங்கள்! ஆண்டு நிறைவு வரும்படிக் கல்யாணம். வெறுங் கையுடன் போய் நிற்காதேயுங்கள். அவர் உங்கள் ஆபீஸ்காரர். ஏதாவது ரூபாய் எடுத்துக் கொண்டு ஓதிவிட்டு வாருங்கள்!" என்று என் மனைவி நல்ல வேளையாக நினைவு படுத்தினுள்.

காஷியர் குப்புசாமி கெட்டிக்காரர்! இல்லாவிடில் இருபத்திரண்டு மாடிப் படி ஏறி என்னைக் கூப்பிட வருவாரா? இரண்டு ரூபாயை எடுத்துச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு குப்புசாமி வீட்டிற்குப் போனேன்.

எங்கள் ஆபீஸே அவர் வீட்டுக் கூடத்தில் உட்கார்ந்திருந்தது. சரிதான், கைக் குழந்தையின் ஆண்டு நிறைவின் பேரால் இருநூறு, முந்நூறு ரூபாய் வரும்படிக்கு வழி செய்து கொண்டு விட்டார். 'காஷியர் குப்புசாமியோ, கொக்கோ!' என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன்.

"வாருங்கோ ஸார்!" என்று என் தலையைக் கண்டவுடன் உபசாரம் பலமாக நடந்தது. காஷியர் குப்புசாமி அந்த 'வரும்படி'க் குழந்தையை ஒரு கையால் தூக்கி இடுக்கிக் கொண்டு, இன்னொரு கையால் என் முன்னே சந்தனப் பேலாவை நகர்த்தி விட்டார். நானும் ஒரு கையால் சந்தனத்தைத் தொட்டு முகர்ந்து விட்டு, மற்றொரு கையை இரகசியமாகச் சட்டைப் பையில் விட்டுத் துளாவி, என் 'வரி'யான ரூபாய் இரண்டை எடுக்க வாரம்பித்தேன்.

அதே சமயம் என் கண்கள், முன்னுல் வைக்கப்பட்டிருந்த வெள்ளிச் சந்தனக் கிண்ணத்தைப் பார்த்து அகல விரிந்தன. அதன்மேல் எழுதப்பட்டிருந்த 'எம். ஜே.' என்ற இரு எழுத்துக்களும் என்னைப் பார்த்துக் கண் சிமிட்டுவது போல இருந்தது.

எனக்குச் சொந்தமான இந்த வெள்ளிச் சந்தனப் பேலா இங்கே எப்படி வந்தது? குப்புசாமி ஒருகால் கல்யாணத்திற்கு என்று இரவல் வாங்கிக் கொண்டு வந்திருப்பாரோ?......ஊஹூம், அவருக்கு என்னத்திற்கு நமது சந்தனக் கிண்ணம்? அவர் என்னைவிடப் பணக்காரர் கிண்ணத்தை நான் எடுத்து இரவல் கொடுத்ததாகவும் நினைவில்லையே! ஒருகால் அவள், மிஸஸ் குப்புசாமி வந்து கேட்டு எடுத்துக் கொடுத்திருக்கலாமோ? ஆனல் நமது ஸ்ரீமதிக்கும், மிஸஸ் குப்புசாமிக்கும் அவ்வளவாகப் பழக்கம் கிடையாது. என்றோ ஒரு நாள் சினிமாக் கொட்டகையில் இருவரும் மின் வெட்டும் நேரத்தில் பார்த்துக் கொண்ட போது, ஓர் உதட்டு அசங்கலுடன் அவர்களது அறிமுகம் முடிந்து போய் விட்டதாக ஞாபகம். அதற்குப் பிறகு அவர்கள் எப்போது சந்தித்திருப்பார்கள்?

ஒன்றும் புரியவில்லை. வெள்ளிக் கிண்ணம் வந்த வரலாறும் அர்த்தமாகவில்லை. சரி, சாயங்காலம் வீட்டிற்குப் போனல் விளங்கி விட்டுப் போகிறது என்று அத்துடன் சிந்தனையை அப்படியே விட்டு விட்டேன்.

★

மாலையில் வீட்டிற்குப் போனபோது அவள் கோவிலுக்குப் போயிருந்தாள். 'சரி, வரட்டும்' என்று அவசர அவசரமாகக் 'காமெரா' உள்ளே இருந்த 'ஹால்' டிராயரைத் திறந்து வெள்ளிக் கிண்ணம் இருக்கிறதா என்று தேடிப் பார்த்தேன்; இல்லை! மற்றும் வீட்டிலுள்ள பெட்டி பேழைகளை எல்லாம் குடைந்து பார்த்தேன்; அகப்பட

வில்லை. சரிதான், அவளைத்தான் கேட்க வேண்டும் என்று ஆரம்பத்தில் நினைத்தேன். ஆனால், அவளாகச் சொல்லுகிறபோது சொல்லட்டுமே, நாம் 'கம்'மென்று இருந்து பார்க்கலாம் என்று தோன்றியது.

இரண்டு, மூன்று நாட்கள் சென்றன. வெள்ளிக் கிண்ணம் விஷயம் புரியவில்லை. அவளும் இதைப் பற்றி என்னுடன் பிரஸ்தாபிக்காமல், வேறு எவ்வளவோ விஷயங்களைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தாள். நானும் பேசாமல் இருந்தேன்.

அடுத்த வாரம் நான் அகஸ்மாத்தாகக் காஷியர் குப்புசாமியை மார்க்கெட்டில் சந்தித்தபோது, என்னால் சும்மா இருக்க முடியவில்லை. "காஷியர் ஸாருக்கு ஆண்டு நிறைவு அலுப்புத் தீரவில்லை போலிருக்கிறது!" என்று சிரித்துக்கொண்டே கேட்டுவிட்டு, "நமது வீட்டு வெள்ளிச் சந்தனப் பேலாவைத் திருப்பி அனுப்பி வைக்கிறீர்களா?" என்று மெதுவாகக் கேட்டு வைத்தேன்.

குப்புசாமி என்னை விழித்துப் பார்த்துவிட்டு, "என்ன, உங்கள் வீட்டு வெள்ளிக் கிண்ணமா? எது? எங்கள் வீட்டிற்கு எப்போது வந்தது?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

"ஓஹோ! உங்களுக்கு விஷயம் தெரியாது போலிருக்கிறது. முழுக்க முழுக்க இது பெண்கள் விஷயம் போல் இருக்கிறது. ஸாரி, மன்னிக்க வேணும்" என்று மென்று விழுங்கினேன்.

"தாங்கள் சொல்லுவது எனக்குப் புரியவில்லை. புரியும்படி சொல்லுங்கள்" என்றார் குப்புசாமி.

"இல்லை...ஆண்டு நிறைவு 'பங்ஷ'னை முன்னிட்டு உங்கள் மிஸஸ், நமது மிஸஸிடம் இரவலாக வெள்ளிக் கிண்ணம் வாங்கிக்கொண்டு போயிருக்கிறாள்போல் இருக்கிறது. அந்த 'எம். ஜே.' வெள்ளிப் பேலா நம்முடையது. ஒன்றும் அவசரமில்லை...வீட்டில் விசாரித்துப் பாருங்கள்!" என்று சொல்லி 'ஓ. கே.' போட்டுவிட்டுத் தப்பித்துக் கொண்டேன். குப்புசாமி வீட்டில் விசாரித்துப் பார்ப்பதாகச் சொன்னார்.

அன்று வீட்டிற்குப் போனவுடன் நான் சும்மாயிருக்கவில்லை. சந்தனச் சோப்பின் பெருமையைப் பற்றியும், வெள்ளி விற்கும் விலையைப் பற்றியும் அவளிடம் மறைமுகமாகப் பேசிப் பார்த்தேன். அவள் அசைந்து கொடுக்க வேண்டுமே! வழக்கம்போலச் சிரித்து மழுப்பி என்னை ஆபீஸுக்கு அனுப்பி வைத்து விட்டாள்!

★

ஆபீஸில் அன்று என் தலையைக் கண்டவுடன் காஷியர் குப்புசாமி கைதட்டிக் கூப்பிட்டு, "இன்று மாலை ஐந்து மணிக்கு மேல் என்னுடன் என் வீட்டிற்கு வாருங்கள்" என்று கூப்பிட்டார்.



"வெள்ளிக் கிண்ணம்......?" என்று இழுத்தேன்.

"அது விஷயந்தான், வாருங்கள்! பேசிக்கொள்ளலாம்" என்று சொல்லிவிட்டுத் தலையைக் குனிந்தபடி ஆபீஸ் பணத்தைக் கலகலவென்று எண்ணுவதில் அவர் இரண்டறக் கலந்து விட்டார்.

அன்று மாலை குப்புசாமியுடன், ஆவலே உருவாய் அவரது வீட்டிற்குப் போய்ச்

சேர்ந்தேன். என்னைக் கண்டவுடன் அவரது மனைவி குடுகுடு வென்று வெளியே பறந்து ஓடினாள். நமது வருகைக்கும் அந்த அம்மாளின் ஓட்டத்திற்கும் என்ன சம்பந்தம் என்பது பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு தான் எனக்கு அர்த்தமாயிற்று.

'' அந்த வெள்ளிக் கிண்ணம் உங்களுடையதுதான், சந்தேகமில்லை. அதை என் மனைவியிடம் அடகு வைத்து முப்பது



ரூபாய் வாங்கிக் கொண்டுபோன குற்றவாளியைக் கூப்பிட்டுக்கொண்டு வரச் சொல்லியிருக்கிறேன். சற்றுப் பொறுங்கள்!'' என்று காஷியர் குப்புசாமி சொல்லிக்கொண்டே, வெற்றிலையை மென்று உள்ளே தள்ளிக் கொண்டிருந்தார்.

எனக்குப் படபட வென்று வந்தது. 'அந்தக் குற்றவாளி என் மனைவியாகத்தானிருக்க வேண்டும்; எனக்குத் தெரியாமல் என்னத்திற்கு இந்த அசட்டுக் காரியம் செய்ய வேண்டும்?' என்றெல்லாம் ஆத்திரப் பட்டேன்.

ஆனால் பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு மிஸஸ் குப்புசாமியுடன் வந்தது என் மனைவி அல்ல; ஏற்கெனவே எங்களுடன் குடித்தனம் இருந்த பக்கத்துத் தெருவிலுள்ள ஒரு சிறுமி அவள். அவளது வருகை என் வியப்பை இரட்டிப்பாக்கிற்று.

பர்வதம் என்பது அவள் பெயர். ரொம்பவும் ஏழை வீட்டு வித்து என் மனைவியும், அவளும் ரொம்பவும் சிநேகம். இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பு பக்கத்துத் தெருவில் நாங்கள் குடியிருந்தபோது அந்தப் பெண், ''மாமி! மாமி!!'' என்று கொடிக்கு நூறு ''மாமி!'' கூப்பிட்டுக் கொண்டு எங்கள் 'போர்ஷ'னுக்கு வந்து விடுவாள். எப்போதும் எதைப் பற்றியாவது அவளுடன் பேசிக் கொண்டிருப்பாள். அவளுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை.

என்னைக் கண்டதும் பர்வதத்தின் உடம்பு வெடவெட வென்று ஆடியது. கண்களில் கண்ணீர் பொங்கிப் பெருகியது. விக்கலும், விம்மலும் கலந்த குரலில் அவள் என்னைப் பார்த்துச் சொன்னாள்:

''மாமா! என்னை மன்னித்து விடுங்கள். அந்த வெள்ளிக் கிண்ணத்தை நான்தான் என் தம்பிக்குப் 'பூணூல் கல்யாணம்' என்று பொய் சொல்லி இரவல் வாங்கி வந்தேன். மாமி என்னை நம்பி இரவல் கொடுத்தாள். ''எங்கள் பெரிய அண்ணாவுக்குத் திடீரென்று மசூலிப் பட்டணத்திற்கு மாற்றலாகி விட்டது. உடனே புறப்பட்டுச் சென்று ஆபீஸில் 'சார்ஜ்' வாங்கிக் கொள்ள வேண்டும். மாதக் கடைசி, கையில் காலணா இல்லை. அண்ணா தவியாய்த் தவித்தான். மன்னியும் வீட்டில் இல்லை. பிரசவத்திற்குப் பிறந்தகம் போயிருந்தாள். எனக்கு மனசு கேட்கவில்லை. எங்கள் குடும்பத்திலுள்ள அரை டஜன் ஆத்மாக்களுக்கு அவன்தான் அரை வயிற்றுச் சாப்பாடு போட்டு வருகிறான். அப்படிப் பட்ட அண்ணா, சமயத்துக்கு மசூலிப் பட்டணம் போய்ச் சேராவிடில் வேலைக்கு ஏதாவது ஆபத்து வந்து விடுமோ என்று பயந்தேன். எப்படியும் முதல் தேதி அண்ணாவுக்குச் சம்பளம் வந்தால் வாங்கிக் கொடுத்துவிடலாம் என்ற அசட்டுத் தைரியத்தில் மாமியிடம் பொய் சொல்லி வெள்ளிப் பேலாவை இரவல் வாங்கிக் கொண்டு வந்தேன். இந்தக் காஷியர் மாமி

யிடம் அந்தக் கிண்ணத்தை அடகு வைத்து முப்பது ரூபாய் வாங்கி அண்ணாவின் ரயில் செலவுக்குக் கொடுத்து அனுப்பினேன். அண்ணா எங்கேயோ கைமாத்து வாங்கி வந்திருக்கிறதாகத்தான் நினைத்தான்...''

விஷயம் வெளிப்பட்டது. ஆனால் விம்மல் மட்டும் நிற்கவில்லை.

மேலும் சொன்னாள் அந்தச் சிறுமி:— ''நேற்று மாமி இரண்டு, மூன்று தரம் வந்து பேலாவைக் கேட்டுவிட்டுப் போனாள். 'அண்ணாவின் பெட்டிக்குள் இருக்கிறது. அவன் ஆபீஸுக்குப் போயிருக்கிறான். வந்தவுடன் எடுத்துக் கொடுத்து விடுகிறேன்' என்று இன்னொரு பொய் சொல்லி அனுப்பினேன்......''

அவ்வளவுதான்; 'ஹோ' வென்று கதறி அழ ஆரம்பித்து விட்டாள் பர்வதம்.

அடுத்த நிமிஷம் காஷியர் குப்புசாமி, ''சகுந்தலா!'' என்று தமது மனைவியின் பெயரைச் சொல்லி அழைத்தார். அவள் வந்ததும் ''அந்த வெள்ளிக் கிண்ணத்தைக் கொண்டு வா!'' என்றார்.

வெள்ளிப் பேலா வந்தது. அதை எடுத்துக் குப்புசாமி என்னிடம் நீட்டியபடி, ''இந்தாருங்கள், எடுத்துக் கொண்டு போங்கள்! முப்பது ரூபாய் பெரிய காரியமல்ல......!'' என்று கூறினார்.

அப்போது பர்வதம் அவரைப் பார்த்த பார்வை—அப்பப்பா! என்னால் விவரிக்க முடியாது. நான் பேலாவை எடுத்துக் கொண்டு குப்புசாமியின் உயர்ந்த பண்பை நினைத்து வியந்தபடி தெருவில் இறங்கிய போது, பர்வதம் என்னிடம் ஓடி வந்து, ''மாமா! மாமியைக் கோபித்துக் கொள்ள வேண்டாம். மாமி கள்ளங் கபடற்றவர்!'' என்று மன்றாடி வேண்டிக் கொண்டாள்.

அந்தப் பரிதாபகரமான பார்வைக்கு முன்னால் என்னுடைய படபடப்பு படு தோல்விதான் அடைந்தது.

புதிய பத்திரிகைகள்

வடமொழியிலே பாணபட்டன் அற்புதமாக எழுதியுள்ள காதம்பரி என்னும் நூலின் பெயரைத் தாங்கிக்கொண்டு ஒரு மாதப் பத்திரிகை, கவர்ச்சியான முகப்புப் படத்துடன் வெளிவந்திருக்கிறது. மகாகவி ரவீந்திரரின் 'சடைசித் தாமரை' என்ற அழகிய சின்னஞ் சிறு கதை பத்திரிகையின் ஆரம்பத்தை அலங்கரிக்கிறது. அதைத் தவிர, பல பிரபல எழுத்தாளர்களுடைய கதைகளும் இதில் காணப்படுகின்றன. காமபாணம் என்ற நீண்ட பெருங்கதை இதில் பிரபலமாக விளங்குகிறது.

விலை அணா 8. விலாசம்: ''காதம்பரி'' 2/24 பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.

அமுத சுரபி என்ற மற்றொரு அழகான பெயரைத் தாங்கிக்கொண்டு இன்னொரு மாதப் பத்திரிகை வெளி வந்திருக்கிறது.

அமுத சுரபியைப் பார்த்ததும் ஒரே பிரமிப்பாகவே இருக்கிறது. இதைப் புதிய பத்திரிகை என்பதாக நினைக்கவே முடியவில்லை. பத்திரிகைத் தொழிலிலே பண்பட்டவர்கள் வெகுகாலம் நடத்தி வந்த பழம் பத்திரிகை போலவே காணப் படுகிறது. அச்சு, அமைப்பு, வர்ணச் சித்திரங்கள் எல்லாம் முதல் தரம். கட்டுரைகளுக்கோ, கதைகளுக்கோ கவிதைகளுக்கோ குறைவே இல்லை. பொருளாதாரத்திலிருந்து வைத்தியம் வரை, அந்தந்தத் துறையில் நிபுணர்களாக விளங்கும் பல அறிஞர்கள் பல கட்டுரைகள் எழுதி யுள்ளார்கள். விலை 8 அணா; விலாசம்: நெ. 7, சுங்குராம செட்டித் தெரு, ஜி. டி. சென்னை.

கும்பகோணத்திலிருந்து தேனீ என்ற மாதப் பத்திரிகை வெளியாகி இரண்டு இதழ்கள் வந்திருக்கின்றன. மறு மலர்ச்சி இயக்கத்தின் முன்னணியிலே நிற்கும் சிறந்த எழுத்தாளர்களான ஸ்ரீ பிச்சமூர்த்தி, ஸ்ரீ ந. சிதம்பர சுப்ரமண்யம், ஸ்ரீ கு. ப. சுப்ரமண்யம் முதலியோர்களுடைய கதைகளும், கவிதைகளும் தாங்கி வருவதோடு, ஸ்ரீ எம். வி. வெங்கடராமன், ஸ்ரீ கரிச்சான் குஞ்சு ஆகியவர்களை ஆசிரியர்களாகக் கொண்ட இந்தப் பத்திரிகைக்குத் தமிழ் நாட்டில் நல்ல வரவேற்பும் ஆதரவும் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. விலை அணா 8. விலாசம்: ''தேனீ'' காரியாலயம், கும்பகோணம்.

மலையாள ராஜ்யமாகிய கொச்சியிலிருந்து சுயராஜ்ய பேரிகையை முழக்கிக் கொண்டு சுயராஜ்யம் என்னும் பத்திரிகை வெளி வந்திருக்கிறது. இதன் விலை அணா 4. விலாசம்: ''சுயராஜ்ய'' காரியாலயம், சித்தூர் — கொச்சி சமஸ்தானம்.

குமரிமுனையில் தமிழர் தவம்

ஜெயமணி



"காங்கிரஸ் மாளிகைக்குச் செல்வோமா?" என்று ஓர் அன்பர் கூறியதும் "சரி; போகலாம்" என்றேன்.

பத்து லட்சத்துக்கு மேற்பட்ட ஜனங்களுக்குப் பிரதிநிதி ஸ்தாபனமாக விளக்கும் கட்டிடத்தை 'மாளிகை' என்று குறிப்பிடுவதில் தவறு எதுவும் இல்லையல்லவா? தேர்தலில் அமோக வெற்றி பெற்று, ஒரு சர்க்காரையே நிதான புத்தியை இழக்கும்படி செய்துள்ள ஸ்தாபனத்தின் செல்வாக்குக்குத் தக்கவாறு அதன் கட்டிடமும் அமைந்திருக்க வேண்டும் என்று எண்ணியவாறே அன்பருடன் சென்றேன்.

மேட்டுப் பாங்கான இடத்தில் அமைக்கப் பெற்றிருந்த ஓர் அருமையான கட்டிடத்தைக் காட்டி, "இதுதான் நாகர்கோவில் ஹைஸ்கூல்" என்றார் அன்பர். அவ்வளவு அழகான கட்டிடம் இந்த மாகாணத்திலுள்ள வேறெந்த உயர்தரக் கல்விச்சாலைக்கும் வாய்க்கவில்லை என்று அவர் கூறியது ஒரு வேளை மிகையாக இருக்கலாம். எனினும் அது சிறந்த கட்டிடங்களில் ஒன்று என்பதில் மாத்திரம் சிறிதும் சந்தேகமில்லை.

பின்னர் அவர் அதற்கு எதிராகப் பள்ளத்தாக்கிலுள்ள குடிசையைப் போன்ற ஒரு சிறு வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்றார். வாசற்படியில் என் தலை மோதிக் கொள்ளாமல் இருப்பதற்காக, "குனிந்து வாருங்கள், குனிந்து வாருங்கள்!" என்று எச்சரிக்கை செய்துகொண்டே சென்றார்.

பக்கத்திலுள்ள திண்ணையில் ஒரு சிறிய விளம்பர போர்டு மாட்டப்பட்டிருந்தது. அதை உற்றுப் பார்த்ததும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. **திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ், நாகர்கோவில்** என்று அதில் எழுதப்பட்டிருந்தது. திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸின் தலைமை ஸ்தாபனக் கட்டிடம் அதுதான்!

குமரிப் பிரதேசத்திலுள்ள அதன் கீர்த்தி ஹிமயம் வரையில் வியாபித்திருக்கும் போது, மூர்த்தி எவ்வளவு சிறியதாக இருந்தால்தான் என்ன? இவ்வாறு என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டு உள்ளே சென்றேன்.

அங்கிருந்த சில காங்கிரஸ் நிர்வாகிகளை அன்பர் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். "இவர்தான் எங்கள் தலைவர் ஸ்ரீ எஸ். நத்தானியல். திருவாங்கூர் தமிழர்களுடைய இயக்கத்தின் உயிர்நாடி இவர்தான்" என்று மேற்படி அன்பர் கூறினார்.

நாகர்கோவிலில் பிரபல வக்கீலும் திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவருமான ஸ்ரீ நத்தானியல் தோற்றத்துக்கு ஏற்ற இனிய சுபாவம் கொண்டவர் என்பதை நேரிலும் மற்ற நண்பர்களின் மூலமாகவும் தெரிந்து கொண்டேன். திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் நடத்திய பொறுப்பாட்சிப் போரில் கலந்துகொண்டு சிறை சென்றவர் ஸ்ரீ எஸ். நத்தானியல்.

இப்போது தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்காக அவர் மேற்படி காங்கிரஸையே எதிர்த்துப் போராட நேர்ந்திருக்கிறது! திருவாங்கூர் தமிழர்களிடை ஏற்பட்டுள்ள ஒற்றுமை உணர்ச்சிக்கும், திருவாங்கூர் அரசியல் நிர்ணய சபைத் தேர்தலில் எதிர்க் கட்சியினர் ஜாமீன் தொகையை இழக்கும் அளவுக்குத் தமிழ்நாடு காங்கிரஸ் பிரதிநிதிகள் மகத்தான வெற்றி பெற்றதற்கும் ஸ்ரீ நத்தானியல் முதலிய தலைவர்களின் சலியாத தொண்டுதான் காரணம்.

சென்ற சில மாதங்களாக அவர்களும் மற்றும் பல தொண்டர்களும் இடைவிடாது மூன்று காரியங்களைச் செய்து வருகிறார்கள்.

1. திருவாங்கூரில் பத்து லட்சம் தமிழர்கள் வசிக்கும் பகுதிகள் தமிழ் மாகாணத்துடன் சேர உரிமை கோரி இடைவிடாது பிரசாரம் செய்கின்றனர்.

2. அதற்காகப் போலீசாராலும் குண்டர்களாலும் இடைவிடாது தாக்கப்படுகின்றனர்.

3. 'நாங்கள் அடிபட்டோம்' 'நாங்கள் அடிபட்டோம்' என்று இடைவிடாது சென்னை சர்க்கார் மந்திரிகளுக்கும் இந்திய சர்க்கார் மந்திரிகளுக்கும் ராஜாஜி முதலிய தலைவர்களுக்கும் தந்தி அனுப்பி வருகிறார்கள்.

அவ்வாறு அனுப்பப்பட்ட தந்தி ஒன்றின் நகல் இதுதான்:—

"திருவாங்கூரில் போலீஸ் ராஜ்யம் தாண்டவமாடுகிறது. தமிழர்களின் உயிருக்கோ உடைமைக்கோ பாதுகாப்பு இல்லை. அடக்கு முறையின் உக்ரம் சொல்லி முடியாது. தடியடிகள், பொய் வழக்குகள் ஜோடிப்பு முதலியன சகஜமாகி விட்டன. தலையிட்டு உதவி புரியுங்கள்."

* * *

சில ஊர்களில் தமிழ்ப் பெண்மணிகள் சாமான் வாங்கக் கடைகளுக்குச் செல்வதையே நிறுத்திவிட்டார்கள். சந்தைக்குச் சாமான்கள் விற்கச் செல்லும் பெண்களும் இப்போது அதை நிறுத்தி விட்டார்கள். வீடுகளில் அடைத்துக் கிடப்பவர்களுக்கே போலீஸாராலும் குண்டர்களாலும் ஆபத்து நேரும் இக்காலத்தில், வெளியே சென்றால் என்ன அவமதிப்பு நேருமோ என்று அவர்கள் திகில் கொண்டிருப்பதே அதற்குக் காரணம். அதற்குத் தகுந்தாற்போல் கல்குளம் தாலுக்காவில் நடந்த சந்தையில் ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமான முன்னா ஜவுளி, தேங்காய், வெல்லம் முதலிய சாமான்கள் கொள்ளை போய்விட்டதால், வழக்கமாக அங்கு திங்கள், வியாழக்கிழமைகளில் நடைபெற்று வந்த சந்தை நின்று போய்விட்டது.

அவ்வாறாகச் சட்டத்துக்கும் நீதிக்கும் புறம்பாகக் காரியங்களைச் செய்து வரும் போலீஸார், சட்டத்தின் பெயரால் செய்யும் அக்கிரமங்களையும் ஸ்ரீ நத்தானியல் எடுத்துரைத்தார்.

தற்போது திருவாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரஸ் அங்கத்தினர்கள்மீது முப்பத்தொன்பது வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றனவாம். ஒருவேளை அந்தத் தொகை இப்போது அதிகமாகி யிருக்கலாம்!

அந்த வழக்குகள் எல்லாம் அடியோடு உண்மைக் கலப்பற்றவை என்று கூற முடியாது. உண்மைக் கலப்புள்ள வழக்குகளும் இருக்கத்தான் செய்கின்றன!

உதாரணமாகக் கீழ்கண்ட வழக்கு விவரங்களைக் கவனியுங்கள் :—அங்குள்ள கிராமங்களில் நாயர்களுக்குச் சொந்தமான சில வீடுகள் இருக்கின்றன. வீடுகள் என்றால் பெரிய மாடிக் கட்டிடங்களோ என்று நினைக்க வேண்டாம். மொத்தம் பத்து சதுர அடி உள்ள ஓலைக் கூரை வீடுகள் தான். நாலு மூலையிலும் மண் சுவர். ஒவ்

வரப் பெற்றோம்

ஸ்ரீ ராம பக்தியிற் சிறந்த மகான் தியாகப் பிரம்மத்தின் அற்புதமான மூவர்ணப் படம் கிடைக்கப் பெற்றோம். சீதா, லக்ஷ்மண, பரத, சத்ருக்ன, ஹனுமத் சமேதராக ஸ்ரீ ராமபிரான் ஸ்ரீ தியாகப் பிரம்மத்துக்குக் காட்சி யளிக்கும் வைபவம் தத்ரூபமா யிருக்கிறது. இப்படத்தின் விற்பனைத் தொகை மயிலாப்பூரில் சங்கீதக் கலைக்குச் சிறந்த சேவை செய்து வரும் ஸ்ரீ தியாகராஜ சங்கீத வித்வத் சமாஜத்தின் கட்டிட நிதிக்குப் போகிறது. விலை: ரூ. 1.

கிடைக்குமிடம்: பரூர் ஸ்ரீ அனந்தராம ஐயர், 78, அப்பர்சாமி கோவில் தெரு, மயிலாப்பூர், சென்னை.

★

தெய்வத் திருத் தமிழில் நான் மறை ஓதி தமிழையும் தமிழிசையையும் வளர்த்த மாணிக்கவாசகர், நாவுக்கரசர், ஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய நால்வர்களின் திருவுருவத்தையும் அழகிய வர்ணத்தில் 20" x 14" அளவில் உயர்ந்த ஆர்ட் காகிதத்தில் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள்.

கிடைக்குமிடம்: ஸ்ரீ சி. எஸ். சுப்ரமணியம்; நால்வர் மடாலயம், பேரூர் போஸ்ட், கோயமுத்தூர். உள் நாடு விலை ரூ. 1-6-0, வெளி நாடு ரூ. 1-8-0.

வொரு வீட்டின் பெறுமானம் இருபது அல்லது முப்பது ரூபாய் இருக்கலாம்!

அந்த வீடுகளில் உள்ள நாயர்களுக்கு அதிகாரிகள் ஏதாவது தொகை கொடுத்து சாமான்களுடன் வெளியேறி விடும்படி கூறுவார்களாம். அவ்விதமே அவர்கள் வெளியேறிய பிறகு இரவில் அந்த வீடுகளுக்குத் தீ வைத்து அந்தப் பகுதியில் தங்களுடைய கண்ணோட்டத்துக்கு இலக்கான தமிழர்கள்மீது, வீடுகளுக்குத் தீ வைத்ததாக வழக்குத் தொடங்குவார்களாம். மேற்படி வழக்கில் உண்மைக் கலப்பில்லை என்று கூற முடியுமா? வீடுகள் எரிந்தது உண்மைதானே?

உடனே திருவாங்கூரிலுள்ள மலையாள பாஷைப் பத்திரிகைகளில், "பல வீடுகள் தகனம்" "தமிழர்களின் அக்கிரமம்" "நாயர்களுக்குப் பெருத்த நஷ்டம்" என்றெல்லாம் கொட்டை எழுத்துக்களில் செய்திகள் வெளியாகிவிடும். அந்தச் செய்திகளைப் பார்த்து ஆத்திரம் அடைந்த நாயர்கள் தங்களுடைய கோபத்தை நிரபராதிகளான ஏழைத் தமிழர்கள்மீது காட்ட ஆரம்பித்து விடுவார்கள்.

அவ்வாறு தகனமான வீடுகளில் சிலவற்றைப் பார்த்தபோது எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ஏனென்றால் அந்த இடத்தில் குளிர் காய்வதற்காக யாரோ ஓலைகளைக் கொளுத்தியிருப்பதுபோல் தோன்றியதே யன்றி, வீடுகள் எரிந்திருப்பதாகத் தோன்றவில்லை!

போலீஸாரால் சுடப்பட்ட, தடியடிக்கு ஆளான சிலர்மீதும் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. சிறந்த செல்வந்தரும் பிரபல வக்கீல்களில் ஒருவருமான தமிழர்மீது, அவர் ஒருவருடைய சட்டைப் பையிலிருந்து இருபத்தைந்து ரூபாய் களவாடியதாக வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள்!

இந்த 'ஸாம்பிளி'லிருந்து மற்ற வழக்குகளின் தன்மையை ஊகித்துக்கொள்ளலாம்.

* * *

மற்றும் மேற்படி வழக்குகளில் பொய் வாக்கு மூலம் கொடுக்கும்படியும் ஏழைகள் வற்புறுத்தப்படுகிறார்களாம். போலீசாருக்குச் சாதகமாக வாக்குமூலம் கொடுக்க மறுப்போர், அதன்பின் தங்களுடைய கிராமங்களில் துன்பத்துக்கு ஆளாகாமல் வசிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

தமிழர்கள் மீது புதிது புதிதாக வழக்குகள் ஜோடிக்கப்பட்டு வருகையில், தங்களைத் துன்புறுத்திய போலீசார் மீதோ, குண்டர்கள் மீதோ வழக்குத் தொடரத் தமிழர்களால் முடியவில்லை. அவர்களுடைய கூக்குரலை அதிகாரிகளில் எவராவது காதில் போட்டுக் கொண்டால்தானே! காயமடைந்த தமிழர்களுக்குச் சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை செய்யவில்லை. துன்புறுத்தப்பட்ட தமிழர்களின் புகார்களை சர்க்கார் அதிகாரிகள் கவனிப்பதுமில்லை.

யாருக்கும் தெரியாத ஏழைகளின் கதி தான் பரிதாபகரமாக இருந்து வருகிறது என்று நினைக்க வேண்டாம். பெரிய தலைவர்களுக்கும் அதிலிருந்து விலக்கு இல்லை.


காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ எஸ். நத்தானியல், தமிழர்களின் இயக்கத்தைத் தீவிரமாக ஆதரிக்கும் "பாரதி" என்ற மலையாள பாஷைப் பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீ எ. என். சத்தியநேசன் இவ்விருவருடைய தலைகள் தப்பியது தம்பிரான் புண்ணியமாகும். தேர்தல் பிரசாரத்துக்காகப் பைங்குளம் என்ற ஊருக்குச் சென்றிருந்த ஸ்ரீ நத்தானியல் தெய்வச் செயலாகக் குண்டர்களிடமிருந்து உயிர் தப்பினார். அதுபோலவே ஸ்ரீ சத்தியநேசனின் தலைக்கு வந்தது அவருடைய மோட்டாரின் தலையோடு போயிற்று! அடியை மோட்டார் தாங்கிக் கொண்டு அவரைக் காப்பாற்றியது!

மற்றும் தமிழ்நாடு காங்கிரஸ் தொண்டர் படை காப்டன் ஸ்ரீ எ. காந்திராமன், நாகர்கோவில் நகரத் தொண்டர்படை காப்டன் ஸ்ரீ எம். அப்துல் காதர், காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீ கே. நாகலிங்கம் முதலிய பலரும் போலீசாரின் தடியடிக்கு ஆளாயினர்.

காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை செய்ய சர்க்கார் ஆஸ்பத்திரி அதிகாரிகள் மறுத்து விட்டதால், அவர்களுக்குச் சிகிச்சை செய்யும் புண்ணியத்தை இப்போது தமிழர்களை நிர்வாகிகளாகக் கொண்ட மிஷன் ஆஸ்பத்திரிகள் கட்டிக்கொண்டு வருகின்றன. கூடிய சீக்கிரத்தில் தமிழ் மாகாணத்தின் பிரஜைகளாகப் போகும் தமிழர்களுக்கு ஏன் சிகிச்சை செய்யவேண்டும்? இந்த உண்மையை முன் கூட்டியே உணர்ந்துதான் அவர்களுக்குச் சிகிச்சை செய்ய சமஸ்தான சர்க்கார் ஆஸ்பத்திரி அதிகாரிகள் மறுக்கின்றனர் போலும்!

* * *

சுயநிர்ணய உரிமை கோரும் தமிழர்களைத் துன்புறுத்துவதில் சமஸ்தான காங்கிரஸ் வாதிகள் காட்டும் உற்சாகப் பெருக்கை அளவிட முடியாது. தமிழர்







சுடப்பட்டும், குத்தப்பட்டும் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் தமிழர்கள். இந்தக் கிழவியின் மார்பில் குத்தி இவருடைய வீட்டுக்கும் தீவைத்தனர்.

ஸ்தாபனங்களில் பறக்கும் தேசியக் கொடியைக் கூட அவர்கள் சகிப்பதில்லை!

மலையாளிகள் ஹோட்டல்களில் இப்போது தமிழர்கள் சாப்பிடவும் பயப்படுகிறார்கள். அங்கு சாப்பிட்ட இரண்டு தமிழர்களுக்கு விஷம் வைக்கப்பட்டதாகவும், ஒருவர் ஆஸ்பத்திரியில் பல நாட்கள் வரையில் சிகிச்சை பெற்று உயிர் தப்பியதாகவும், மற்றொருவர் இறந்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

போலீசாரால் தடியினாலும், துப்பாக்கி அடிக்கட்டையினாலும் அடிக்கப்பட்டுக் காயமடைந்த தமிழர்களின் தொகை நிச்சயமாக ஆயிரத்துக்கு மேல் இருக்கும் என்றும், போலீசாரின் அட்டூழியங்களைப் பற்றி விசாரிப்பதற்காக விசேஷ கோர்ட் ஒன்றை நிறுவவேண்டுமென சர்க்காருக்கும் மகாராஜாவுக்கும் அனுப்பிய விண்ணப்பத்துக்கு இதுவரையில் யாதொரு பதிலும் கிடைக்கவில்லையென்றும் ஸ்ரீ நத்தானியல் கூறினார்.

திருவாங்கூரில் தமிழர்களின் நியாயமான சுயநிர்ணய உரிமையை எதிர்த்து அதர்ம யுத்தம் நடத்தும் கூட்டத்தினிடையே சில விதுரர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். தமிழர்களின் கோரிக்கை நியாயமானதே என்பதை அவர்கள் ஒப்புக் கொள்கின்றனர். சமஸ்தான அடக்கு முறை அநீதியானது மட்டுமல்ல, மடத்தனமானதும் கூட என்பது அவர்களுடைய அபிப்பிராயம்.

ஸ்ரீ சுகுமாரன் என்பவர் அத்தகைய விதுரர்களில் ஒருவர். பழுத்த மலையாளி. திருவாங்கூரில் மிகப் பிரபல மலையாள தினசரிப் பத்திரிகையான "கேரள கௌமுதி"யின் ஆசிரியர். தற்போது திருவாங்கூரிலுள்ள மந்திரிகளில் ஒருவருடைய நெருங்கிய உறவினர். அவரே, "திருவாங்கூர்த் தமிழர்களின் இயக்கம் ரொம்ப நியாயமானது" என்று சொன்னார் என்றால், அந்த இயக்கத்தின் நேர்மையைக் குறித்து அதிகம் சொல்ல என்ன இருக்கிறது?

தமிழ்நாடு காங்கிரஸ் சம்பந்தமான செய்திகளைப் பிரசுரிக்கக் கூடாதென்று திருவனந்தபுரத்திலுள்ள பத்திரிகைகளுக்கு சமஸ்தான சர்க்கார் தடையுத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். எனினும் "கேரள கௌமுதி" மாத்திரம் கூடிய வரையில் பாரபட்சமின்றி நடந்து கொண்டு வருவது பாராட்டுதற்கு உரியது.

ஸ்ரீ சுகுமாரன் எங்களை அன்புடன் வரவேற்றுப் பேசினார். தற்போது சமஸ்தானத்தில் கையாளப்பட்டு வரும் அடக்குமுறைகளைப் பற்றிப் பிரஸ்தாபம் எழுந்தபோது, அதை அவர் கண்டித்தார்.

"என்ன அக்கிரமம், என்ன ஊழல்! பழைய திவானின் அடக்குமுறை ஆட்சியைக் கண்டித்த ஸ்ரீ பட்டம் தாணுப்பிள்ளை இன்று இங்குள்ள தமிழர்களின் மீது அடக்குமுறையைப் பிரயோகித்து வருவது வெட்கக் கேடாகும். ஐக்கிய கேரள மாகாணக் கோரிக்கை நியாயமாயின், தமிழர்கள் தாங்கள் தமிழ் மாகாணத்துடன் சேர வேண்டும் என்று கூறுவதில் தவறு என்ன இருக்கிறது? பாஷாவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்படுவதை அகில

இந்திய காங்கிரஸ் ஆதரிப்பதால், தமிழர்களின் மேற்படி நியாயமான கோரிக்கையையும் ஆதரிக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். நல்லெண்ணத்துடனும் சமரசமாகவும் தீர்த்துக் கொள்ள வேண்டிய இந்தப் பிரச்னையை, சமஸ்தான சர்க்கார் அடக்குமுறைகளைக் கைக்கொண்டு முற்றிலும் குழப்பி விட்டிருக்கிறார்கள்" என்று ஸ்ரீ கருமாரன் வருந்தினார்.

"நீதியும் நேர்மையும் இல்லாத காரியங்களை அடக்குமுறைகளால் ஒடுக்கிவிடலாம். ஆனால், தர்ம நியாயமான இயக்கங்களை அடக்குமுறைகளால் நசுக்க முற்படுவது இறுதியில் சர்க்காரின் பெருமையையும் செல்வாக்கையுமே நசுக்கிவிடும். குறிப்பாக சமஸ்தான மந்திரிகள் தங்களுடைய வீரப் பேச்சுக்களை விட்டுவிட்டு, சமாதானத் தோரணையில் பிரச்னையைத் தீர்க்க முற்பட்டாலொழிய அவர்கள் வெற்றி பெற முடியாது என்பதற்குத் தமிழர் பகுதிகளில் நடந்த தேர்தல் முடிவுகளே சான்றாகும்" என்றும் அவர் அப்பட்டமாகத் தமது அபிப்ராயத்தை வெளியிட்டார்.

அப்போது மேற்படி நாஞ்சில் நாட்டைப் பற்றிக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் பல வருஷங்களுக்கு முன் பாடிய பாடல் ஒன்று என் ஞாபகத்துக்கு வந்தது:

வீரப் பேச்செல்லாம் விட்டு விடும்—உள்ள
வீரம் பகிர்ந்து கொடுத்துவிடும்
சூரியன் மேற்கே உதித்திடினும்—எங்கள்
சொந்த வாசங்கள் போய்விடுமோ!

தமிழ் மாகாணத்துடன் சேர வேண்டும் என்று கோரும் தமிழர்கள் சமஸ்தானத்திலிருந்து வெளியேறி விடட்டும் என்று சமீபத்தில் ஸ்ரீ பட்டம் தாணுப் பிள்ளை ஓரிடத்தில் பேசியதை ஸ்ரீ கருமாரன் குறிப்பிட்டதுடன், மிகவும் பொறுப்புள்ள பதவியை வகிப்பவரும், தேசபக்தருமான அவர் அவ்வாறு பேசியது சர்க்காரின் துரதிர்ஷ்டம் தான் என்றார்.

"நூறு சத விகிதம் சமாதான முறையில் தீர்க்க வேண்டிய இந்தப் பிரச்னையை சர்க்கார் நூறு சத விகிதம் அடக்குமுறையைக் கைக்கொண்டு தீர்க்க முற்படுவதைக் காட்டிலும் தவறு வேறொன்றுமில்லை" என்று ஸ்ரீ கருமாரன் கூறி முடித்தார். (தொடரும்)

கா ல க்ஷே ப ம்

பைத்தியம்தான்!

"உங்கள் பெண் அந்தக் காலேஜ் மாணவனைக் கல்யாணம் செய்து கொள்ளுவதாகச் சொல்லியிருக்கிறாளாம். அவன் உங்கள் குடும்பத்தைப் பற்றி விவரங்கள் விசாரிக்கிறான்; யாருக்காவது பைத்தியம் பிடித்திருந்ததா என்று கூடக் கேட்கிறானாம்!"

"இது என்ன கேள்வி? நீர் சொன்னதைக் கேட்ட பிறகு என் பெண்ணுக்கே பைத்தியம் பிடித்திருக்கிறது என்பதில் சந்தேகம் என்ன?"

★

வாங்காத பத்திரிகை

பத்திரிகை இரவல் கேட்க வந்தவர் (நண்பரிடம்):—நீங்கள் எல்லாப் பத்திரிகைகளும் வாங்குகிறீர்கள் போலிருக்கிறது. எந்தப் பத்திரிகையைத்தான் நீங்கள் வாங்குவதில்லை?

நண்பர்:—இரவல் பத்திரிகைதான் வாங்குவதில்லை!

★

சௌகரியம்

பெண் வீட்டுக்காரர்:—அடே! வந்திருக்கிற கூட்டத்தைப் பார்த்தால் ஏகமாயிருக்கிறதே! இவ்வளவு பேருக்கும் சாப்பாடு போதாது போலிருக்கிறதே! இப்போது என்ன செய்கிறது, ஒன்றும் தோன்றவில்லையே!

நண்பர்:—இதற்கென்ன யோசனை! சாப்பாட்டுக்கு முந்தி பாகவதரைக் கச்சேரி பண்ணச் சொல்லி விடுங்கள், ரொம்ப சௌகரியமாய்ப் போய்விடும்!

எது சங்கடம்?

ஒருவர்:—நான் உங்களுக்கு இன்னும் எவ்வளவு பாக்கி தர வேண்டும்? சரியாகப் பார்த்துச் சொல்லுங்கள்!

மற்றவர்:—நாலு ரூபாயும் பத்து அணாவும் உங்களிடமிருந்து வர வேண்டியிருக்கிறது.

முதல்வர்:—அப்படியானால் ஐந்தணா கொடுங்கள். மொத்தமாக ஐந்து ரூபாய் பாக்கி என்று இருக்கட்டும். சில்லறையெல்லாம் எப்போதும் ஞாபகம் வைத்துக் கொண்டிருப்பது ரொம்ப சங்கடமாயிருக்கிறது!

★

யாருக்கு வாழ்த்து?

சுந்தரம்:—என் அப்பா, சந்துரு! நீ எனக்குத் தரவேண்டிய ரூபாய் முப்பதைப் பற்றி மறந்தே போய்விட்டாய் போலிருக்கிறதே!

சந்துரு:—இல்லை, இல்லை! ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறேன். அடுத்த ஞாயிற்றுக்கிழமை உனக்குப் பிறந்த நாள் வருகிறதென்று சொன்னாயே, அன்றைய தினம் என் வாழ்த்துக்களுடன் அந்த முப்பது ரூபாயையும் கொண்டுவந்து தருகிறேன். கொஞ்சம் பொறுத்துக் கொள்.

சுந்தரம்:—நீ ரூபாயை இன்று கொடுத்து விடு; என் பிறந்த தினத்தன்று உன் வாழ்த்தை நானே வாழ்த்திக் கொள்கிறேன்!



வதனம் எழிலோங்க
உங்களுக்கு இரு க்ரீம்கள் தேவை...
POND'S
POND'S
ஒன்று சுத்தம் செய்ய—மற்றது பாதுகாக்க!
பரிபூர்ண சௌந்தர்யத்திற்கு உங்கள் வதனத்தை இருவகை க்ரீம்களால் நித்தியம் பராமரித்து வருவது அவசியம். முதலாவது, சேர்த்திபாகக் கலவை செய்த, ஊடுருவி உட்செல்லும் தைலம் அடங்கிய பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம், மலினங்களை ஆராய்ந்து வெளியேற்ற. இரண்டாவது, மெல்லிய, மெழுக்கற்ற பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம், கண்மறைவாக இருந்து முகத்தைப் பாதுகாக்க.
பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமால் முகத்தை சுத்தம் செய்யுக. முகத்திலும் கழுத்திலும் இந்த மிருதுவான க்ரீமை பிரதி இரவும் தடவி, அதன் தைலங்கள் உட்சென்று, அழுக்கையெல்லாம் இளக்குமாறு மெதுவாகத் தேயுங்கள். துடைத்துக் களையவும். இப்பொழுது பாருங்கள், வதனம் எவ்வளவு ஸ்வச்சமாக, புதுமையோங்க விளங்குகிறது!
பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமால் தினம் காலையில் முகத்தைக் காப்பாற்றுங்கள். மெழுக்கற்ற இந்த க்ரீமை லேசாகத் தடவுங்கள். அது சருமத்திற்குள் மாயமாய் மறைந்தாலும், முகமீது ஓர் மெல்லிய அதிசய படலமாக நின்று வெய்யில், வியர்வையிலிருந்து பகல் முழுதும் பாதுகாப்பளிக்கிறது. உங்கள் வதனம் பூர்ண களையுடன் சோபிக்கிறது.
பாண்ட்ஸ்
வியாபார விவரங்களுக்கு:
எல். டி. ஸெய்மூர் & கோ., (இந்தியா) லிட்.,
பம்பாய் — கல்கத்தா — டெல்லி — மதராஸ் — நோவா கோவா — கராச்சி



‘பாபூ’ அல்லது நானறிந்த காந்தி

“கீதா ரகஸ்யத்தைப் பற்றி எழுதுவது எவ்வளவு கஷ்டமோ அவ்வளவு கஷ்டம் காந்திஜியைப் பற்றி எழுதுவதும்” என்று காலஞ் சென்ற மகாதேவ தேசாய் சொன்னார். அது முற்றிலும் உண்மை.

காந்திஜியைப் பார்த்திருக்கலாம், பேசியிருக்கலாம்; அவருடன் பழகியிருக்கலாம், வெகு நாள் தொடர்பு கொண்டிருக்கலாம். ஆனால், கீதையில் பகவான் கண்ணன் கூறியது போல, “என்னை அறிவான் எவனும் இலன்.” காந்திஜியை உள்ளது உள்ளபடி அறிந்தவர்கள் ரொம்பக் குறைவு தான். எனவே ஸ்ரீ பிர்லா இந்நூலுக்கு நான் அறிந்த காந்தி என்ற பெயர் கொடுத்திருப்பது ரொம்பப் பொருத்தமானதாகும்.

காந்திஜியின் வாழ்க்கையையும் அவருடைய தத்துவங்களையும் ஸ்ரீ பிர்லா இந்நூலில் அழகாக விளக்கியிருக்கிறார்.

உதாரணமாக, “காந்திஜிக்குப் பின் அஹிம்சை நீடிக்குமா?” என்னும் கேள்விக்கு ஸ்ரீ பிர்லா சொல்லும் பதிலைக் கேளுங்கள் :

“மழை பெய்தால் எங்கும் ஜல மயமாகத் தெரிகிறது. கோடையில் எல்லாம் வறண்டு போய் விடுகிறது. அதனால் மழையினால் பயன் இல்லை என்று கூற முடியுமா? வேனிற் காலத்தில் வயல்களில் தானியங்கள் நிரம்பியிருக்கின்றன. மழைநீர் வயல் மண்ணில் உலர்ந்து விட்டது. ஆனால் அதே நீர் தானிய மணிகளில் புகுந்து வாழ்கிறது. மகான்களின் உபதேசங்களும் இவ்விதம் தகுதியானவர்களிடையே புகுந்து அழியா அரு மருந்தாகி விடுகின்றன.”

காந்திஜியின் சிராத்த தின வெளியீடாக வெளி வந்திருக்கிறது இந்நூல். விலை ரூ. 2-8-0; விலாசம்: லலிதா விலாச புத்தகசாலை 289, லிங்க செட்டித் தெரு, ஜி. டி. சென்னை.

அல்லயன்ஸ் பிரசுரங்கள்

தித்திக்கும் தீந் தமிழில் சைவத்தையும் தமிழையும் வளர்த்த பெரியார்களில் ஒருவராகிய ஸ்ரீ மாணிக்க வாசகப் பெருமான் தரிசித்த பதின்மூன்று தமிழ்நாட்டுத் திருக் கோயில்களை ஸ்ரீ மணிவாசகப் பெருமானுடைய ‘அடிச்சுவட்’டில் சென்று தரிசித்த தம்முடைய அனுபவத்தை ஸ்ரீ. சிவபாத சுந்தரம் எழுதியிருக்கிறார்.

ஆசிரியர் மாணிக்கவாசகருடைய காலத்துக்கு நம்மை அழைத்துக் கொண்டுபோய், அந்தக் காலத்தில் தமிழ்நாடு இருந்த நிலைமையையும் மக்கள் வாழ்ந்த வாழ்க்கையையும் நம் கண் முன்னாலே கொண்டு வந்து காட்டுகிறார். அந்தந்த ஸ்தலத்தில் உள்ள கோவில் படம், அதைப் பற்றிய புராண வரலாறு, அத்துடன் மாணிக்கவாசகருடைய வாழ்க்கை வரலாறு — முதலியன இந்நூலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

மணிவாசகப் பெருமானுடைய ‘அடிச்சுவட்டி’லே போய், தமிழ்நாட்டுத் திருக் கோயில்களைத் தரிசிக்கக் கூடிய ஓய்வோ, வசதியோ கிடைக்காதவர்கள் ஸ்ரீ சிவபாத சுந்தரத்தின் ‘அடிச்சுவட்’டிலே சென்று, தரிசித்து மகிழ்வதற்கு இந்நூல் ரொம்ப உதவியாக இருக்கும். விலை ரூ. 5—0—0.

* * *

மணிவாசகப் பெருமானைப் போலத் தீந்தமிழில் வைணவத்தையும் தமிழையும் வளர்த்த பக்தமணிகளிலே, ‘விஷ்ணு சித்தர்’ என்றும் ‘வில்லிபுத்தூர் ஆழ்வார்’ என்றும் அழைக்கப்படும் பெரியாழ்வாரும் ஒருவர். அழகுத் தெய்வமான வேய்ங் குழல் ஊதும் பாலகோபாலனுடைய எல்லையற்ற பேரழகை எத்தனை எத்தனை வகையில் எல்லாம் கவிதையாகப் புனைந்து அழகு பார்த்து மகிழ முடியுமோ, அப்படியெல்லாம் கண்டு மகிழ்ந்து, தமிழுக்கே ஒரு தனிச் சிறப்பைக் கொடுத்த பெருமை பெரியாழ்வாருக்கு உரியதாகும்.

இத்தகைய பக்தமணியையும் கவிசிரேஷ்டரையும் தமிழ் மக்கள் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். அந்த அரும்பணியை பி. ஸ்ரீ செய்திருக்கிறார். அறிஞர் பி. ஸ்ரீ. இந்நூலில் பெரியாழ்வாருடைய வாழ்க்கை வரலாற்றையும் அவருடைய கவிதைகளையும் வெகு ரசமாக ஆராய்ந்துள்ளார். விலை ரூ. 3—0—0.

வைரத்தோடு

◇ ஸ்ரீ: ரங்கராஜன் ◇

ஆறுமுகம் ரொம்ப யோசித்துப் பார்த்துக் கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தான். அந்த முடிவு என்னவென்றால், எப்படியும் தன் மனைவி தேவானைக்கு கேவலம் ஒரு வெள்ளைத் தோடாவது வாங்கிக் கொடுத்து விட வேண்டும் என்பது தான்.

தேவானை கறுப்பல்ல, நல்ல அழகி. செக்கச் செவேலென்ற அவள் முகத்துக்கு வைரத் தோட்டை விட சிவப்புத் தோடுதான் நன்றாக இருந்தது. அந்தத் தோட்டைத்தான் அவள் அது வரை அணிந்து கொண்டிருந்தாள். ஆனால் ஊரிலுள்ள அத்தனை பெண் தெய்வங்களும் வைரத்தோடோ அல்லது வெள்ளைத் தோடோ அணிந்து கொண்டிருப்பதைப் பார்க்கும் போது, தானும் அம்மாதிரி ஏதாவது ஒன்றை வாங்கிக் கொள்ள வேண்டும் என்று விரும்பினாள். அவள் அப்படி திடீரென்று விரும்பியதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. மதுரையில் ஆறுமுகத்தினுடைய தமக்கை பெண்ணுக்குக் கல்யாணம் நடந்தது. கல்யாணத்துக்கு ஆறுமுகமும் தேவானையும் போயிருந்தார்கள். ஆறுமுகத்தின் தமக்கை சண்பகம் பெரிய பணக்காரி. அந்த அம்மாள் வெள்ளிக் கால் ரூபாய் கற்றளவுள்ள வைரத் தோட்டைக் காதில் அணிந்து கொண்டு முகத்தைக் குலுக்கிக் குலுக்கிப் பேசுவதை தேவானை நன்றாகக் கவனித்தாள். அது சமீபத்தில் வாங்கப்பட்டதாகத் தோன்றியது. அதைப் போலத் தனக்கும் ஒன்று கிடைத்தால் எப்படியிருக்கும் என்று நினைத்துப் பார்த்தாள்.

அன்று சாயங்காலம் அவள் சண்பகத்தைப் பார்த்து, "அக்கா! இது என்ன விலை? நன்றாக இருக்கிறதே! இதுமாதிரி நானும் ஒன்று வாங்கலாம் என்று நினைக்கிறேன்" என்றாள்.

"போடி பைத்தியக்காரி! இது வைரத் தோடல்லவா? இரண்டாயிரத்து நூறு ரூபாய். கட்டுக்கூலி மட்டும் நூறு ரூபாய் கொடுத்திருக்கிறேன்" என்று சொல்லி விட்டு முகத்தை ஒரு குலுக்குக் குலுக்கினாள்.

தேவானைக்கு அவமானமாகப் போய் விட்டது. "அக்கா, தெரியாமல் கேட்டு விட்டேன். உங்கள் காதில் உள்ளது வைரம் என்று எனக்குத் தெரியாது. தெரிந்தால் கேட்டிருப்பேனா? வைரத்தோடு போட்டுக் கொள்வதற்கு எனக்கு யோக்யதை ஏது?" என்று குத்தலாகப் பதில் சொல்லி விட்டு அன்று இரவே கணவனுடன் கும்பகோணத்துக்குத் திரும்பி வந்து விட்டாள்.

என்ன ஆனாலும் சரி; இரண்டாயிரம் ரூபாய் இல்லா விட்டாலும் ஆயிரம் ரூபாய் போட்டாவது ஒரு வைரத்தோடு வாங்கி விட வேண்டும் என்ற எண்ணம் தேவானையின் மனத்தில் வேர் ஊன்றி விட்டது. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கணமும் அதற்காகத் தன் கணவனை நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள்.


"**பெண்கள்பால் வைத்த நேசம் பிழைப்பரோ சிறியோர் பெற்றால்**" என்று கம்பர் கூறியபடி ஆறுமுகம் பவுன் பதினேழு ரூபாய் விலைக்கு வாங்கிச் செய்த தங்க நகைகளை அறுபத்து நான்கு ரூபாய் விதம் விற்றான். இப்படியும் அப்படியுமாகப் பொட்டும் பொடிசுமாக ஆயிரம் ரூபாய் சேர்ந்து விட்டது. இனி வைரத்தோடு வாங்குவதற்கு என்ன தடை?

அன்று சாயங்காலம் ஆறுமுகம் வீட்டுக்குத் திரும்பியபோது, தேவானை அவனை ஆவலே உருவாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

"வைரத்தோடு எங்கே?" என்று கேட்டாள்.

ஆறுமுகம் அவளிடம் தோடுகளைக் கொடுத்தான். மின்சார வெளிச்சத்தில், தோடுகள் 'பளீர் பளீர்' என்று மின்னின.

"நான் பயந்து விட்டேன். நீங்கள் ரொம்ப சிரமப்பட்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். இருந்தாலும் எப்படியோ வாங்கி வந்து விட்டீர்களே! நாம் எப்பொழுது மறுபடியும் மதுரைக்குப் போவது?" என்று சொல்லிக் கொண்டே கைகளை நீட்டிக் கம்மலை வாங்கிக்கொண்டாள். கம்மல் அவள் காதிற்கு எடுப்பாக இருந்தது. கண்ணாடியில் தன் முகத்தை ஒரு தரம் பார்த்துக் கொண்டாள். அவள் அடைந்த ஆனந்தம் எல்லை மீறி நின்றது. அவள் தன் கணவனைப் பார்த்தாள். அதில் பிரேமையும் நன்றியறிதலும் கலந்து நின்றது.



ஆனால் ஏதோ ஒன்று மாத்திரம் அவனுடைய மனதைக் 'கருக்' 'கருக்' கென்று குத்திக் கொண்டேயிருந்தது.

அவள் அடைந்த ஆனந்தத்துக்கு தான் எள்ளளவும் பாத்தியனல்ல என்பதை நினைக்கும்போது அவன் துணுக்குற்றான்.

அன்று வெள்ளிக்கிழமை. தேவானை எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக வைரக் கம்மலைக் கழற்றி அலமாரியில் வைத்துப் பூட்டி யிருந்தாள். ஆறுமுகம் வாசல் பக்கத்து அறையில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான். வாசலில் வண்டி ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து அவன் தமக்கை சண்பகம் இறங்கினாள். ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த ஆறுமுகம், "அக்கா, வா!" என்று கூவிக் கொண்டே வாசலுக்கு ஓடினான். வண்டிக்காரன் சாமான்களை உள்ளே கொண்டுவந்து வைத்தான். தன் நாத்தனாரிடம், தான் வைரத்தோடு வாங்கிய வைபவத்தைச் சொல்லிப் பெருமைப்பட தேவானைக்கு ஆசை. அவள் அலமாரியைத் திறந்து வைரத் தோடுகளை எடுத்துக் காட்டினாள். சண்பகம் ஒரு முறை தோடுகளைப் பார்த்தாள். "நன்றாக இருக்கிறது. வைரத்தோடு வைரத்தோடுதான்" என்றாள் அவள்.

"ஆயிரத்து இருநூறு ரூபாய். போன வாரம்தான் வாங்கினோம். 'வைரத்தோடு இப்பொழுது எதற்கு? நமக்கு அவ்வளவுக்கு யோக்யதை வேண்டாமா?' என்று நான் எவ்வளவோ சொன்னேன். உங்கள் தம்பிதான் பிடிவாதமாக ஒற்றைக் காலில் நின்று வாங்கிக்கொண்டு வந்து விட்டார்!" என்றாள் தேவானை.

சண்பகம் எத்தனையோ வைரங்களைப் பார்த்தவள். நிஜ வைரத்துக்கும், போலி வைரத்துக்கும் அவள் வித்தியாசம் அறியாதவளா! "நீ அதிர்ஷ்டக்காரி. நீ மதுரைக்கு வந்தபோது, நான் ஏதோ புத்தி தவறிச் சொல்லி விட்டேன். அதை நீ மனதில் வைத்துக் கொள்ளாதே" என்றாள்.

தேவானை "என்னமோ நீங்கள் அப்படிச் சொன்னதால் தான் இவர் இந்த வைரத்தோடு வாங்கினார்" என்று சொல்ல நினைத்தாள். ஆனால் அவள் சொல்லவில்லை.

அன்று தை வெள்ளிக்கிழமையானதால் சண்பகமும் எண்ணெய் தேய்த்துக் கொண்டாள். அப்போது அவள் தன்னுடைய தோடுகளை அலமாரியில் வைத்து விட்டு, பின்பு சாயங்காலம் மீண்டும் அணிந்து கொண்டாள். அடுத்த நாள் தேவானைக்கு என்ன தோன்றிற்றோ, "அக்கா! நீங்கள் தான் வந்திருக்கிறீர்களே, கடைத் தெருவுக்குப் போய் என்னுடைய தோடு என்ன விலை பெறும் என்று விசாரித்து விட்டு வரலாம், வருகிறீர்களா?" என்று தன் நாத்தனாரைக் கேட்டாள்.

"அதற்கென்ன! போய் வருவோமே" என்றாள் சண்பகம். இருவரும் கடைத் தெருவுக்குப் போனார்கள். கடைக்காரச் செட்டியார் தேவானையினுடைய தோட்டைப் பார்த்து விட்டு, "ஆயிரத்தைந் நூறு ரூபாய்க்கு வாங்கி யிருப்பீர்கள். நல்ல ஜாதி வைரம். தோஷம் ஒன்று மில்லை" என்று சொல்லிக் கொடுத்தார்.

"உங்களுடைய தோட்டையும் காட்டுங்களேன், அக்கா!" என்றாள் தேவானை சண்பகத்தைப் பார்த்து.

சண்பகம் ஏனோ அதற்குச் சம்மதிக்க வில்லை. இரண்டொரு நாள் கழித்து அவள் ஊருக்குப் புறப்பட்டுப் போனாள். போகும்போது அவள் தன் தம்பியைத் தனியாகக் கூப்பிட்டு, "ஏண்டா ஆறுமுகம்! உன்னை யார் இந்தக் காரியம் செய்யச் சொன்னது? நான் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி உன்னைக் கேட்டேனா? உன் ஆயிரம் ரூபாய் வந்துதான் என் குடும்பம் நடக்க வேண்டுமா? எதற்காக அவள் நகைகள் எல்லாவற்றையும் விற்று எனக்குப் பணத்தை அனுப்பி யிருக்கிறாய்? அவளுடைய கழுத்தும் கையும் சூனியமாக இருக்கிறது. அதோடு 'வைரத்தோடு' என்று சொல்லி அவளை ஏமாற்றி யிருக்கிறாய். போனது போகட்டும். உன் மனைவி காதில் இப்பொழுது இருப்பது நிஜ வைரத்தோடு. அதை ஏமாந்து போய் விற்றுவிடாதே!" என்று சொல்லிக் கண்டித்தாள்.

"வைரமா? அப்படி என்றால் உன்னுடைய—"

"ஆம். என் வைரத் தோடுதான் அவள் காதில் இருப்பது. ஜாக்கிரதையாக வைத்துக் கொள்" என்று சொல்லிக் கொண்டிருக்கையில் வண்டிக்காரன் ரயிலுக்கு நேரமாகி விட்டதை ஞாபகப்படுத்தினான்.

"ஆறுமுகம், நான் வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே அவள் வண்டியில் ஏறிக்கொண்டாள். ஆறுமுகம் மெய் மறந்து நின்றான்.

அவ்வளவு சிறியவையா?

சிறிய இந்திய சமஸ்தானங்களைப் பற்றி ஒரு பிரிட்டிஷ் எழுத்தாளர் தம்முடைய புத்தகத்தில் கூறுவதாவது:-

"இந்தியாவில் உள்ள சில சிறிய சமஸ்தானங்கள் மீது மழை காலத்தில் 'பூட்ஸ்' காலுடன் நடந்து போகக் கூடாது. ஏனென்றால், அந்த சமஸ்தானங்கள் நம்முடைய 'பூட்ஸ்' காலுடன் ஒட்டிக் கொண்டு அந்நாளும் வந்து விடலாம்!"

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.

208. மதியை முட்டப் போகும் மாளிகை!

கடவுள் வாழ்த்து

சமுத்திரக் கரையை ஒட்டி ஒரு சிறு குட்டம். மழை காலத்தில் அமோகமான மழை பெய்ததால் மேட்டு நிலங்களிலிருந்து சிறு சிறு ஓடைகளாகத் தண்ணீர் ஓடி வந்து குட்டத்தை நிறைத்து விட்டது. மேட்டு நிலம் எல்லாம் ஒரே செம்மண். வந்த தண்ணீரும் ஒரே சிவப்பாய்க் கொழ கொழ என்றிருந்தது.

மழை நின்று விட்டது. சமுத்திரத்து உப்பு கொஞ்சம் கலந்தது தண்ணீரில். உப்பு கலந்த காரணத்தால் கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீர் தெளிய ஆரம்பித்தது.

கடல்க் காற்றும் நிலக் காற்றும் தினந்தோறும் மாறி மாறி வேகங் கொண்டு வீசின. தெளிந்து வந்த தண்ணீரில் சலனம் ஏற்பட்டது. கடைசியில் தண்ணீர் முழுவதும் ஸ்படிகம் போல்த் தெளிந்து விட்டது. மலைகளிலுள்ள சுனைகளின் தண்ணீர் எப்படித் தெளிந்திருக்குமோ அப்படியே தெளிந்திருந்தது.

இதில் ஒரு விசேஷம்: குட்டத்துத் தளத்தில் பலவிதமான உருவத்தோடு பீடங்கள் அமைந்திருந்தன. சில சதுரமாய் ஒழுங்குபட்டு நின்றன. சில முக்கோண வடிவில் நின்றன. எல்லாம் செம் மண்ணினாலேயே அமைந்தவைதான். ஏதோ கொத்து வேலை செய்பவர்கள் கரண்டி, மட்டப் பலகை முதலிய கருவிகளைக் கொண்டு பீடங்களைச் செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்த பீடங்களின் மேல்தான் தண்ணீர் வந்து பெருகி விட்டது என்று சொல்லத் தோன்றியது.

உண்மையில் கொத்தனாரும் வரவில்லை; மணியாகப் பலகையும் வரவில்லை, எல்லாம் கடல்க் காற்றும் நிலக்காற்றும் சேர்ந்து செய்த சிற்பங்கள் தான். தண்ணீரில் எத்தனை எத்தனையோ விதத்தில் அலைகளும், சுழல்களும், ஓட்டங்களும் நிகழ்ந்தன. அவைகள் எல்லாம் சேர்ந்து தெளிந்து வந்த தண்ணீரில் கரைந்து நின்ற செம்மண்ணை அப்படி அப்படியே ஒதுங்கி நிற்கச் செய்து விட்டன.

குட்டத்தின் கரையில் நின்று தண்ணீரின் தெளிவையும், அதனுள் அமைந்து நின்ற பீடங்களின் அழகையும் பார்த்து அனுபவித்துக் கொண்டிருந்தோம். அந்த வேளை ஒரு முரட்டு எருமை ஓடி வந்தது. குட்டத்தில் பாய்ந்தது. பாய்ந்த இடத்திலுள்ள சில பீடங்கள் அழிந்து போய் விட்டன. அவைகள் மிகவும் மிருதுவான மண்ணால் அமைந்திருந்ததால் அப்படியே தண்ணீரில் கரைந்து போய் விட்டன.

எருமைக்கு உத்ஸாகம் உண்டாய் விட்டது. அப்படியும் இப்படியுமாகப் பாய்ந்தது. பீடங்கள் எல்லாம் தண்ணீரில் கரைந்து விட்டன; மாய மாய்ப் போய்விட்டன.

தண்ணீர் வேறு, மண் வேறு என்று சொல்ல முடியாதபடி கலங்கி விட்டது குட்டம்.

* * *

இந்தக் காட்சியை மனசில் வைத்துக் கொண்டு ஜடப்பொருளின் தத்துவத்தைப் பார்க்கலாம்:

எத்தனையோ வஸ்துக்களை நாம் பார்க்கிறோம். கல்லைப் போல்க் கடினமான வஸ்துக்கள் (ஒன்று),—நீரைப் போல நெகிழ்ந்த வஸ்துக்கள்

(இரண்டு),—**கனலை** போன்ற கண்ணுக்குப் புலனாகும் புகை, மேகம் முதலான வஸ்துக்கள் (மூன்று),—நம் மீது வீசும் **காற்றைப்** போன்ற கண்ணுக்குப் புலனாகாத வாயுக்கள் (நான்கு) இந்த நான்கு வகையான வஸ்துக்கள் போக—**ஆகாயம்,** அதாவது பேரண்டம் முழுவதும் வியாபித்திருக்கிற அதிநுட்பமான அசைவற்ற வஸ்து (ஐந்து).

இந்த ஐந்து விதமான வஸ்துக்களையும் **பஞ்ச பூதங்கள்** என்றார்கள் முன்னோர்கள்.

இவற்றை ஆராய்ந்து பார்க்கும்போது அவற்றினுள் பேதமே இல்லை என்றும், பேதம் என்று தோற்றுவதற்குக் காரணம், எங்குமாய் எல்லாமாயுள்ள பரம்பொருளின் **மனசில் தோன்றுகிற பேத உருவங்கள் தான்** என்ற முடிவுக்கு வர வேண்டும். எத்தனையோ வேறுபாடுகளோடு ஜடப் பொருள்கள் தோன்றினாலும், பரம்பொருளோடு ஒன்றிப் பார்க்கும் ஞானிகளுக்கு **பேதமற்ற ஒரே வஸ்துவாகத் தான்** தோன்றும். அதாவது: கடவுளின் சன்னிதியில் பேதப்பட்ட வஸ்துக்கள் எல்லாம் எருமை பாய்ந்து பீடங்கள் கரைந்து தண்ணீரில் கலங்கிப்போனதுபோல் கலங்கிவிடும்.

• • •

எல்லாப் பொருள்களிலும் இருப்பது போல் ராமனிடத்திலும் கடவுள் தத்துவம் அமைந்திருக்கிறது.

ஆகவே, கையில் வில்லையெடுத்து இலங்கையில்ப் போய் போர் செய்தது அந்தக் கடவுள் தான்:

இப்படி யார் பேசுகிறார்கள்! வேதத்தின் முடிவான பொருளைக் கண்ட ஞானிகள் தான்; ஏதோ சாமானிய மக்கள் அல்ல. இனி:

• • •

காற்றையும் கல்லையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அமைப்பில் ஒன்றுக்கொன்று வெகு தூரத்தில் இருப்பதாகத் தோன்றும். காற்றானது கண்ணுக்குத் தெரியாத மெல்லிய பொருள். கல்லானது மிகவும் கடினமான பொருள். இவைகளின் வித்தியாசத்தைப் பார்த்தோம்.

கடினமான பொருளைப் பார்த்தால் எத்தனை எத்தனையோ விதமாய் வேறுபட்டிருக்கப் பார்க்கிறோம். கல், இரும்பு, பொன், வெள்ளி, மரம், எலும்பு இப்படி எண்ண முடியாதபடி வேறுபாடுகள் பெருத்திருக்கின்றன. இத்தனை வேறுபாடும் **உண்மையில்** வேறு பாடல்ல என்று ஞானிகள் **கண்ணுக்குத்** தோன்றுகின்றன. நம்புவது கஷ்டந்தான். இனி ஒரு விஷயம்.

• • •

மங்கிய இருட்டில் மனிதன் ஒருவன் நடந்து வருகிறான். வரும்போது நடுப் பாதையில் ஸர்ப்பம் ஒன்று கிடப்பதைப் பார்க்கிறான். அப்படியே நின்று விடுகிறான். அது படத்தைத் தூக்குகிறது. வாலை ஆட்டுகிறது. அப்படியே பயந்து நின்று விடுகிறான் மனிதன்.

அந்த வேளை பின்னாலிருந்து வேறொரு ஆசாமி வருகிறான். பக்கத்தில் வந்தான், மேலும் நடந்து போகப் பார்க்கிறான். முந்தி வந்த ஆசாமி அவனை நிறுத்தி, "அதோ ஸர்ப்பம் இருக்கிறது" என்று சொல்லுகிறான்.

அவனும் அப்படியே நின்று விடுகிறான். கையில் இருந்த மின்சார விளக்கின் (எலெக்ட்ரிக் டார்ச்) ஒளி ஸர்ப்பத்தின்மேல் விழும்படியாகக் காட்டுகிறான். என்ன தென்பட்டது! சருகாய் வாடிய பூமாலை ஒன்று காற்றில் இப்படியும் அப்படியும் அசைவதாகத் தெரிந்தது.

முந்தி வந்தவனுக்கு வியப்பாய்ப் போய்விட்டது. எப்படி இந்தச் சருகாய்ப் போன மாலையை (அலங்கலை) ஸர்ப்பம் என்று எண்ணினோம் என்று சொல்ல முடியவில்லை. சரி.

அதேபோல் வேறுபட்ட ஜடப் பொருள்கள் பேதமற்ற ஒரே வஸ்துத் தான் — என்று ஞானிகள் காணும் போது முகாந்தரம் சொல்ல முடியாது தான்! ஆனாலும் ஒன்றாகக் கண்ட காட்சியே காட்சி.

அலங்கலில் தோன்றும்பொய்ம் மை
அரவெனப், பூதம்ஐந் தும்
விலங்கிய விகாரப்பாட் டின்,
வேறுபா டுற்ற வீக் கம்,

கலங்குவ(து) எவரைக்கண் டால்,
அவரன்றே கைவில்ஏந் தி
இலங்கையில் பொருதாரென் பர்
மறைகளுக்(கு) இறுதியா வார்.

[அலங்கலில் தோன்றும் பொய்ம்மை அரவென: சருகாய்ப் போன மாலையில் காணும் ஸர்ப்பத்தைப் போல—ஸர்ப்பம் இல்லாமலே போகிற மாதிரி: பூதம் ஐந்தும் விலங்கிய விகாரப் பாட்டின்: ஐந்து பூதங்களும் பேதப்பட்டிருத்தலில் எவ்வளவோ எட்டி விலகியிருக்கின்றன (கல்லும் காற்றும் போல); வேறுபாடுற்ற வீக்கம்: அந்த பேதத்தில் ஒவ்வொரு பூதத்திலுமே எத்தனை எத்தனையோ விதமாக வேறுபாடுகள் இருக்கின்றன. (வீக்கம்: மிகுதி) கலங்குவது எவரைக் கண்டால்: யாருடைய சன்னிதியில் வேறுபாடுள்ள வஸ்து எல்லாம் கரைந்து பரம்பொருளோடு ஒன்றெனக் கலங்கி விடுகிறதோ; அவர் அன்றே கைவில் ஏந்தி இலங்கையில் பொருதார் என்பர்: அவரே தான், அதாவது பரம்பொருள் தானே கையில் வில்லை எடுத்து இலங்கையில் போர் செய்தார் என்று சொல்லுவார்கள்—யார் சொல்லுவார்கள்; மறைகளுக்கு இறுதியாவார்: வேதங்களில் சொல்லியுள்ள இறுதியான பொருளைக் கண்டு அனுபவித்த ஞானிகள்.]

குறிப்பு:—ஒரே ஒரு தத்துவந்தான் இந்தப் பேரண்டத்தில் இருக்கிறது. அதாவது கடவுள் தத்துவம். அந்தத் தத்துவந்தானே எல்லாமாய் உருவெடுக்கிறது. பக்தன் இதயத்தில் ராமனாகவும் உருவெடுக்கிறது. ஆகவே பக்தனுக்குத் தன் உள்ளத்திலுள்ள ராமபிரானே எங்கும் நிறைந்த கடவுளாய் விளங்குகிறான்.

அரியதொரு உண்மையை அனுபவித்து அழகாய்ப் பாடுகிறார் கவிஞர்.

* . *

கதைத் தொடர்

ராமன் பஞ்சவடியில் இருக்கும் போது ராவணன் வந்து சீதையை இலங்கைக்குத் தூக்கிக் கொண்டு போய் விட்டான். யாரோ அரக்கர்கள் வந்து மாயம் செய்து தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள் என்று ராமனும் லக்ஷ்மணனும் அனுமானித்தார்கள். ஆனால் யார், எவ்விடத்துக்குக் கொண்டு போயிருப்பார்கள் என்று ஊகிக்க முடியவில்லை.

ஜடாயுவைக் கண்டார்கள். யாரோ ஒரு பகைவனது வாளால் இறக்கை அறுபட்டு, இரத்தம் சிந்தி, உயிர் போகிற தறுவாயிலிருந்தான் அவன்.

ஜடாயுவுக்கு ஈமக்கடன் எல்லாம் செய்து விட்டு கிஷ்கிந்தையை நோக்கி வந்தார்கள் ராம லக்ஷ்மணர்கள். அங்கே சுக்ரீவன் அனுமன் இவர்களது நட்புக் கிடைத்தது.

சுக்ரீவன் பொருட்டாக வாலியை ஸம்ஹாரம் செய்ய நேர்ந்தது.

இனிச் செய்யவேண்டிய காரியம் சீதையைத் தேடுதல் தான். வானர அரசன், வானர வீரர்கள், வானர சைனியம் எல்லாம் ராமனுக்குத் துணையாக நிற்கின்றன. வானர வீரர்களை எட்டுத் திசைகளுக்குமே அனுப்பியாகி விட்டது.

இலங்கைக்கு ஆள் அனுப்ப வேண்டும். சகல விதத்திலும், அறிவிலும் பண்பாட்டிலும் அன்பிலும் சிறந்த அனுமனையே இலங்கைக்கு அனுப்புகிறான் ராமன்.

அனுமன் இலங்கையை நோக்கிப் புறப்படுவதிலிருந்து சுந்தர காண்டம் ஆரம்பிக்கிறது.

இலங்கைக்குப் போவதற்குக் கடலைக் கடக்க வேண்டும். அனுமன் லகுவாய்க் கடந்து விட்டான் — தாண்டி விட்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.

இலங்கை வந்து சேர்ந்ததும் பட்டணத்துக்குள் புகுந்தான். நேரம் மாலை: பட்டணம் வெகு அழகாய் இருந்தது. கட்டிடங்கள் எங்கும் காணாத மாட மாளிகைகளாகவும் கூட கோபுரங்களாகவும் விளங்கின. பல விதமான வர்ணப் பூச்சுகளும், பொன் நிறமான பூச்சுகளும் இருந்தன. பலவகைப் பட்ட வர்ணக் கற்களை அடுக்கி சில மாளிகைகள் கட்டப்பட்டிருந்தன. அலங்கார ரேகைகளும் கட்டிடங்களுக்கு இழைத்திருந்தன. பின்னலைப் பிடித்து இழுத்து வைத்த மாதிரி யிருந்தன ரேகைகள். சில கட்டிடங்களுக்கு வெள்ளி வர்ணப் பூச்சுப் பூசி யிருந்தது. அனுமன் பார்த்து ஒரே அதிசயத்தில் நின்றான்.

மாளிகை ஒன்றை ஏறிட்டுப் பார்த்தான். உச்சியில் பிறைச் சந்திரன்

பிரகாசித்துக் கொண்டிருந்தது. சந்திரனைத் தொட்டுக் கொண்டு நின்றது போலிருந்தது உப்பரிகை. மலைப் பிரதேசமாகையால் ஒரு பெரிய மேகம் வந்து மாளிகையை நாலா புறமும் சுற்றி நின்றது. மேகத்துக்குக் கீழேயும் உப்பரிகைகள், மேலேயும் உப்பரிகைகள். அப்படியானால் மாளிகைக்கு எத்தனை உப்பரிகைகள்! அதிசயத்துக்குக் கேட்பானேன்!

சந்தம்

தானன்ன தன்னன
தன்னன தன் ன

பொன்கொண்(டு)அ மைத்த. மணி-
யைக்கொடுச மைத் த.
மின்கொண்(டு)இ ழைத்த. வெயி
லைக்கொடுபொ தித் த.
என்கொண்(டு)இ யற்றிய
எனத்தெரிகி லா து.
வன்கொண்டல் விட்டு. மதி
முட்டுவன மா டம்.

[பொன் கொண்டு அமைத்த: பொன்னினாலேதான் கட்டியதோ; மணியைக் கொடு சமைத்த: பெரிய பெரிய மாணிக்கக் கற்களை அல்லது மரகதக் கற்களை அடுக்கிக் கட்டியதோ; மின்கொண்டு இழைத்த: விளிம்புகளுக்கும் ரேகைகளுக்கும் மின்னலையே கொண்டு வந்து இழுத்துக் கட்டியிருக்கிறார்களோ; வெயிலைக் கொடு பொதிந்த: வெயிலைத் தானே குழைத்துப் பூசியிருக்கிறார்களோ; என்கொண்டு இழைத்த எனத் தெரிகிலாது: என்னத்தைக் கொண்டுதான் கட்டியிருக்கிறார்களோ என்று கண்டு கொள்ள முடியாத மாளிகை; வன் கொண்டல் விட்டு: ஒரு பெரிய மேகமானது இழிந்து இடம் விட்டு நீங்க; மதிமுட்டுவன மாடம்: மேலே எழுந்து சந்திரனைப் போய் முட்டுவதற்காக உயரும் மாளிகை. மேக சஞ்சாரத்தினால் அப்படி உயருவது போலத் தோன்றுவது இயல்பு.]

அனுமன் போன மாலை வேளை மாடத்தின் உச்சியில் பிறைச் சந்திரன் தோன்றியது. கொஞ்சம் கீழே ஒரு மேகம் அந்த மாடத்தை வளைந்து கிடந்தது என்பதைக் குறிக்கும் பாடல். அதிசய பாவம் அப்படியே இந்தக் கவியில் வந்து விட்டது.

அஞ்சுகத்தின் ஆசை

எஸ்.ஆர்.வி

அன்று வழக்கத்தை விட எனக்கு உபசாரம் பலமாயிருந்தது. ஆபீஸிலிருந்து வந்து சட்டையைக் கழற்றும்போது, அருகில் நின்று அதை வாங்கி 'கோட் ஸ்டாண்'டில் மாட்டிவிட்டு, நான் கைகால் கழுவிக் கொண்டு வருவதற்குள் காபியைக் கொண்டு வந்து மேஜைமேல் வைத்தாள் என் மனைவி அஞ்சுகம். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

கல்யாணமான புதிதில் ஒரு வருஷ காலம் வரை இந்தத் தோரணைகள் எல்லாம் மும்முரமாக நடந்து வந்தன. மறுபடியும் நான்கு வருஷங்களுக்குப் பிறகு இன்றுதான் அஞ்சுகம் அதை மீண்டும் ஆரம்பித்தாள். இது எனக்குப் பெரும் ஆச்சரியத்தை உண்டு பண்ணியது. தவிர, ஏதோ ஒரு முக்கியமான காரியத்தைச் சாதித்துக் கொள்ள அடிப்போடுகிறாள் என்பது பளிச்சென்று எனக்குத் தெரிந்து விட்டது. ஆனால், அவளை ஒன்றும் நான் கேட்கவில்லை. தானாகவே சொல்லட்டுமே!

அவள் அடிக்கடி புன்னகையை வலிய வரவழைத்துக் கொண்டது தெரிந்தது. குழையக் குழையப் பேசினாள். பெண்களுக்குள்ள சில பிரத்தியேகமான சாகச உணர்ச்சிகள் எனக்கு அப்போது ஞாபகத்துக்கு வந்தன.

ஒரு ஐந்து நிமிஷங்கள் வரை இந்த நிலைமை நீடித்தது. பிறகு, 'விஷயம் வெளியாகிறபோது வெளியாகட்டும்' என்று நான் என் போக்கில் காகிதக்கட்டை எடுத்து வைத்துக் கொண்டு எழுத ஆரம்பித்தேன்.

"ஊரில் ஓரேயடியாக அமளிப் படுகிறதே!" என்றாள் அஞ்சுகம்.

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"என்ன, என்ன?" என்று கேட்டேன்.

"'தர்ம ராஜ்யம்' சினிமாவைப் பற்றித்தான்" என்று சற்று மெதுவாகவே சொல்லிவிட்டு அவள் என் முகக்குறிப்பை ஆவலுடன் நோக்கினாள்.

"பூ! என்னவோ என்று பயந்து போனேன். அவ்வளவுதானே! அது நம்மை ஒன்றும் செய்துவிடாது. அதற்காக நீ கவலைப் படாதே" என்று சொல்லி விட்டு மறுபடியும் எழுதுவதில் மூழ்கினேன்.

இந்தப் பதில் அவளுக்குப் பெரும் ஏமாற்றத்தை உண்டாக்கிவிட்டது.

"நேற்று பாக்கியம் வீட்டில் எல்லோரும் போய்விட்டு வந்தார்கள். ரொம்ப நன்றாயிருக்கிறதாம்" என்றாள்.

"அதற்கென்ன பண்ணச் சொல்லுகிறாய்?" என்று சற்றுக் கடுமையான குரலில் கேட்டேன் நான்.

"கையிலே பணம் இருக்கிறபோது என்னை அழைத்துக்கொண்டு போகிறீர்களா?" என்று கேட்டாள்.

இதை ரொம்பவும் பயந்துகொண்டுதான் கேட்டாள் என்பதை அவளுடைய குரல் காட்டியது. நான் அவளைத் திரும்பிப் பார்த்தேன். தலை குனிந்தபடி விசிறிக் காம்பை நெருடிக்கொண்டிருந்தன அவள் கை விரல்கள். அவளும் என்னைத் திரும்பிப் பார்த்தாள். கெஞ்சும் பாவத்தில் இருந்த அவள் முகம் என்னை எதிட்டுப் பார்த்ததும் மாறுதலடைந்தது. இரண்டு அடி பின்னுக்கு நகர்ந்து கொண்டாள். என் முகத் தோற்றம் அத்தனை குரூரமாக இருந்ததுபோலும்! வரவுக்கு மிஞ்சிய குடும்பச் செலவினால் திணறிக்கொண்டிருந்த எனது மன நிலை அப்போது என் முகத்தில் பிரதிபலித்துத்தான் இருக்க வேண்டும். எனவே, பார்வை ஒன்றே போதும்; வார்த்தைகள் தேவையில்லை என்ற முடிவுடன் மறுபடியும் எழுதத் தொடங்கினேன்.

அஞ்சுகம் புத்திசாலிதான். குடும்ப நிலை அறியாதவள் அல்ல. சில பேர்களைப் போல் 'தாம் - தூம்' என்று நடப்பவளுமல்ல. நினைத்தபோது நாடகம், சினிமா முதலியவைகளுக்குப் போகவேண்டுமென்று அடம் பிடிப்பதில்லை.

'ஆசை வெட்க மறியாது' என்பதற்கிணங்க அவள் மறுபடியும், "இத்தனை நாள் நான் ஏதாவது கேட்டேனா? இந்தப் படம் ரொம்ப நன்றாகயிருக்கிறது என்று எல்லோரும் சொல்லுவதால்......" என்று அரையுங் குறையுமாக நிறுத்தினாள்.

"அது சரிதான்; பணத்துக்கு எங்கே போகிறதாம்? குறைந்தது ஐந்து ரூபாயாவது வேண்டுமே" என்று சீறினேன்.

அவள் மௌனமாக உள்ளே போகத் திரும்பினாள். அதற்குள் அவளுடைய கண்களில் நீர் நிறைந்து விட்டது!

* * *

எப்போதுமே நிம்மதியற்ற என் மனதுக்கு இந்தச் சம்பவம் வேறு வாய்த்துக் கொண்டது. ஆரம்பத்திலிருந்து, அவள் அழுது கொண்டு உள்ளே சென்றதுவரை எல்லா நிகழ்ச்சிகளும் பல முறை என் மனக் கண் முன் தோன்றின. என் மனமும் கலங்கி விட்டது.

மன நிம்மதிக்காகக் கடற்கரைக்குப் போனேன். சாதாரணமாகக் கடற் காற்றும் அங்குள்ள சூழ்நிலைகளும் சிறிது இன்பத்தைக் கொடுப்பது வழக்கம். ஆனால் அன்று அந்த இடம் என் மனதில் பெருகிக் கிடந்த துக்கத்தை இன்னும் அதிகமாக்கியது. மனம் நிரம்பிய சந்தோஷத்துடன் எத்தனையோ பெண்கள் தனியாகவும் தம் புருஷர்களுடனும் அங்கே வந்திருந்தனர். எல்லையற்ற ஆனந்தத்துடன் அவர்கள் சம்பாஷித்துக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் என் உள்ளத்தை என்னவோ செய்தது. அத்தனை பேருக்கும் நடுவில் என் அஞ்சுகம் மாத்திரம் அழுது வீங்கிய முகத்துடன் அநாதை போலக் காணப்பட்டாள்.



என் மனைவியின் அபிலாஷையைப் பூர்த்தி செய்ய என்னால் இயலாமல் போய் விட்டதை நினைத்து நான் ஆத்திரப் பட்டுக் கொண்டிருந்தபோது, என் வறுமையை நான் ஒப்புக் கொள்ளாமல் அவள் வருத்தமடையும்படி பேசி விட்டது என் நினைவுக்கு வந்தது. நான் என்ன செய்ய முடியும்? என் கையில் பணம் இருந்திருந்தால் அஞ்சுகத்தைச் சினிமாவுக்கு அழைத்துக் கொண்டு போயிருக்க மாட்டேனா?

என் சிந்தனையைக் கலைக்கும் வண்ணம் என் அருகில் ஒரு குரல் கேட்டது. "என்ன ஸார், தனியாக உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார் அந்த நண்பர். அவர் என்னைப் போலவே எங்கள் ஆபீஸில் ஒரு குமாஸ்தா.

அவர் தம்முடைய கையில் ஒரு காகிதப் பொட்டணம் வைத்துக் கொண்டிருந்தார். அது என்னவாக இருக்குமென்று நான் யூகித்துக் கொண்டேன். "அது என்ன ஸார், புடவையோ?" என்று கேட்டேன். நான் தற்செயலாகத்தான் கேட்டேன். ஆனால் என் யூகம் நூற்றுக்கு நூறு பங்கு சரியாக இருக்குமென்று நினைக்கவில்லை. அது அவர் மனைவிக்காக வாங்கிய ஒரு புடவை தான்.

அவர் அதைப் பிரித்துக் காட்டிக் கொண்டிருந்த போது நான் விளையாட்டாக "நீங்க தேவலை ஸார்! உங்கள் மனைவிக்கு மாதம் ஒரு புடவை வாங்கிக் கொடுக்கிறீர்கள் போல் இருக்கிறது. என்னால் கேவலம் ஒரு சினிமாவுக்குக் கூட என் மனைவியை அழைத்துக் கொண்டு போக முடியவில்லை" என்றேன்.

உடனே அவர், "இல்லை ஸார், இந்தப் புடவை வேண்டுமென்று அவள் வெகு நாளாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். பாவம், ஆசைப்பட்டதை வாங்கிக் கொடுப்போமென்றுதான் வாங்கினேன். நாம் வாங்கிக் கொடுக்காமல் வேறு யார் ஸார் வாங்கிக் கொடுக்கப் போகிறார்கள்? பணம் இன்று வரும்; நாளை போகும். மனித வாழ்வு அநித்யம்; கண்டபோது காட்சி!" என்று சொன்னார்.

என் உள்ளத்தின் நிலையை அறிந்து அவர் கூறியது போலப் பட்டது எனக்கு. மன நிம்மதியைத் தேடிவந்த இடத்தில் எனக்கு எத்தனையோ விஷயங்கள் காத்துக் கிடந்தன. அப்போது என் மனம் ஏழு வருடங்களுக்கு முன் நடந்த ஒரு சம்பவத்தைத் தேடிச்சென்றது.

* * *

ஏழு வருஷங்களுக்கு முன் என் சிறிய தாயார் மகளுக்குக் கல்யாணம் நடந்தது. வைபவத்துக்கு நான், என் தாயார், சகோதரி ஆகிய மூவரும் சென்றோம். மாயவரத்திற்கு வடக்கே இருபது மைல் தூரத்தில் இருந்த ஒரு கிராமத்தில் கல்யாணம்.

கல்யாணம் விமரிசையாக நடந்தது. சாதாரணமாக என் சிறிய தாயார் வீட்டுக்கு நாங்கள் சென்றால் குறைந்த பட்சம் ஒரு மாத காலமாவது 'காம்ப்' போடுவது வழக்கம். அந்தத் தடவை பத்து நாட்கள் ஆனதுமே என் சகோதரி ஊருக்குப் போக வேண்டுமென்று முணு முணுக்க ஆரம்பித்தாள். எங்கள் குடும்பத்திலேயே அவள் ஒருமாதிரி. நல்லவள்; ஆனால் சில சமயம் சில விஷயங்களில் பிடிவாதம் பிடிக்கத் தொடங்கினால் அவளை யாராலும் சமாதானம் செய்யவே முடியாது.

சிதம்பரத்தில் அப்போது அவள் மனதைக் கவர்ந்த ஒரு சினிமா நடைபெற்று வந்தது. இதை மனதில் வைத்துக் கொண்டே அவள் "வரும்போது சிதம்பரம் வழியாக வந்து அந்தப் படத்தைப் பார்த்து விட்டுத்தான் வரவேண்டும்; அப்படியானால் தான் நான் கல்யாணத்துக்கு வருவேன்" என்று ஊரை விட்டுக் கிளம்பும் போதே எச்சரிக்கை செய்திருந்தாள். நான் இந்த உடன்படிக்கைக்கு ஒப்புக் கொண்டிருந்தேன்.

பத்து நாட்களானதும் திடீரென்று அவள் ஊருக்குப் போக அவசரப்பட்டாள். எனக்கு விஷயம் என்னவென்று விளங்கி விட்டது. ஆனால் அவளுடைய ஆசையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்றால் சிதம்பரம் வழியாக எங்கள் ஊருக்குப்போகவேண்டும். அதற்குப் போதிய பணம் என்னிடமில்லை. ஆகையால் வண்டி வைத்துக் கொண்டு குறுக்கு வழியாக ஊருக்குப் புறப்பட்டோம்.

வழக்கம்போல என் சகோதரி முரண்டிக் கொண்டு விட்டாள். நாங்கள் எவ்வளவோ சமாதானப்படுத்தியும் கேட்கவில்லை. வழி நெடுக அழுதுகொண்டும் முணுமுணுத்துக் கொண்டுமிருந்தாள். ஊருக்குச் சென்றதும் மறுநாளே புக்ககத்திற்குச் சென்று விட்டாள் அவள். எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை.

என் மனம் கஷ்டப்பட்டது. ஆனால் ஒரு வகையாகச் சமாதானம் செய்து கொண்டேன். மேற்படி சினிமா எங்கள் ஊருக்கு வரும்போது கட்டாயம் என் சகோதரியை அழைத்துக்கொண்டு போய் காண்பிக்கவேண்டும் என்று முடிவு செய்து கொண்டேன். ஆனால், அந்த நண்பர் 'மனித வாழ்வு அநித்யம்; கண்ட போது காட்சி' என்று சொன்னதற்கிணங்க அவள் இந்த உலகத்தை விட்டே போய்விட்டாள். கர்ப்பிணியாயிருந்த அவள் ஆஸ்பத்திரியில் பிரசவித்து பலஹீனத்தினால் உயிர் நீத்தாள். தன் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளாமலே அவள் போய்விட்டாள். இந்தச் சம்பவம் என்னைப் பெரிதும் பாதித்தது.

என் சகோதரி மங்களத்தையும் மனைவி அஞ்சுகத்தையும் மனக் கண்ணில் பார்த்தேன். ஆ, அஞ்சுகமும் நான்கு மாத கர்ப்பிணிதான்! என் மனம் ஏதேதோ நினைவு

தக்க காரணம்!

'ஹிந்த் ஸ்வராஜ்' என்ற நூலில் காந்திஜி கூறுவதாவது:

நெப்போலியன் ஆங்கிலேயர்களை 'வணிகர்கள் கூட்டம்' என்று சொன்னான். அது முற்றிலும் உண்மை. அவர்கள் எங்கும் வியாபாரத்தை முக்கிய நோக்கமாகக் கொண்டுதான் அரசாண்டு வருகிறார்கள். டிரான்ஸ்வாலில் தங்கள் வியாபாரம் செழித்தோங்குவதற்கு இடம் இல்லை என்பது தெரிந்ததும் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்த கிளாட்ஸ்டன், 'டிரான்ஸ்வாலை பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ள எங்களுக்கு நோக்கம் இல்லை' என்று சொன்னார். ஆனால் அங்கு வியாபாரத்துக்குக் கொஞ்சம் இடம் இருக்கிறது என்பது தெரிந்ததும் பிரிட்டிஷ்காரர்கள் அதனுடன் போர் தொடுத்து விட்டார்கள்.

'சந்திர மண்டலத்தில் பொன் விளைகிறதா, இல்லையா?' என்று அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் யாரையோ கேட்டாராம். அதற்கு அவர் உடனே 'ஐயா, சந்திர மண்டலத்தில் பொன் விளைவதற்கு நியாயமே இல்லை. அப்படி விளைவதாக இருந்தால், அது இதற்குள் பிரிட்டிஷ்காரர்களுடைய ஆதிபத்தியத்திற்குள் வந்திருக்குமே!' என்றாராம்.

களால் உந்தப்பட்டு நீல கொள்ளாமல் தவித்தது. அடுத்த கணம் அஞ்சுகத்தின் கெஞ்சும் முகம் என் கண்ணெதிரில் தோன்றியது. 'நாம் அல்லாமல் அவர்களுக்கு வேறு யார், ஸார்? மனித வாழ்வு அநித்யம்!' என்ற என் கண்பரின் மொழிகள் காதில் ஒலித்தன.

உடனே எழுந்தேன். மேற்படி கண்பருடைய வீட்டுக்குப் போய் அவரிடம் விஷயத்தைச் சாங்கோபாங்கமாகக் கூறிப் பத்து ரூபாய் கடன் வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்தேன்.

"அஞ்சுகம், சீக்கிரம் ஆகட்டும். இரண்டாவது காட்சி 'தர்மராஜ்யத்'துக்குப் போக வேண்டும்" என்று சிரித்தபடி சொல்லிக் கொண்டே அவள் முன் ரூபாயை நீட்டினேன். முதலில் அலட்சியமாய்க் காணப்பட்ட அவள் முகபாவம் ரூபாயைக் கண்டதும் சடக்கென மாறியது.

"யாரிடமாவது கடன் வாங்கினீர்களா இந்தச் சின்ன விஷயத்துக்காக?" என்று அவள் பரபரப்புடன் கேட்டாள்.

"அதெல்லாம் அப்புறம்! உம், நேரமாகிறது. சீக்கிரம் சாப்பாட்டை முடித்துக் கொண்டு புறப்பட வேண்டும்" என்றேன்.

அவள் கலகலவென்று சிரித்தாள்.

"அனாவசியமாகச் சாயந்திரம் நான் உங்கள் மனதைக் கஷ்டப் படுத்தி விட்டேனே! நீங்கள் வெளியில் போனபிறகு தான் தெரிந்தது: நேற்றோடு 'தர்மராஜ்யம்' முடிவடைந்து விட்டதாம். இன்றைக்கு ஏதோ ஹிந்திப்படமாம்!" என்றான்.

நான் இடி விழுந்தவன் போலானேன்.

"போனால் போகிறது போங்கள்; பத்து ரூபாய் மிச்சம்! இரண்டு வாரம் அரிசி வாங்கலாம் அந்தப் பணத்துக்கு" என்றாள் அவள்.

ஏழு வருஷங்களுக்கு முன் என் தங்கை மங்களம் சினிமாப் பார்க்க ஆசைப் பட்டதை நினைத்துக் கொண்டேன் மீண்டும். என் கண்கள் நீரைப் பொழிந்தன.

கள்வன் எழுதிய கடிதம்

எஸ். வி.

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சாம்பசிவ முதலியார் சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம் ஏதோ ஒரு நவநவேலைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அவருடைய அறைக் கதவு திறந்தது.

"யார் அது?—'ரைட்டர்' ரங்கசாமியா! என்ன விசேஷம்?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"ஒரு அதிசயம், ஸார்! ஒரு திருடன் தான் நடத்திய ஒரு 'கொள்ளை'யைப் பற்றித் தானாகவே நமக்குத் தகவல் கொடுத்துக் கடிதம் எழுதி யிருக்கிறான். அதுமட்டும் அல்ல; ஒரு கள்ள மார்க்கட்காரனைப் பற்றித் துப்பும் தெரிவித்திருக்கிறான்" என்றார் 'ரைட்டர்.'

"என்ன, துப்புத் தெரிவித்திருக்கிறானா? எங்கே, அந்தக் கடிதத்தைப் படியும்!" என்று உத்தரவிட்டார் இன்ஸ்பெக்டர்.

'ரைட்டர்' ரங்கசாமி கடிதத்தை வாசித்தார்:

"இன்ஸ்பெக்டர் எஜமானுக்கு: நேற்று நான் ஒரு வீட்டில் திருடப் போயிருந்தேன். என்ன அதிசயம்! அந்த வீட்டுக்காரன் ஒரு கள்ள மார்க்கெட் வியாபாரிபோலக் காணப் பட்டான். வீடு முழுவதும் அரிசி, சர்க்கரை மூட்டைகளும், பேல் பேலாகத் துணிமணிகளும் பதுக்கி வைத்திருந்தான். இந்தப் பஞ்ச காலத்திலே 'ரேஷன்' சாமான்களை எடுத்தால் பாவம் என்று நினைத்து, அதை நான் தொடவே இல்லை. ஆயிரம் ரூபாய் பணத்தை மட்டும் 'அபேஸ்' பண்ணிக்கொண்டு வந்துவிட்டேன். இனிமேல் அந்தக் கள்ள மார்க்கட்காரனைச் சூறையாடிப் பொதுஜனங்களைக் காப்பாற்றுவது தங்கள் பொறுப்பல்லவா?

இப்படிக்கு—பழைய 'கேடி' கந்தப்பன்."

ரங்கசாமி இந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததும், இன்ஸ்பெக்டர் கொஞ்சம் யோசித்தார். பிறகு, "ரைட்டர், இந்தக் கள்ள மார்க்கட் கேஸைப் பிடித்தால் தேவலை; ஆனால் அந்தத் திருட்டுப் பயல் வீட்டு விலாசத்தைக் கொடுக்கவில்லையே!" என்றார்.

'ரைட்டர்' அந்தக் கடிதத்தைத் திருப்பிப் பார்த்துவிட்டு, "இதோ, பின் பக்கத்தில் அந்த வீட்டின் விலாசம் இருக்கிறது, ஸார்!" என்றார்.

"எங்கே, வாசியும்!" என்றார் இன்ஸ்பெக்டர் ஆவலுடன்.

"நெ. 14, பழனியப்ப முதலி தெரு."

"என்ன நெ. 14 வீடா? பழனியப்ப முதலி தெருவா?" என்று கேட்டுவிட்டு மூர்ச்சையானார் சர்க்கிள் சுந்தரனம்.

பாவம், அதுதான் சர்க்கிள் சாம்பசிவம் சமீபத்தில் புதிதாகக் குடிபோன வீடு என்பது 'ரைட்டர்' ரங்கசாமிக்கு எப்படித் தெரியும்?



டன்லப்

ரஸ்தாப்பிடிப்பிற்கு

TRADE MARK

DCX 4

Edited. Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk Madras

கல்கி



KALKI மே 2,1948 **4** அணா

தி இந்தியன் பாங்க்
லிமிடெட்

●

தலைமை ஆபீஸ்:
"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"
வடக்கு பீச் ரோடு, மதராஸ்

●

லோகல் ஆபீஸ்:
எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி,
லஸ்சர்ச் ரோடு, மயிலாப்பூர்,
தியாகராயநகர், புரசவாக்கம்,
எழும்பூர்

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும் பட்டணங்களிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.


●

வழங்கி வாக்களிக்கப்பட்ட
மூலதனம் ரூ. 72,00,000
செலுத்தப்பட்ட
மூலதனம் ரூ. 53,00,000
ரிசர்வ் நிதி ரூ. 62,00,000

●

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கின் எந்த ஆபிஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

எஸ். கோபால அய்யர்
செக்ரடரி



சுரப்பார் சேதந்தருகிறது

பிறகும், பிரசவத்துக்குப் பிறகும், நீடித்த ஜுரங்களுக்குப் பிறகும் தலை மயிர் அதிகமாகக் கொட்டுவதுண்டு. சாதாரண ஜுரங்களுக்குப் பிறகும் மயிர் உதிர்வதுண்டு. அதிர்ச்சி ஸஹிதமான ஜுரமானாலும் மயிர் அபரிமிதமாகக் கொட்டும். சில சமயம் விடாமல் உதிர்ந்து கொண்டேயிருக்கும். எந்தக் காரணத்தால் மயிர் உதிர்ந்தபோதிலும், கேசவர்த்தினியைக் கொண்டு மயிர் உதிர்வதை நிறுத்துங்கள்.

உதிர்ந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக் கூந்தலைப் பெறுங்கள். கேசவர்த்தினியின் உதவியால் அற்ப கேசத்தை அபரிமித கேசமாக்குங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 14

(பேக் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயனசாலை
ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்

RDGD. NO. M. 4392

